ALCESTIS

(TAMIL)

BY

V. RAJAGOPALA AIYANGAR

Author of 'Greek Legends' in Tamil & 'Ivanhoe' and 'The Talisman' in Tamil

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1915

Copy Right] [Price As. 4

அன்புவல்லி

PRESENTED BY:
V. PR. PL. M.
[illegible] CHETTIAR
PAGANERI.

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

[ரெஜிஸ்தர் செய்தது] 1915 [விலை 4 அணா

PRINTED AT
THE 'CAXTON PRESS'
MADRAS.

அல்ஸஸ்டிஸ்,

என்ற

அன்புவல்லி

"கற்புடைய பெண் அமிழ்து"

முற்கூற்று

மகாவீரர்களென்றும் நாகரிகர்களென்றும் பெயர் பெற்று வாழ்ந்த பூர்வகாலத்துக் "கிரேக்கர்" களின் நாட்டிலே ஸமுத்திரஞ் சூழ்ந்த "அயோல்கால்" என்னும் ஒரு தீவிலே "ஈஸன்" என்னும் அரசன் தர்மம் தவறாமல் நீதி செலுத்தி வந்தான். அக்காலே அவனுடைய மாற்றாந் தாயின் குமாரனும் வஞ்சகம் கள்ளம் முதலிய துர்க்குணங் களுக்கு உறைவிடம் போன்றவனுமான பெலியஸ் என்னும் கொடியன் தன்னை ஒத்த பல கொடியர்களைக் கூட்டிக் கொண்டு படை திரட்டி, வந்து ஈஸனைத் துரத்திவிட்டு, அவன் பட்டத்தைப் பிடுங்கிக்கொண்டான். நாடிழந்த ஈஸன் ஜேஸனென்னும் தனது ஒரே குமாரனை அழைத்துக் கொண்டு, காடு மலைகளைக் கடந்து, வாடி மனம் மிக நொந்து, பெலியன் என்னும் மலையை அடைந்து, அயர்வினால் ஒரு குகையின் ஸமீபத்தில் படுத்துக்கொண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அக்குகையினின்றும் வந்த மிக்க இனிய கீதமொன்று அவன் காதில் விழவே, அவன் தன் புதல்வனை நோக்கி, "மைந்தா! இக்குகையில் நுழை; இங்குத்தான் இனி நீ வஸிக்கவேண்டும்; உள்ளே யாரிருக்கின்றனர் பார்த்து வா' என்றான். பன்னிரண்டு வயதுப் பாலனாயினும் ஜேஸன் மிக்க துணிகரமுள்ள வாலிபனாதலால், தகப்பன் கட்டளையிட்ட வண்ணம் இருண்ட அக்குகையினுள் அஞ்சாமல் நுழைந்து, இரண்டு யோசனை தூரம் செல்லவே, அரை முதல் தலைவரையில் மனுஷ்யனாயும் கீழே குதிரையாயும் இருந்த ஒரு விசித்திரப் பிராணியைக் கண்டான். அப்பிராணியோ நீண்ட தாடியும் சிறுத்த மூக்கும் அகன்ற கண்ணும் விசாலமான நெற்றியும் உடையதாய் விளங்க, நோக்கிய ஜேஸன் உடலில் மயிர்க்கூச்செறிய, "இவ் விசித்திரப் பிராணி ஸாமானிய ஜந்துவன்று; இது மிழற்றும் யாழொலி தேவார்ஹமாகவிருக்கிறது; இதனுடன் நாம் நட்புக்கொண்டு, இவ் வீணை வாசிக்கும் வித்தையைக் கற்கவேண்டும்" என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், அந்த நராச்வம், ஜேஸனை நோக்கி, "குமரா! உன் தந்தை ஈஸன் எங்கே? அவன் என் உள்ளே நுழையவில்லை? நான் அழைத்ததாக அவனைக் கூட்டிக் கொண்டு வா" என்றது.

கேட்ட ஜேஸன் ஆச்சரியமும் ஆனந்தமும் பொங்க, அந்த நராச்வத்தை நமஸ்கரித்து, "இதோ ஒரு நொடியில் அழைத்து வருகிறேன்" என்று திரும்பிப்போய், ஈஸனை இட்டுக் கொண்டுவந்துசேர்த்தான். "ஷிரான்" என்னும் பெயர் படைத்த அந்த நராச்வம், "நண்பா! ஈஸா! நீ ஏன் என்னண்டை வர மயங்கினாய்? ஸுக துக்கங்கள் மனுஷ்ய சரீரத்துக்கு இயல்பு தானே. என்னைவிட உனக்கு மனமொத்த மித்திரன் யார்? உனது புதல்வன் மகா வீரனாகி

உலகுள்ளளவும் அழியாப் புகழ்படைத்து, பிறரால் செயற்கரிய காரியத்தைச் செய்து விளங்குவான். உனது விரோதிகளை அழிப்பான்; நீ விசனமுறாதே'' என்று தேற்ற, ஈஸன் ஷிரானைக் கட்டிக்கொண்டு, "என் ஆருயிர் நண்பா! உலகத்தில் மித்திரர்கள் சங்கட காலத்தில் உடை யிழந்தவன் கைபோல உதவுகிறார்கள். நீயும் நான் கலங்கும் வேளையில் தைரியம்சொல்லித் தேற்றினாய்; இனி எனக்குக் கவலையில்லை. என் மகன் நினது அடைக்கலம்; அவனை மறுபடியும் அயோல்காஸுக்கு அரசனாக்குவது உன் கடமை; நான் போய் வருகிறேன்'' என்று புறப்பட்டுப் போய்விட்டான்.

நராச்வமாக விருக்கும் ஷிரான் தேவாம்சமுள்ள ஒரு புருஷன்; அச்வினிதேவதைகள் போல வைத்திய சாஸ்திரத்திலும், தும்புரு நாரதர்கள் போல ஸங்கீத சாஸ்திரத்திலும், ஸரஸ்வதிபோல கலைஞானத்திலும், வீமன் போல மற்போரிலும், துரோணன்போல விற்போரிலும், நகுலன் போலத் துரகாரூடத்திலும், மாதலிபோல ரதாரூடத்திலும் இவை போல வேறு பல வித்தைகளிலும் ஸம்பூர்ணமான ஜ்ஞானம் படைத்து, அக்காலத்தில் புத்திசாலிகளான க்ரேக்க வாலிபர்களுக்குக் கல்வி பயிற்றுவித்துவரும் ஆசிரியனாய் விளங்கினான். இவன்கீழ்க் கற்றவர்களில் ஹெர்க்யூலிஸ் என்ற அபிநவ வீமனும், ஆர்பியஸ் என்ற ஸங்கீத வித்வானும், அச்சிலிஸ் என்ற வஜ்ரதேஹனும், ஜேஸன் என்ற ஸ்வர்ணகேசங் கொண்டானும் இவர் போன்ற மற்றும் பலருமாவார்.

ஈஸன் போனபிறகு ஜேஸனை ஷிரான் தன் குஹையின் உட்புறத்திற்கு அழைத்துச் செல்ல, ஆங்கு அவ்வாலிபன் ஹெர்க்யூலிஸ் அச்சிலிஸ் முதலிய சூரர்களான இளைஞர்களைக் கண்டு, மிக்க குதூஹலங் கொண்டு, அவர்க

ளுடன் நட்புடைமை பூண்டு, காடுகளில் வேட்டையாடியும் நதிகளில் படகு செலுத்தியும் வயல்களில் உழவு செய்தும், சோலைகளில் மரம் வைத்தும், காக்களில் பூக் கொய்தும் விளையாடி வந்தான்.

கல்வி கற்கும் காலங்களிலோ அவனும் மற்றக் குமாரர்களும் விரானிடத்து பக்தியும் அன்பும் கொண்டு, கேட்டதை உள்ளத்து அமைத்து, பாடங்களை மறவாது சிந்தனை பண்ணி, தமது ஸகபாடிகளுடன் கலந்து கேள்வி கேட்டு விடை சொல்லி, நல்ல மாணக்கராய் விளங்கினார்கள். விரான் களிப்புற்று, அக் குமாரர்களுக்கெல்லாம் மானுஷி சாஸ்திரம், ராஜ தந்திரம், மல்யுத்தம், ரதாரோகணம் முதலியவித்தைகளையும், ஜோதிஷயம், வைத்தியம்,ஸங்கீதம்,சித்திரம், சிற்பம் முதலிய விசேஷ வித்தைகளையும் கற்பித்து வந்ததனால், அக்குமாரர்கள் மகா சூரர்களும் புத்திமான்களும் உலகம் யாவும் கொண்டாடும்படியான மகா வித்வான்களுமாகி, தேவர்களுக்கும் ஆனந்தத்தை விளைத்து வந்தார்கள். அக் குமாரர்களுள் ஆர்பியஸ் தும்புரு நாரதர்களின் அவதாரமே என்னும்படியாக ஸங்கீதத்தில் தேர்ச்சி யடைந்தும், ஆஸ்க்ளிபாய் தன்வந்திரியின் அவதாரமே என்னும்படி வைத்தியத்தில் பூர்ண ஜ்ஞானம் பெற்றும், ஹெர்க்யூலிஸ் வீமனது மறுபிறப்பே என்னும் படியாக மல்யுத்த கதாயுத்த ஸாமர்த்தியம் படைத்தும் விளங்கினார்கள்.

ஜேஸனே ரணவைத்தியத்தில் மகா நிபுணனாய், ஆண் சிங்கம்போல கம்பீரமும் மனோ தைரியமும் படைத்து அக் குமாரர்களுக் கெல்லாம் தலைவனாய் விளங்கினான். விரான் தனது மாணாக்கர்களின் கல்வித் திறமையைக் கண்டு உடல் பூரித்து, நாளுக்கு நாள் நூதனம் நூதனமான வித்தைகளையும் நீதிகளையும் தர்மங்களையும் அவர்களுக்கு

போதித்து அவர்களைத் தர்மவான்களாகவும் குணவான்களாகவும் ஆக்கி விட்டான்.

இப்படியாக எல்லா நலங்களும் பெற்ற அக்குமாரர்கள் தக்க பருவமடைந்து தத்தமது நாடு செல்லக் கருதி, ஷிரானிடத்தில் விடை பெற்றுச் சென்றார்கள். ஜேஸன் மாத்திரம், தனக்கென்று தனியான ஒரு தேசமும் வீடும் இல்லாமையால், ஷிரானது மலையையே தேசமாகவும் அவன் வீட்டையே வீடாகவும் கருதி வஸித்து வந்தான். இப்படியாகப் பல வருஷங்கள் கழிந்தன. ஜேஸனுக்கும் தேச ஸஞ்சாரம் செய்யவேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அதை ஷிரான் கண்டான். "இவனை இனி நாம் இங்கு வைத்திருக்கக் கூடாது. இவனை இவனது நாட்டிற் சேர்த்து விடவேண்டும்; ஈஸனுக்கு நாம் உறுதி சொன்னபடி நடத்திவிட வேண்டும்" என்று எண்ணிக் கொண்டு, ஒரு நல்ல நாளை எதிர் பார்த்திருந்தான்.

ஒருநாள் சூரியாஸ்தமன காலத்தில் ஷிரான் ஜேஸனை உடன் அழைத்துக் கொண்டு, பெலியன் மலையின் உச்சிக்கு ஏறி, அயோல்காஸ் தீவினை அவனுக்குக் காட்டி, "இத் தீவு யாருடையது தெரியுமா?" என்றான். ஜேஸன் பெருமூச் செறிந்து, "குரோ! எனது தோழர்கள் இந்தத் தீவுக்கு நான் யஜமானனாக வேண்டியது என்கிறார்களே; அதில் உண்மையுண்டா?" என்றான். ஷிரான், "அது உண்மையா யிருந்தால் நீ செய்வது என்ன? உனக்கு ஏதேனும் பயனுண்டோ?" என்றான். ஜேஸன், "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்! நான் அதைக் கைப்பற்றி உமது அனுக்ரஹத்தால் ஆளுவேன்" என்றான். ஷிரான், "ஹா! ஹா! அதைச் சொல்லாதே! மகா பலிஷ்டனான ஒருவன் அதைப் பல்லாண்டாக அடிப்படுத்தி, ஆண்டு வருகிறான்! அவன் பெயர் சொன்னாலே உலகு நடுங்குமே! பெலி

யஸ் என்னும் அக் கொடியி னிடமிருந்து நீ அந் நாட்டை எவ்வாறு திருப்பிக்கொள்வாய்? உலக கண்டகனாகிய பெலி யஸைவிட நீ பலிஷ்டனா?" என்றான்.

ஜேஸன் தோள் துடிக்க, மீசை படக்க, "என் ஆசிரியரே! அவனுடன் நான் ஒரு கை பார்க்கிறேனே!" என்றான். ஷிரான் வியசனத்தால்பெருமூச்சு விட்டுக்கொண்டு, "குமாரா! அந்தப் பெருங் காரியத்தில் நீ தலை யிடுவையானால் மகத்தான ஆபத்துக்களுக்கு உள்ளாவாயே! இதுவரையில் மனுஷ்யன் அனுபவித் தறியாத துக்கங்களையும் துன்பங்களையும் நீ அனுபவிக்க வேண்டி யிருக்குமே! முகமறியாத தேசத்தில் போய் முழுதும் துன்புற வேண்டியுமிருக்குமே!" என்றான்.

ஜேஸன், "அப்படியா! ஆனால் ஸந்தோஷந்தான். மனுஷ்யர்கள் காணாதவற்றை நான் காண்பேனானால், என்னினும் பாக்யவான் யாவன்? நான் அவசியம் போயே ஆகவேண்டும்" என்றான். ஷிரான் துக்கமும் மகிழ்வு முடையவனாய், "சிங்கக் குட்டி கண் திறந்துவிட்டால் குஹையினுள் சோம்பிக் குந்தி யிருக்குமா! ஸரி; ஜேஸா! நீ போகலாம்; எனக்கு இரண்டு விஷயம் மாத்திரம் தவறுவதில்லையென்று வாக்குக்கொடு" என்றான்.

ஜேஸன் ஸரி என்று வாக்களிக்க, ஷிரான், "ஒன்று, நீ யாரோடும் வெட்டெனப்பேசாதே; இரண்டு, நீசொன்ன சொல்லின்படி நட; இந்த இரண்டும்தாம்" என்றான். ஜேஸன் தன்னை ஷிரான் ஏதோ பெரிய விஷயம் கேட்கப் போகிறான் என்று நினைத்திருந்தான்; இவ்வளவு ஸாதாரணமான ஒன்றைத் தன் ஆசிரியன் கேட்டதில் அவனுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. "ஆனாலும் திரிகால ஜ்ஞானியாகிய ஷிரான் காரணமில்லாமல் இப்படிக் கேட்கமாட்

டார்; நாம் உறுதிசெய்து கொடுத்தபடி நடக்கவேண்டும்' என்று மனத்தில் முடிவு செய்துகொண்டு, ஷிரானிடத்து விடைபெற்றவனாய், அயோல்காஸ் நாட்டை நோக்கி வழிக் கொண்டான்.

வானுற ஓங்கி வளம் பெறவளர்ந்த மரங்களடர்ந்த வனங்களையும், மான் இனம் மலிந்து ஆன் இனம் மிகுந்து மேய்ந்து திரியும் வெளிகளையும், கண் தீச்சொரிந்து, கனல் வாய் உமிழ்ந்து, குறைவாய் திறக்கும் கோளரிகளொடு, கரித்தலை உடைத்து, பரிக்குடர் சரிக்கும் வரிப்புலி மிகுத்த கானங்களையும் கடந்து, அனோஸ் என்னும் நதிக்கரையை அடைந்தான்.

'ஈக்கள் வண்டொடுமொப்ப, வரம்பு இகந்து, ஊக்கமே மிகுந்து உள் தெளிவின்றியே தேக்கு எறிந்து' வருகிற அவ்வாற்றைக் கண்டவுடன் ஜேஸன் புளகாங்கிதமாய், உடனே அதில் இறங்கப் போனான். அப்பொழுது அந்தக் கரையில் உட்கார்ந்திருந்த ஒரு நரைத்த கிழவி, "அப்பா' ஐயா! உனக்குத் தர்மமுண்டு, என்னைச் சற்று அக்கரை கொண்டுபோய்ச் சேர்; நான் தள்ளாத கிழவி யில்லையா?" என்றாள்.

கேட்ட ஜேஸன் அக் கிழவியின் ஈனத் தோற்றத்தைக் கண்டு அருவருப்புற்று, கடிந்து விடைசொல்லப் போனான். அதற்குள் ஷிரானுக்குத் தான் வாக்களித்தது நினைவிற்கு வர, "ஆ! ஆ! எவரிடத்தும் வெட்டெனப் பேசாதே என்று அவர் சொல்லி யிருக்கவில்லையா!" என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டு, கிழவியைக் குளிரப்பார்த்து, "அம்மா! அஞ்சவேண்டாம் உன்னை அக்கரை சேர்ப்பேன்; என் முதுகின் மேல் ஏறிக்கொள்" என்று வணக்கமாகச் சொன்னான்.

நூறு சென்ற கிழவியாகத் தோன்றினும் அந்த ஸ்த்ரீ குனிந்த ஜேஸன் முதுகில் 'குபுக்'கெனப் பாய்ந்து ஏறிக் குரங்குபோலத் தொத்திக்கொண்டு, மிக்க அதிகாரத்துடன் அவனை நீரில் இறங்கும்படி கட்டளையிட்டாள். ஜேஸனுக்கு மறுபடியும் கோபம் ஜனித்தது; "இவளைக் கீழே தள்ளிவிட்டாலென்ன?" என்று எண்ணினான். ஆயினும் தனது குருவின்வாக்கை நினைத்து, பொங்கிய கோபத்தைத் தணித்துக்கொண்டு, ஆற்றிலிறங்கிச் சென்றான்.

போகும்போது கிழவியை அவன் சிறிதும் நோவாமல் ஜாக்ரதையாய் சுமந்து சென்றபோதிலும், அந்த ஸ்த்ரீ கடுஞ்சினங் கொண்டு; "மூடா! மூரடா! மடையா! கொடியா! இதோ என் கால் நனைகிறதே! இதோ என் முன்தானை நனைகிறதே! நீ வேகமாகச் செல்கிறாயே! எனக்கு மூச்சுத் திணறுகிறதே!" என்றும், மற்றும் பலவாறும் நிந்தித்தாள்.

அனேரஸ் நதியோ மிக்க ஆழமுள்ள காட்டாறு. அடியெல்லாம் முள் போன்ற கூரிய கற்கள் நிறைந்தது. நீர் விசை மிகுத்து, வலிய மனிதர்களையும் வலித்து இழுத்துச் செல்ல வல்லது. இத்தகைய ஆற்றில் ஜேஸன் பிராணனைக் கொடுத்து மெல்ல மெல்லச் செல்லுகையில், கிழவி சொன்ன கொடுஞ் சொற்கள் அவன் மனத்தைப் புண்படுத்த, அவன் அவளை அந்த நட்டாற்றிலேயே எறிந்துவிட்டுப் போய்விடலாமாவென்று பலதரமும் நினைத்தான். பின்னையும் தனது ஆசிரியன் உரைத்தது நினைந்து, பொறுமையை மேற்கொண்டு, "ஓ! தள்ளாத கிழவி! சற்று பொறுத்துக்கொள்; அக்கரை ஸமீபித்து விட்டது. வேண்டுமென்று உன் கால் முன்தானை முதலியவற்றை நான் நனைக்கவில்லை. ஆற்றின் விசையை ஜயிக்க என்னால் கூடவில்லை. தயை செய்து மன்னிக்கவேண்டும்" என்று பணி

வுடன் சொல்லிக்கொண்டு, அவளை அக் கரை சேர்த்தான்.

ஜேஸன் முதுகை விட்டுக் கீழிறங்கிய அக்கிழவி தேஜோமயமான திவ்ய ஸ்த்ரீயாகி, களைப்பினால் பெருமூச்சு விட்டுக்கொண்டு நிற்கும் அக் குமரனைக் குளிர நோக்கி, "மைந்தா! நான் ஹீரா; கடவுளர்க்குத் தலைவரான ஸீயஸின் பத்னி; உன்னை நான் சோதிக்க வந்தேன்; நீ தயாளு உனக்கு நான் உதவி செய்வேன்; ஆபத்து வேளையில் என்னை நினை" என்று சொல்லி, ஆகாயத்தில் எழும்பி, அந்தர்த்தானமாயினாள்.

பார்த்து நின்ற ஜேஸன் ஒன்றுந் தோன்றாமல் பிரமித்துப்போய் ஒரு விநாடிகை கல்போல அசைவற்று நின்றுவிட்டான். பிறகு உடலில் புளகம் போர்ப்ப, கண்ணீர் வார, ஹீரா சென்ற திசையைநோக்கி நமஸ்கரித்து எழுந்து, "ஹா! ஹா! காரணமில்லாமலா ஷிரான் நம்மை நயம்பட உரைக்கும்படி கட்டளை யிட்டார்!" என்று அந்தப் புருஷாச்வத்திற்கு மானஸிகமாக நமஸ்காரம் செய்து, அயோல்காஸ் நாட்டை நோக்கி அடி எடுத்து வைத்தான்.

வைத்த ஜேஸன் தன் பாதுகைகளில் ஒன்றை வெள்ளம் அடித்துக்கொண்டுபோய் விட்டதைக் கண்டு, சிறிது மனம் நொந்து, "இவ்வொன்றுக்குப் பிரதி வேறு ஒன்று செய்து கொள்வோம்" என்று அவ் ஒற்றைக்கால் பாதுகையுடன் அயோல்காஸின் உட்சென்றான்.

வான்தொடு பொற்கோட்டு இமையம் போல விண்ணில் உயர்ந்த மாடங்கள் செறிந்த தெருவிலே நமது இளங்குமரன் மத்தகஜம் போலச் செல்லவே, சிங்கமும், ரிஷபமும் நாணமுறும் அவனது கம்பீர நடையையும் தேஜஸ்ஸையும் கண்ட ஜனங்கள், திறந்த வாயினராய், "இவன்

முருகனே! மதனனே! அன்றி இந் நகரத்தின் அதிஷ்டான தேவனே!" என்று சங்கித்தனர். கடைசியில் அவர்களில் வயதில் மூத்தவனான ஒருவன் அவனை அழைத்து, "ஹே! ஸௌந்தர புருஷா! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? இவ் வூரில் உனது காரியம் யாது?" என்றனன்.

திரும்பிய ஜேஸன், "பெரியவரே! அடியேன் பெயர் ஜேஸன்; நான் பெலியன் மலையின் தலையினின்றும் இறங்கி வருகிறேன். எனக்கு உங்கள் அரசன் பெலியஸினிடம் காரியம் உண்டு; அவர் இருக்கும் அரண்மனையைத் தயை செய்து காட்டுவீரா?" என்றான்.

கேட்ட கிழவன் நடுக்கமுற்று, முகம் வெளுக்க, "ஐயோ! குழந்தாய்! கேட்டதில்லையோ முன்னாள் பிறந்துள்ள ஓர் அசரீர வாக்கை! ஒற்றைக்கால் பாதுகையுடன் இந் நகரில் அச்சமின்றி உலாவுகின்றாயே!" என்றான்.

ஜேஸன், "பூஜ்யரே! அடியேன் இவ்வூருக்குப் புதிது; எனக்கு ஓர் அசரீர வாக்கும் தெரியாது; எனது மற்றொரு பாதுகையோ அனேரஸ் ஆற்றின் வெள்ளத்தில் போய் விட்டது" என்றான்.

கேட்டு நின்றோர் அனைவரும் ஒருவர் முகம் ஒருவர் நோக்கி, வாய் பேசாமல் நிற்க, அக் கிழவர், "இளைஞா! நீ உனக்கு ஒரு பேராபத்தை விளைத்துக் கொள்வாய்; நான் சொல்வதைக் கேட்டு உசிதம்போலச் செய்து பிழைத்துப் போ. டெல்பியில் எழுந்த ஓர் அசரீர வாக்கு 'ஒற்றைக்கால் பாதுகையுடன் இவ்வூரில் நடமாடும் ஒரு புருஷன் பெலியஸினிடமிருந்து இந் நகரத்தைக் கைப்பற்றி ஆள்வான்' என்று சொல்லி யிருக்கிறது. அது முதல் பெலியஸ் ஒற்றைப் பாதுகையுள்ள எவனையும் உயிருடன் விடுவதில்லை. நீயோ இக் கோலத்துடன் அவன் முன்னே

போகிருய்; கொடுங்கோ லரசரில் கொடியனும், வஞ்சகமே உருவெடுத்தாற் போன்றவனுமான அம் மன்னனிடத்தில் ஜாக்ரதையாக நடந்து கொள்" என்றான்.

கேட்ட ஜேஸன் 'கட கட' வென நகைத்து, "நல்ல செய்தி சொன்னீர் விருத்தரே! உமக்கும் க்ஷேமம்; எனக்கும் க்ஷேமம்! நான் இங்கு வந்த காரியம் தெரியுமா உமக்கு? அக் கொடியனிடமிருந்தும் இந் நாட்டைப் பிடுங்கத்தானே!" என்று சொல்லி விட்டு, மிக்க கம்பீரத்துடன் பெலியஸின் அரண்மனை நோக்கி நடந்தான்.

ராஜத்வாரம் குறுகிய ஜேஸன் ஸிம்ஹ கர்ஜனை போன்ற உரத்த தொனியுடன், "பெலியாஸ்! பெலியாஸ் பெலியாஸ் அரசே! வலியால் மிக்க பெலியாஸ் அரசே! இந் நாடு ஆள இசைந்தாயாகில், என்னோடுடனே போருக்கு எழுக" என்றான். கேட்ட மன்னவன் ரோஷங்கொண்டு, குஹையினின்றும் எழுப்பப் பெற்ற கொடும் புலிபோல தீவிழி விழித்துப் பொங்கி எழுந்து, வெளியேவந்து, "யாரடா வாலிபா நீ! வலிவில் என்னைப்போருக் கழைக்கிருய்?" என்றான்.

உயிர்களைக் கவரும் கொடிய யமனும் அஞ்சி நிற்கும்படி செய்ய வல்ல அப்பெலியஸின்முன் நமது ஜேஸன் வெகு அலக்ஷியமாய் நின்று கொண்டு, "பெலியஸ் அரசே! நான் ஈஸன் புதல்வன்; ஜேஸன் என்பது என் பேர்; இந்த நாடு எனது அன்றே! நீ இதை உடனே என்னிடத்து விட்டுவிட வேண்டும்" என்றான்.

கேட்டானே இல்லையோ பெலியஸ்! உடனே முகத்தில் அன்பையும் வணக்கத்தையும் வருவித்துக்கொண்டு, இரு கைகளாலும் ஜேஸனைவாரி அணைத்து, "ஆ! என் மகனே! உன்னை நான் காணும்பாக்யத்தைப்பெற இவ்வளவு

காலம் ஆகவேண்டுமோ? எனது தௌர்ப்பாக்கியம் இப்படியா யிருந்தது! என் செல்வமே! என் இரு கண்களிலுமுள்ள மணியே! என் உயிரே! எத்தனை காலமாக உன்னை நான் தேடி அலைந்தேன் தெரியுமா? உனது திருமுகத்தைக் காணுது திகைத்து நான் மயங்கியது கடவுளுக்குத்தான் தெரியும்? இதோ உன் தந்தை யிருக்கிறூர்; கேள்; நான் சொல்வதில் ஓர் அக்ஷரமேனும் பொய் உளதானல், என்னை நீ உன் இஷ்டம்போலத் தண்டிக்கலாம்; உனது வருகையைப் பல நாளாக எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன்! இந்நாடு எனக்குப் பின் ஆளுவாரின்றி அழிந்துபோமே என்ற துயரம் என்னை இரவு பகலாகப் பிடித்துக்கொண்டிருந்தது. அத்துயரம் ஒழியக் கடவுள் இன்றுதான் கருணை புரிந்தார்; ஜேஸா வருக! ஜயசீலா வருக! சிங்கக்குட்டீ, வருக! சிற்றரசே வருக!'' என்று பரமானந்தம் கொண்டவன்போல நடித்து, அவனது இரு கைகளையும் பிடித்து, அரண்மனைக்குள் அழைத்துக் கொண்டுபோய், அறுசுவையோடும் கூடியதும் பல பக்ஷயங்களும் பழங்களும் நிறைந்ததுமான பெரிய ஒரு விருந்துசெய்து உபசரித்தான்.

உண்ட ஜேஸன் உல்லாஸமாகப் பேசும் பெலியஸின் மாயத்தில் அகப்பட்டு, "ஓ! ஓ! இவனை எல்லாரும் கொடியன் கொடியன் என்கிறூர்களே! இது பொய்; இதோ பக்கத்தில் இருக்கிற நமது பிதாவும் ஸுகமாக வஸிக்கிறூரே! பெலியஸால் தமக்கு எவ்விதத் துன்பமும் நேரவில்லை யென்றும், அவன் வெகு நல்லவன் என்றும் சொல்லுகிறூரே! இத்தகையோனை ஏன் உலகம் பழித்துரைக்கின்றது?'' என்று எண்ணினுன். அவன் இளம்பிராயமுடையவனும் கவடு சூது தெரியாதவனும், உலக அனுபவம் இல்லாதவனுமாகையால், பெலியஸ் செய்த வஞ்சனை வலையில் சிக்கிக்

கொண்டான். தனது பிதா ஈஸன், துஷ்டனை பெலிய ஸுக்கு அஞ்சித் தான் படும் கஷ்டங்களை மறைத்துப் பேசினன் என்பதை அவன் உணரவில்லை. நாளுக்கு நாள் பெலியஸ் ஜேஸனை வசப்படுத்தி, அன்பொழுகப் பேசி, "மைந்தா! இனி நீதானே இவ்விராஜ்யத்தை ஆளவேண்டும்; நீ இந் நாட்டின் வழக்கங்களையும் ஆசாரங்களையும் அறியவேண்டுவது ஆவசியகமல்லவா?" என்று சொல்லி ஊர்க் கதைகளையெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தான்.

பேச்சோடு பேச்சாக, "என் குழந்தாய்! அரசாள்வது ஒரு லகுவான காரியமன்று. அதிலும் இந் நாட்டை ஆள்வது மிகவும் கஷ்டம்; இதை ஆள்பவனும் துர்ப்பாக்கியனே. நான் ஏழு வருஷகாலமாகத் தூக்கமில்லாமல் அவஸ்தைப் படுவது கடவுளுக்குத் தான் தெரியும்" என்றான். கேட்ட ஜேஸன், "சிற்றப்பா! ஏன் இப்படிச் சொல்லுகிறீர்? என்ன விசேஷம்?" என்றான். இதுதான் தருணமென்று கண்ட பெலியஸ், "கேளப்பா! ஜேஸா, பிரிக்ஸஸ் நமக்குத் தாயாதி என்பது உனக்குத் தெரியுமே! அவனையும் அவன் ஸஹோதரி ஹெல்லியையும் காத்து கால்சிஸ் நாட்டுக்கு எடுத்துப் போன ஸ்வர்ண மேஷத்தை அவன் கடவுளுக்குப் பலியிட்டு, அம் மேஷத்தின் ஸ்வர்ண ரோமமுள்ள சர்மத்தை ஓர் கருங்கலி மரத்தில் அடித்து மாட்டினன். அவனே இறந்து பல வருஷங்கள் ஆய்விட்டன. அது உனக்குத் தெரியாததன்று. அவன் அந்தச் சர்மத்தின் அடியில் அந்தக் கால்சிஸ் நாட்டிலேயே புதைக்கப் பெற்றிருக்கிறானதலால், அவனுடைய ஆத்மா பரதேசமாகிய அவ்வூரில் நிலைகொண்டிருக்க ஸஹியாமல், தனது மூதாதையர்கள் மரித்த மண்ணில் தானும் புதையுண்டிருக்க விரும்புகிறது. அதன் ஆசையை நிறைவேற்ற வேண்டுமானல், அந்த ஸ்வர்ண கேசத்தை இங்கு எடுத்து வரவேண்டும். அந்த நாட்டுக்கு

யாரால் செல்லக்கூடும்? யாரால் அங்கிருக்கும் நூறு தலைப் பாம்பைக் கொல்லக்கூடும்? யாரால் தீச்சுவாஸம் விடும் வஜ்ர மகிஷத்தை வெல்லக்கூடும்? யாரால் யமனுடைய உத்தியான வனத்தில் நுழையக் கூடும்? யாரால் கால்சிஸ் நாட்டு அரசன் ஐடஸை அணுகக்கூடும்? சொல்லப்பா என்கண்ணே! பிரிக்ஸஸின் ஆவேசமோ இரவு தவறாமல் என்னைக் கனவில் எழுப்பி கண்ணீர்விட்டு அழுகிறது. எனக்கோ அதன் பரிதாப நிலைமையைக் காண மனம் விண்டுபோகிறது. நான் சொல்வது உண்மையா பொய்யா என்பதை உன் பிதாவையே கேள்! அவரையும் ஒவ்வோர் இரவிலும் அந்த ஆவேசம் அணுகிச் சொல்லவேண்டுவன எல்லாம் சொல்லிப் போகின்றதே!'' என்றான்.

ஜேஸன் ஆச்சரியத்தோடும் ஆவலோடும் கேட்டிருக்க பெலியஸ் மேன் மேலும் பிரிக்ஸஸின் நிலைமையைப்பற்றி மிக்க வருத்தத்துடன் பேசுவானாயினன். கடைசியாக ஜேஸன், "சிற்றப்பா! ஏன் நீர் வீணிற் புலம்புகிறீர்; நான் பலதரம் அந்த ஸ்வர்ணகேசத்தைக் கொண்டு வரவேண்டுமென்று எண்ணினதுண்டு; ஆனால் அக் காரியம் அஸாத்யமென்று மனத்து எழுந்த ஆவலை அடக்கிக்கொண்டு விட்டேன்'' என்றான். இந்த நோக்கத்தைக் கண்ட பெலியஸ் வேறு பல விஷயங்களைப் பேசி இதை மறக்கடித்து, பிறகு ஜேஸனை அன்பொழுக நோக்கி, "மைந்தா! நீ கிரானது சிஷ்யர்களுள் தலைவனும் மிக்க புத்திக் கூர்மையுடையவனுமாகையால் உன்னை ஒரு விஷயத்தில் ஆலோசனை கேட்க வேண்டும் என்றிருந்தேன்; நீ நன்றாய் ஆலோசித்துச் சொல்லு; எனக்கு ஒரு விரோதி இருக்கிறான்; அவன் மிகவும் பலிஷ்டன், ஆனால் இப்பொழுது அவன் நான் சொல்வதைத் தட்டக் கூடாத நிலைமை

யிலிருக்கிறான்; இன்னும் சிலகாலம் போனாலோ என்னை அவன் பாதாளத்தில் அமுக்கி விடுவான்; அவனை நான் எவ்விதமாக ஒழிக்கலாம்; நீ தக்க ஓர் உபாயம் சொல்லு; அதன்படியே நான் நிச்சயமாய் நடப்பேன்'' என்றான்.

ஜேஸன் சிறிது ஆலோசித்திருந்து, "சிற்றப்பா! சிற்றப்பா! எனக்கு நல்ல ஆலோசனை ஒன்று தோன்றுகிறது; நீர் அவனை ஏவக்கூடுமானால், அந்த ஸ்வர்ணகேசத்தைக் கொண்டு வரும்படி அவனை ஏவுமே; அவன் அதற்காகப் போனாலோ திரும்பப் போகிறதில்லை'' என்றான். "ஆ! ஆ! மைந்தா! அதைத்தான் நானும் நினைத்தேன்; ஆனால் அது உன் வாயினின்றுதான் வரட்டுமே என்று சும்மா இருந்தேன்; ஸரி; அவன் அதற்காகப் புறப்படட்டும்'' என்றான் பெலியஸ்.

கேட்ட ஜேஸன், "ஓகோ! வஞ்சகா! கொடியா! இதற்காகவா நீ என்னை இவ்வளவு தூரம் லாலனம் செய்து ஏய்த்து வந்தாய்! என்னையா நீ அந்தக் கேசங் கொண்டு வரும்படி அனுப்பத் துணிந்தாய்! உன் மூளையை இதோ சிதற அடித்துவிட்டேன் பார்!'' என்று, முஷ்டியை ஓங்கிக்கொண்டு, பெலியஸினருகில் போனான். பெலியஸோ சற்று அப்புறம் விலகி, "பிள்ளாய்! கோபம் வேண்டாம்; சற்று ஆலோசித்துப் பார்; எவனால் எனக்கு ஆபத்து விளையுமோ அவனை நான் ஆதரிக்கவேண்டும் போலும்? நீதானே சத்துரு நாசம் செய்ய வேண்டுமென்றாய்? நீ அச் சத்துருவை ஸௌகமாக வைத்திருக்கவேண்டும் என்று ஆலோசனை சொல்லியிருந்தால், நான் அப்படியேசெய்திருப்பேன்; அது போகட்டும்; ஷிரானைக் குருவாகவும், ஹெர்க்யுலீஸ் அச்சிலீஸ் டைபீஸ் மாப்ஸீஸ், அங்காய், ஆர்காஸ் முதலிய மகா வீரர்களை ஸகபாடிகளாக பெற்றும் புருஷ

ரிஷபமாக விளங்கும் நீ ஏன் அக் கேசத்தைக் கொண்டு வந்து அழியாப் புகழ்பெற்று, உன் பிதாமகனது அபீஷ்டத்தையும் நிறைவேற்றக் கூடாது? கையாலாகாத பயங்காளி யன்றோ சொன்ன சொல்லைக் காப்பாற்ற மாட்டான்! பெரியார் எனப்படுகிறவர் மற்ற யாவராலும் செய்தற்கு அரிய காரியத்தை யன்றோ செய்வர்? பெருமையும் சிறுமையும் அவரவராலேயே வரும். உலகத்தில் யார் புகழோடு ஜீவிக்கிறார்களோ அவர்களே பாக்யவான்கள்; நீயோ ஈஸன் புதல்வன். நீ பிறந்த குலத்துக்கும் உன் பிதாவுக்கும் இதனால் அழியாப் புகழுண்டாம்; அன்றேல் 'ஈஸன் புதல்வன் ஜேஸன் என்று ஒருவனும்; சொன்ன சொல்லைக் காக்கமாட்டாது சிற்றப்பனைக் கொன்று, சிங்காதனத்தைப் பிடுங்கிக்கொண்டானும்' என்னும் வசை மொழியை வாங்கிக்கொள்ள இஷ்டமானால், என்னைக் கொன்றுவிட்டுப் பட்டத்தைப் பிடுங்கிக்கொள்ளு" என்றான்.

இப்படிப் பெலியஸ் நயமும் பயமுமாகப் பேசவே, பெரிய மனஸ்ஸையுடைய ஜேஸன், "ஸரி; ஸரி; சிற்றப்பா! நீர் வஞ்சகமாகப் பேசினாலும் ஸரி, உண்மையாகப் பேசினாலும் ஸரி; நான் ஸ்வர்ணகேசங் கொண்டே வருவேன்; வாராமல் இந்நாட்டில் அடியெடுத்து வையேன். புகழே எனக்கு ஆயுள்; புகழ் இல்லையானால் எனக்கு ஆயுளுமில்லை. ஆனால் நீர் ஒரு வாக்கு தத்தம் செய்ய வேண்டும்; நான் ஸ்வர்ணகேசத்துக்குப் போயிருக்கும்போது நீர் எனது பிதாவை அன்புடன் போஷித்து வரவேண்டும்; நான் திரும்பி ஜயசீலனாய் வந்தவுடன் எனது ராஜ்யத்தை என்னிடம் கொடுத்துவிடுவீரல்லவா?" என்றான்.

கேட்ட பெலியஸ் தன் அகத்திலிருந்துள்ள துவேஷத்தை யெல்லாம் மறந்து, உள்ளன்போடு, "சூரனே! நான்

அப்படியே செய்வேன்; உன் முகமும் உன் பேச்சும் என்னை வேறு மனுஷ்யனாக்கிவிட்டன. உனது பிதாவை நான் இனி தெய்வமாகக் கருதிப் பூஜித்து வருவேன்; ஸ்வர்ண ரேசங் கொண்டு வரும் உனக்கு நான் ஏன் எனது ராஜ்யத்தை--ஏன் எனது உயிரைத்தான்--கொடுக்கக்கூடாது? அமானுஷ்யமான காரியத்தைச் செய்த ஒருவனுக்கு மானுஷனாகிய நான் ஏன் பணியக்கூடாது?'' என்று குதூஹலங் கொண்டு, "என் குடியே உயர்ந்த குடி! என் ஜன்மமே சிறந்த ஜன்மம்! சூரன் சூரன் என்று ஜேஸனைச் சொன்ன வாயினால் 'பெலியஸினாலன்றோ ஜேஸனுக்கு அத்தனை கீர்த்தியும் பிரதாபமும் உண்டாயின' என்று ஜனங்கள் சொல்லாதிரார்; ஜேஸா! நீ உன் காரியத்தை முடிக்காமல் திரும்பமாட்டாய் என்பது எனது பூரண நம்பிக்கை; கடவுள் உனக்குப் பேரருள் புரிவாராக'' என்று ஜேஸனைக் கட்டிக்கொண்டான்.

கோபம் அடங்கி, மனவெழுச்சி மிக்க ஜேஸன் அன்று இரவு நன்றாய் உண்டு, படுக்கப்போனான். ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. 'மனுஷ்ய ஸகாயமில்லாமல் இக் காரியத்தை எப்படி முடிக்கிறது?' என்று அவன் ஆலோசிக்கலானான். அந்த ஸமயத்தில் ஹீரா—ஒலிம்பஸ் பர்வத வாஸிகளான அமரர்களுக்குத் தலைவி — சொன்ன சொல் ஞாபகத்துக்கு வந்து; "ஹா! ஹா! கடவுளை நம்பினோர் கைவிடப்படார்; ஹீராதேவி சொன்னது என்னை? 'இடருற்றபோது என்னை நினை' என்றனளே! நாளை நான் அவளுக்குப் பூஜை நைவேத்யங்கள் செய்வேன்'' என்று, உறுதி செய்துகொண்டான். உடனே அவனுக்குக் கவலை ஒழிந்தது. தூக்கமும் நன்றாய் வந்தது.

மறுநாள் காலையில் விழித்து எழுந்து, நித்திய கடன்களை முடித்துக்கொண்ட பிறகு அவன் பெலியஸி

னிடம் சென்று, "சிற்றப்பா! நான் இன்று ஹீரா தேவியைப் பூஜிக்கவேண்டும்; அத் தேவிக்குப் பலியிட ஏதேனும் தா" என்று, பலி ஒன்று வாங்கிக் கொண்டு போய், அத் தேவியின் ஆலயத்தில் பூஜை முதலியன செய்து, பலியிடுவித்து, தொழுத கையனாய் அவள் ஸந்நிதியில் நின்றான். அத் தருணத்தில் அவன் மனத்தில் உபாயங்கள் பலதோன்ற, அவன் களித்த உளத்தனாய், பெலியனிடம் வந்து, "சிற்றப்பா! முரசறைவோரில் துரிதமாய்ச் செல்வோர் இருவர் வேண்டும்" என்றான். அவன் அப்படியே கொடுக்க, ஜேஸன் அவர்களைத் தேயந்தோறும் போக்கி, "ஷிரானிடத்தில் கல்விகற்ற வீரர்காள்! புகழ் வேண்டின் ஜேஸனோடு புறப்படுங்கள்! ஜேஸன் ஸ்வர்ண கேசத்துக்குப் புறப்படுகிறான்! புகழில்லா வாழ்க்கை உயிர் வாழ்க்கையாமோ? வாருங்கள்! வாருங்கள்! கூடுங்கள்! கூடுங்கள்!" என்று பறை அறைவிக்கச் சொன்னான்.

அவர்கள் அப்படியே அறைவிக்க, முதலில் வீமனைப் போல மிக்க பலங்கொண்ட ஹெர்க்யுலீஸனும் பிறகு அட்மீடஸனும் அதன் பிறகு மாலுமி சாஸ்திரத்தில் வல்ல டைபீஸனும், பக்ஷி சாஸ்திரம் வல்ல மாப்ஸீஸனும், ஜோதிஷ சாஸ்திரம் வல்ல ஐடாமனும், வானசாஸ்திரம் வல்ல அங்காயும், தச்சு வேலையில் கைதேர்ந்த ஆர்காஸனும் பிறரும் வந்து சேர்ந்தார்கள். அக் காலத்தில் ஐயோல் காஸ்நாடு அமரர்லோகம் போலவும், அக்குமரர்கள் அமரகுமாரர்கள் போலவும் விளங்கினார்கள். பெலியஸ் அவர்களுக்கு தக்க விருந்து செய்து உபசரித்து, வேண்டிய உதவிகளைச் செய்தான். அந்தச் சூரர்களில் ஆர்காஸ் ஒரு சிறந்த கப்பலைக் கட்டினான் அதில் எல்லாரும் ஏறிக்கொண்டு, கால்சிஸ் நாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

வழியில் அவர்கள் அனுபவித்த துன்பத்தை இங்கு எழுதி முடியாது. பைசாசங்களாலும், ராக்ஷஸர்களாலும், துஷ்ட மிருகங்களாலும் பக்ஷிகளாலும், சூனிய மந்திர மாயாவிகளாலும், ஸர்ப்பங்களாலும், இவை போன்ற மற்ற துஷ்டர்களாலும் ஜந்துக்களாலும் அவர் அடியுண்டு கடியுண்டு, கொத்துண்டு வெட்டுண்டு, துகையுண்டு பகை கொண்டு மிக்க வருந்தினர். இப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாவற்றையும் ஸஹித்து, சூரர்கள் யாவரையும் உற்சாகப்படுத்தி, மிக்க ஆண்மையோன் என்று பெயர் வாங்கினவன் பீரிநாட்டு மன்னவனது மூத்த புதல்வனான அட்மீடஸ் என்னும் ஆண் சிங்கமே. இந்த அட்மீடஸ்ஸைப் பற்றித்தான் நாம் மேலே யுரைப்போம்.

அத்தியாயம் 1

"அட்மீடஸ் அல்ஸஸ்டிஸ்ஸைக் காதலித்தது."

மானிடர்கள் அனுபவித்தறியாத கொடிய துன்பங்களை யெல்லாம் அனுபவித்து, அமானுஷ்யமான காரியத்தைச் செய்து, உலகுள்ளளவும் அழியாப் புகழ்படைத்து, அயோல்காஸ் நாட்டிற்கு அநேக வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்த மகா சூரர்களான ஜேஸன் அட்மீடஸ் முதலிய புருஷ ச்ரேஷ்டர்கள் பெலியஸைக் கண்டு, அவன் முன்னே ஸ்வர்ணகேசத்தை வைத்து, "பாரும் மன்னவா! கடவுளருளுண்டாகில் கைகூடாதன யாவுளவே?" என்றனர்.

பெலியஸ் ரோமத்தை உற்றுப் பார்த்து, ரோமம் சிலிர்த்து, அவர்களைத் தனித்தனி தழுவிக் கொண்டு, "இன்றுதான் என் நாடு க்ஷேமம் அடைந்தது! இன்று

தான் ஜேஸன் பிறந்தவனானன்! நீங்களும் இன்றுதான் ஜனித்தீர்கள். ஒருவர்க்குப் புகழ் ஜனிக்கும் நாளே ஜனன நாள்" என்று புகழ்ந்து, நாடுமுழுவதும் அலங்கரிப்பித்து, தேவாலயங்களில் திருவிழாக்கள் நடத்தி, அவ்வீரர்களுக்கு ஒரு பெரிய விருந்து செய்தான்.

அவ் விருந்தின் போது அப்ஸரஸ்ஸுகளை ஒத்த சிறந்த ரூபவதிகளான பெலியஸின் குமாரிகள் எழுவரும் மிக்கமணமுள்ள புஷ்பங்கள் ஸகிதமான பனிநீர் கொண்டு, யாத்திரையால் உடல் சோர்ந்து வந்த அவ் வீரர்களுக்கு மஞ்சன மாட்டியும், கவரி வீசியும், அறுசுவை உண்டி உதவியும் உபசரித்தார்கள்.

அப்போது அக் குமாரிகளுள் கடைக்குட்டியான அல்ஸஸ்டிஸ் அட்மீடஸ்ஸினிடம் விசேஷ அன்பு காட்டி உபசாரம் செய்யும்படி நேர்ந்தது. அம் மங்கையோ அழகின் தெய்வமே என்னும்படியான ஸுந்தரி; குணத்திலும மிக்கவள், கல்வியிலும ஸரஸ்வதியே போன்றவள். பொறுமையிலோ பூமிபோன்றவள். அவளுடைய அழகையும் குணத்தையும் கண்ட அட்மீடஸ் அவள்மீது காதல்கொண்டான். அவளும் இவனது வனப்பையும் சௌரியத்தையும் கண்டு, காமமுற்றாள். இருவரும் ஒருவரை ஒருவர்

"பருகியநோக்கு எனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈத்தலால்,
வரிசிலை அண்ணலும் வாள்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்."

எய்தவே, அட்மீடஸ் ஆனந்தங்கொண்டு, தான் கால்சிஸ்நாட்டிலிருந்து கொண்டுவந்திருந்த ஒருபிடி தங்க ரோமத்தை அல்ஸஸ்டிஸ் கையில் கொடுத்து, "இதை என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்" என்று அன்போடு சொல்ல, அவள

அதை மகிழ்ச்சியுடன் வாங்கி, மடியில்வைத்து மறைத்துக் கொண்டாள். கண்ட அட்மீடஸ் கனத்த சந்தோஷத்துடன் பெலியஸினிடம் சென்று, "வேந்தே! என் குலமும் பெயரும் வளநாடும் நீ அறிவையே! அவை உன்குலம் பெயர் வளநாட்டிற்குத் தாழ்ந்தவன்றே; நான் உனது குமாரி அல்ஸஸ்டிஸ்மீது காதல் கொண்டேன்; அவளும் என்னை அங்கீகரிப்பாளென்று நம்புகிறேன்; நீ அவளை எனக்கு விவாஹம் செய்து கொடுப்பாயா?" என்றான்.

பெலியஸ் அரசன் எக்காரணத்தாலோ அட்மீடஸ் மீது அன்புடையவனாயில்லை. ஒருவேளை ஜேஸனுக்கு நட்பினர் யார் யாரோ அவர்களிடத்து எல்லாம் அவனுக்கு உட்பகை யிருந்திருக்கக் கூடும். அது எப்படியானாலும் ஸரி; அவன் அட்மீடஸ்ஸை நோக்கி, "அரசிளங் குமரா! உன்னை ஒத்த சுத்த வீரனை என் மகள் மணக்கப் பெரும்பாக்யமே செய்திருக்கவேண்டும்; எனக்கும் என் குமாரியை உனக்குக் கொடுப்பதில் வெகு ஸந்தோஷம்; ஆனால் பூர்வம் நடந்துள்ள ஒரு விசேஷமுண்டு; இந்த அல்ஸஸ்டிஸ் ஒருநாள் தொட்டிலில் குழந்தையாய்த் தூங்கும்போது, ஒரு ரிஷி வந்து, என்னை நோக்கி, 'வேந்தே! இக் குழந்தை மகாரூபவதியாகி உலகுள்ளளவும் அழியாப்புகழ் படைத்து, கற்புடைய மங்கையர்க் கெல்லாம் கைதொழும் தெய்வமாக விளங்குவாள். இவளைக் காதலித்து மணம் செய்வான் வரும் ராஜ குமாரன், சிங்கமும் யானையும் பிணைத்து இழுக்கும் ரதத்தில் வருவான்; அப்படிவாராத ஒருவனுக்கு நீ இவளை மணம் செய்து கொடுப்பாயானால், இவளது வாழ்க்கை மிகக் கேடாய் முடியும், ஜாக்ரதை' என்று சொல்லிப் போனார். நீ பீரஸ் மகாராஜாவுக்கு மூத்த புதல்வன் என்பதும், பட்டத்துக்கு உரியவனென்பதும் எனக்குத் தெரியும்; உனது ஆண்மையைப் பற்றியும், நான் விசாரிக்க வேண்

டியது ஒன்றுமில்லை. எப்பொழுது நீ ஸ்வர்ணகேசத்துக்குப்போய் ஜயசீலனாய்த் திரும்பிவந்து சேர்ந்தாயோ, அப்பொழுதே உனது ப்ரதாபம் உலகப்ரஸித்தமாயிற்று. எப்படியாவது நீ சிங்கத்தையும் யானையையும் பிணைத்து ரதத்தில் பூட்டிச் செலுத்திக்கொண்டுவா. என் குமாரியை நீ பெற்றுப் போகலாம்; ஆக்ஷேபமே இல்லை; அக்காரியம் உன்னை ஒத்த சுத்த வீரனுக்கு அரிதோ?'' என்றான்.

கேட்ட அட்மீடஸ்ஸுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அறிவு கலங்கிவிட்டது; கண் சுழலலாயிற்று; மனம் பதை பதைத்தது; அடியுண்ட ஸர்ப்பம்போலப் பெருமூச்சு விடுவானாயினான். ஆகாயத்தைப் பார்ப்பான்; ஆவென்றுரைப்பான்; விதியை நினைப்பான்! வேந்தனை நோவான்! என்ன செய்துதான் என்ன? ''நாம் இனி அல்ஸஸ்டிஸ்ஸை அடையப் போவதில்லை! அந்த மகா ரூபவதியை அடையும் பாக்யம் யார் பெற்றிருக்கிறார்களோ?'' என்று புலம்பிக்கொண்டு, தனது ப்ரீ நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

அத்தியாயம் 2

மகன் வருகிற செய்தி கேட்ட பீரஸ் மன்னவன் நாடு நகரங்களை நன்றாய் அலங்கரிப்பித்து, பச்சைத் தோரணங்களும் முத்து மாலைகளும் வீதிகள் தோறும் நாற்றுவித்து, நறுமணம் கமழும் சுத்த நீரினால் வீதிகளில் தெளிப்பித்து, பூரண கும்பம் மங்கல தீபம் முதலியன வைத்துக் கொண்டு, எதிர் வந்து அழைத்துப் போய், ரத்நகசிதமான ஆஸனத்தில் இருத்தி, அன்போடு தழுவிக்கொண்டு, பெரிக்ளிமீன் என்னும் தனது ராணியை அழைத்து, மைந்தனைக் காட்டினான். அவளும் அவனைக்

கட்டிக்கொண்டு, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, அவனைப் பெற்ற தினம்போலப் பேரானந்த மெய்தி, "மைந்தா! என் மைந்தா! இன்றுதான் நீ எனக்குப் புதல்வனானாய்! உன்னை உயிருடன் நான் பார்க்கப் போவதில்லை என்றே ஏங்கிச் சோர்ந்து போனேன்! நான் தினமும் செய்துவந்த பிரார்த்தனையைக் கடவுள் கேட்டு, உன்னை யச்வீயாய் என் கரத்தில் ஈந்தார்!" என்று பலவாறு புலம்பினாள்.

அன்றுமுதல் பீரி நாட்டில் ஒருமாதம் வரையிலும் நித்யோத்ஸவமே முழங்கிற்று. அரசன் முதல் ஆண்டி வரையில் உள்ள எல்லாரும் வந்து அட்மீடஸ்ஸை கண்டு கொண்டு போனார்கள். எல்லாரையும் அவன் அன்புடன் ஸமுகம் வருவித்து, உபசாரஞ் சொல்லி, தான் கால்சிஸ் தேசம் போய் வந்த கதைகளையும் யாத்திரையின் மத்தியில் ஸம்பவித்த அதிசய ஸம்பவங்களையும் விநோதமாக மொழிந்து, அவர்களை ஆனந்தப்படுத்தி வந்தான்.

இப்படியாகச் சில மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் பீரஸ் மன்னன் அட்மீடஸ்ஸை ஸபைக்கு அழைத்துப் பின் வருமாறு சொல்வானாயினன்:—

"மைந்த! நான் சென்ற ஐம்பது வருஷமாக உன் பாட்டனார் ஆண்ட நாட்டை கடவுளின் கருணையாலும் பெரியோர்களது ஆசீர்வாதத்தாலும் நீதி தவறாமல் ஆண்டு வந்தேன். இப்பொழுதோ எனக்கு விருத்தாப்பியம் வந்துவிட்டது. அதனோடு மறதியும் தள்ளாமையும் புத்தி மழுக்கமும், சோம்பலும் உண்டாகின்றன. அரசருக்கு மேற்சொன்ன தீக் குணங்களில் ஒன்று இருந்தாலே போதும் அவரைக் கெடுத்து விடற்கு; எனக்கோ எல்லாம் ஒருங்கே உண்டாயிருக்கின்றன; ஆதலால் நான்

எனது ராஜ முடியை என்னிலும் வலியோன் ஒருவன் தலையில் வைக்க வேண்டியது ஆவச்யகம்; நீயோ உனது ஆண்மையாலும் ஆற்றலாலும் ராஜ்யபாரம் வஹிக்கத் தக்கவன் என்பதை ப்ரஸித்தமாகக் காட்டி யிருக்கிறாய். நான் கொடுக்கும் இவ்விராஜ்ய லக்ஷ்மியை ஸதா ஜாக்ரதை யோடும் அன்போடும், ஆண்மையோடும், ஊக்கத்தோடும் காப்பாற்றிவா; 'இல்லற மல்லது நல்லற மன்று' என்று பெரியோர் கூறி யிருக்கின்றமையால், கற்பும் கணவன் இன் புறும்வகைச் செயலும் உள்ள கன்னி ஒருத்தியை மணந்து ஸத்புத்திரன் ஒருவனைப் பெற்று, அவனை உனக்குப் பின் அரசாள வல்லனுக்கு; 'மக்களை கல்லாது வளர விடுதல் தீது'; தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி யாதெனில் 'இவன் தந்தை இவனைப் புத்திரனைகப் பெற என்ன நற்றவம் செய்தானோ!' என்று பெரியோர் சொல்லும்படி செய்தல் தான்; இன்றுமுதல் இந்த ராஜ்ய லக்ஷ்மியைக் கைக்கொள்; நாளையே தக்க கன்னி ஒருத்தியைத் தேடி மணம் புரி" என்றான்.

பிதா சொன்னதைக் கேட்ட அட்மீடஸ் பெருமூச்சு விட்டு, "என் அருமைத் தந்தாய்! தங்கள் உத்தரவுப்படி தங்களது அரசை இதோ வாங்கிக்கொள்ளுகிறேன்; உங்களது ஆசிர்வாதத்தாலும் கடவுளது கிருபையாலும் நீதியாகவும் தர்மமாகவும் இதை ஆளுவேன்; ஆனால் கல்யாண விஷயத்திலோ அடியேனுக்கு இல்லறத்தில் பிரவேசிக்க இஷ்டமில்லை. என் மனம் இனி ஒரு கன்னியையும் காதலியாது; என் ஆசை என்னோடு மண்ணில் ஒழியவேண்டியதுதான்" என்றான்.

கேட்ட பீரஸ், "ஹா! மகனே என்ன விஷயம்? இவ்வளவு நாளாய் உன் மனத்தில் கவலையொன்றிருந்தது

என்பதையே நான் அறியேனே! அஃதென்ன சொல்லு?" என்னவே, அட்மீடஸ் தான் அல்ஸஸ்டிஸைக் கண்டதையும், பெலியஸைக் கேட்டதையும், அம் மன்னவன் விடையளித்ததையும் கூறி, "அப்பா! நான் என்றைக்கு அவன் கேட்கிறபடி ரதமேறிச் செல்லப்போகிறேன்?" என்றான். பீரஸ் கடகடவென நகைத்து, "உலகத்தில் அழகுடைய நங்கை இவளைத் தவிர வேறு யாருமில்லையோ? ஒருத்தியை அடையக்கூடாமல் போனால், உலகமே பாழ்பட்டுப் போயிற்றென்று கருதுவதும் உண்டோ? ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு வஸ்துக்களிடம் அதிக ஆசைகொண்டு வாடுவது மனிதரியல்பு; இன்னும் சிலகாலம் போனால், நீ அல்ஸஸ்டிஸ்ஸை முற்றிலும் மறந்துபோவாய், அவளும் உன்னை நினையாள்; மற்றொரு கன்னியை நீ காதலிப்பாய்; அவளும் வேறு ஒரு புருஷன்மீது மோகங் கொள்வாள். ஆதலால், நீ அவளைப்பற்றிய சிந்தனையை ஒழித்துவிடு; வேறு மங்கையை மணந்துகொள். மனையாளில்லாத வீடு சுடுகாடு ஒக்கும் என்று அறிவுடையோர் கூறுகின்றனர். இல் வாழ்வானே உலகுக்குப் பெருந்துணைவன்" என்றான்.

அட்மீடஸ் பெருமூச்சு விட்டு, "ஹா! என் பிதாவே! என் மனம் அல்ஸஸ்டிஸ்ஸை விட்டு வேறு எம்மங்கையின் பாலும் செல்லாது; அப்படிச் சென்றால் மகா துரோகியன்றோ நான்?" என்று சொல்லி, வியசன முகத்துடன் மன்னன் சமுகம் நின்றும் அப்பால் சென்றான். தன் மகனைத் தேற்றுவது தற்காலத்தில் அரிதெனக்கண்ட பீரஸ் அரசன் அம்மட்டோடு அவ்வார்த்தையை நிறுத்திவிட்டு, அவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து, பட்டத்தில் வைத்து விட்டான்.

அத்தியாயம் 3

சிங்காதனம் ஏறிய அட்மீடஸ் சிறிதும் சோம்பலில்லாமல் ராஜ்ய காரியங்களைப் பார்த்து, பகைவரை அழித்து, நட்பினரைச் சேர்த்து, அரண்களை அமைத்து, குடிகளைக் காத்து, குறைகளைத் தீர்த்து, துஷ்டர்களைத் தண்டித்து சிஷ்டர்களை ரக்ஷித்து, வறியோரை ஆதரித்து, விருந்தினரை உபசரித்து, ஆலயங்களை அமைத்து, திருவிழாக்களை நடப்பித்து, ஜனங்களெல்லாரும் களி கூறும்படியாகக் காட்சிக்கு எளியனும் கடுஞ்சொல் இல்லாதவனும் இருந்து வந்தமையால், அவன் தேயத்தில் காலந்தோறும் மழை பெய்தும், பயிர்கள் ஏராளமான பலனைத் தந்தும் பஞ்சம் பிணி முதலியன அகன்றும், கள்வர் துஷ்ட மிருகம் முதலியன ஒழிந்தும், ஜனங்கள் ஸுகித்து வாழ்ந்தார்கள்.

இப்படியாக ராஜ தந்த்ர முறைமை யெல்லாம் அறிந்து, முறை பிறழாது நடந்து, அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நான்கு புருஷ குணங்களையும் ஆபரணமாகக்கொண்ட அட்மீடஸ்ஸைப் புகழாத தேசமில்லை; மேலும் அவன் அதிதி போஜனம் செய்வித்தலில் அதிக துரந்தரனாய், அரசன் முதல் ஆண்டிவரையிலுள்ள எல்லாரையும் ஒப்பக் கருதி, இன்சொல் சொல்லி, இனிய முகத்துடன் வருவித்து, அறுசுவை யுண்டி வழங்கி, ஆதரித்து வந்ததனால், அவனது யசஸ்ஸு எல்லா நாட்டிலும் பரவிவிட்டது. யாரும் "அட்மீஸ்ஸைப்போல அதிதிபோஜன துரந்தரன் உண்டோ?' என்று சொல்லத் தலைப்பட்டார்கள்.

இப்படியாக நடந்துவரும் நாளில் ஒருநாள் இரவு உகாந்த காலம்போலக் கருக்கிருள் கம்மி, மேகம் கடகட வென்று கர்ஜித்து, மின்னல் பளீர் பளீர் என்று மின்னி,

ஸப்த மேகங்களும் ஒன்ருய் வர்ஷித்தால்போல சோனு மாரி பெய்து, பறவைகள், விலங்குகள், ஊர்வன, நீர்வாழ் வன எல்லாம் மதிமயங்கி, நடுநடுங்கி, உடல் ஒடுங்கி, அயர் வுற்றுச்சோர்ந்து 'அம்மவோ!' என்றரற்றி, கூட்டில் அடை வனவும் குகையில் நுழைவனவுமாகத் தத்தளித்து, புரு வின் குஞ்சைப் பருந்து இறகால் அணைத்தும், ஆட்டுக்குட் டிக்கு அடுப்புலி பால் கொடுத்தும், பாம்பின் குட்டியைப் பரிவோடு கீரி காத்தும் இப்படியாக ஒரு முகூர்த்த நேரம் ஜந்துக்கள் தத்தமக்குள்ள ஜன்ம வைரத்தை மறந் து, ஸர்வநாசகரமான அவ் இடிமழை மின்னல்களுக்கு அஞ்சி யடங்கியிருக்கும்போது, அட்மீடஸ் அரசன் தன் அரண்மனைக்கு வந்த பல அதிதிகளுக்கு குளிர் ஒழியக் கம் பளவஸ்திரங்களையும், பசி தணிய அறுசுவை யன்னத்தை யும், படுத்துறங்கப் பாய்களையும் அளித்துக் கொண்டிருந் தான். அவைகளைப் பெற்ற அவ்விருந்தினர் அரசனை மன மார வாழ்த்திக்கொண்டிருக்கையில், அவ்வறையின் வாசற் படி மேல் ஒரு புருஷன் சொட்டச் சொட்ட நனைந்தும், பாதாதி கேசம் வரையில் புழுதியால் திமிர்ந்தும், உடம்பு சோர்ந்தும் வந்து நின்ருன். அவனைப் பார்த்தவர், அன்று அடித்த அப்பெரு மழையில் அவன் பலகாததூரம் வழி நடந்திருப்பான் என்றும், ஆகாரம் நெடுநாளாய் உண் ணுதிருப்பானென்றும் விசதமாக அறிந்தார்கள். அவன் அழுக்கடைந்த கந்தையையே உடுத்திருந்தாலும், அவனு டைய தோற்றம் மிக்க கம்பீரமாகவும் திவ்ய தேஜஸ்ஸு டையதாகவும் விளங்கிற்று. பார்த்த அனைவரும் அவனை பிக்ஷுக வேஷந்தரித்த ஒரு மன்னவன் என்றே நினைத் தார்கள். ஏனெனில் இரந்துண்போருக்கு இயல்பான அச் சம், மெய் பணிதல், எளிய தோற்றம், யாசிக்கும் நோக்கம் ஆகிய இவைகள் அவனிடத்தில் காணப்படவில்லை.

வாசற்படிமேல் நின்ற அவன் உள்ளே எட்டிப் பார்த்து, அட்மீடஸ் அரசன் உட்கார்ந்திருந்ததைக் கண்டு, மத்தகஜம் போல கம்பீர நடையுடன் அவன் ஸமீபத்தில் சென்று, நின்றுகொண்டு, "மன்னவா! உன் சரணமாக வந்தடைந்தேன் யான்; கொடிய கொலை புரிந்து, கோரமான பாபப் புகை சூழ்ந்து, ஒளியிழந்து நிற்கும் என்னை நீ அங்கீகரிக்கிறாயோ? அன்றேல் இக் குளிரிலும் கொடுமழையிலும் அல்லாடும்படியாக விட்டுவிடுகிறாயோ?" என்றான்.

கேட்ட அட்மீடஸ், பெரு வியப்புற்று, அந்தப் புருஷன் கையிலுள்ள நீண்ட கோலையும், அரையில் கட்டித் தொங்கிய மகா வீணையையும் கண்டு, இவன் ஸாமானிய புருஷனாகத் தோன்றவில்லை என்று எண்ணிக்கொண்டு, "புருஷ ச்ரேஷ்டரே! யாவர் நீர்? கொலை புரிந்த கொடும் பாவம் உம்மைச் சூழ்ந்திருக்குமானால், தக்க பிராயச்சித்தம் அறிந்து செய்யவேண்டும்; கடவுள் உம்மைப் பரிசுத்தராக்குவார்; அரசரிடத்து வந்து சரணம் அடைந்தால், அவர் என்ன செய்யக்கூடும்?" என்றான்.

அப்புருஷன், "அரசே! எனது பாவம் பிராயச்சித்தத்தால் போவதன்று. நான் செய்த காரியத்துக்குப் பிரதியாகத் துன்பம் அனுபவித்தே ஆகவேண்டும்; ஒரு வருஷ காலம் ஒரு நரனுக்கு நான் அடிமைத் தொழில் செய்தால் தான், என் பாபம் விமோசனம் ஆகுமென்று அறிந்து, உன்னண்டை ஏவல் தொழில் செய்ய வந்திருக்கிறேன்; நீ உனது பசுக்களை மேய்க்கும் இடையர்களில் ஒருவனாக என்னை அமர்த்திக் கொள்வாயா? யான் ஆர் என்றும் எங்கிருந்து வந்துளேன் என்றும் எக் கொலை புரிந்தேன் என்றும் இப்பொழுது உனக்கு நான் சொல்ல மாட்டேன்; நீ என்ன விடை அளிக்கிறாய்? உண்டு, இல்லை என்றவற்றில் ஒன்று சொல்லு" என்றான்.

அட்மீடஸ் வியப்பு அதிகரித்தவனாய், அவ்வேற்று மனிதனைப் பார்த்து, "திவ்ய புருஷனே! உன்னை இம் மழையிலும் இருளிலும் நான் போ என்னேன்; உமது இஷ்டம்போல எனது மாளிகையை நீர் உபயோகிக்கலாம்" என்று சொல்லி, குற்றேவல் செய்வாரைக் குறிப்பாக நோக்கினான்.

சைகை அறிந்த அவர்கள் அப் புருஷனை மஞ்சன சாலைக்கு அழைத்துச் சென்று, சுகந்தம் வீசும் பனிநீரினால் நீராட்டி, பூந்துகில் உடுப்பித்து, அறுசுவை யன்னம் புசிப்பித்து, மற்றும் பல உபசாரங்களும் செய்து, ராஜ ஸமுகம் இட்டு வந்தார்கள். விடாய் தீர்ந்த அப் புருஷன் மிக்க மகிழ்ச்சியுடையவனாய், "அரசே! எனது துஷ்க்ருத்யத்தைக் கேட்டறிந்தும், என்னை வெளியில் துரத்தி விடாமல் அன்னமளித்து ஆதரித்தையே! உன்னிலும் தர்மிஷ்டன் யாருளன்? உனக்குத் தக்க ஸமயத்தில் உதவி செய்யும்படி கடவுள் எனக்கு கருணை புரிவாராக" என்று சொல்லி, "மன்னவா! எனக்கு வீணை வாசிக்கும் அப்யாசம் சிறிது உண்டு; உத்தரவானால் தெரிந்தமட்டில் சிறிது மிழற்றுவேன்" என்றான்.

வாழைப்பழம் விரும்பாக் குரங்குண்டோ! கேட்டது தான் தாமதம்; உடனே இறைவன், "ஹா! ஹா! நல்லது! நல்லது! இந்தப் பரமோபகாரம் உம்மை யன்றி யார் இப்போது செய்யப் போகிறார்? ஆரம்பிக்கலாம்" என்றான். அப்புருஷன் இசை கூட்டி, கோகிலம்போன்ற தனது இனிய குரலை எடுத்துப் பாடத்தொடங்கினான். தொடங்கவே, அரசனும் அங்குள்ளாரும் ஒன்றும் தோன்றாராய் ப்ரமித்து, பஞ்சேந்திரியங்களும் அக்கானத்திற்கு வசப்பட்டு, ஆவெனத் திறந்தவாயினராயிருக்க, குதிரை பசு முதலிய மிருகங்களும வாயிலுள்ள புல் சோர, கண்ணீர்

வார, சித்திரப்பாவைபோல அடங்கி மெய்ம் மறந்து நின்றன. வெளியில் அடித்து மோதிப் பொங்கும் உகாந்த கால மாரிபோன்ற பெரும புயலும் இக்கானத்தால் வசப்பட்டு ஒய்ந்து போயிற்று. சந்திரனும் இசை கேட்க வந்தான் போன்று பளீர் என வானில் பிரகாசித்தான். ஆற்றில் ஓடிக்கொண்டிருந்த நீரும் ஸ்தம்பித்து நின்றுவிட்டது. மரங்களும் குப்பெனத் தளிர்ப்பனவும் பூப்பனவும் பழுப்பனவும் ஆயின.

இத்தகைய கானத்தை அப்புருஷன் ஒரு முகூர்த்த நேரம் சராசரங்கள் ஸகலமும் ஆனந்தமடையும்படி செய்த பிறகு, அட்மீடஸ்ஸை நோக்கி, "அரசே! நான் சற்று ச்ரம பரிஹாரம் செய்துகொள்ளுகிறேன்; நாளைமுதல் நான் உனக்கு இடையனாக ஊழியம் செய்யவேண்டும்; விடிந்தவுடன் இடையர்க்குள்ள சின்னங்களான கம்பளி கோல் முதலியனவற்றை அளிக்கும்படி உத்தரவு செய்" என்றான்.

அட்மீடஸ் பெருமூச்சு விட்டு, "யாழ்வல்லோய்! உம்மை நான் ஸாமானிய புருஷனாக மதிக்கவில்லை. பாப ஜன்மமுடைய எனக்கு நீர் ஊழியம் செய்வது அநுசிதம்; உம்மை நான் ஆயுள்வரையில் தெய்வமாகப் பூஜித்து வர ஆவலுள்ளவனாய் விட்டேன்" என்றான்.

அப் புருஷன், "இல்லை அரசே! நான் பாப விமோசனம் பெற வேண்டுமென்றால், உன் பசுக்களை மேய்த்தே ஆக வேண்டும்; ஒரு வருஷகாலம் சென்ற பிறகு நான் பரிசுத்தனாய் விடுவேன்; அப்பொழுது ஆலோசித்துக் கொள்ளலாம்" என்றான்.

அத்தியாயம் 4

ஸூர்யோதயத்திற்கு முன்னமே தினமும் எழுந்து, கொட்டிலிலுள்ள பசுக்களை ஓட்டிக்கொண்டு போய், நன்ருய் புல் மேய்வித்துக் கறக்கும் நேரத்திற்கு வீடு கொண்டு வந்து சேர்த்து, கறந்தான பிறகு மறுபடி மேய ஓட்டிக் கொண்டு போய் திமிர மேய்வித்துக் கொண்டு சூர்யாஸ்த மனத்திற்கு முன்பே கொட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்து வரும் அப் புருஷனது காலத்தில் பசுக்கள் குடம் குடமாகப் பால் சொரிந்தன; கன்றுகள் குழகுழவென்று வளர்ந்து துள்ளின; பூமி செழித்து ஏராளமான தானியத்தைவிளைவித்தது. புதிதாக வந்த இடையனே அரசனது பசுக்களைப புல் நிறைந்த இடத்திற்கு ஓட்டிச் சென்று, ஸ்வயேச்சையாக அவைகளை மேயவிட்டு, நீரருவி ஓரங்களில் தான் உட்கார்ந்து, ஆனந்தமாகத் தன் வீணையைச் சுருதி கூட்டிப் பாட ஆரம்பிப்பான். அவனது குரலைக் கேட்பதுதான் தாமதம்! உடனே குயில் கிளி முதலிய பக்ஷிகளும், மான் பசு முதலிய மிருகங்களும் அணில் கீரி முதலிய ஜந்துக்களும், வரால் கெண்டை முதலிய மீன்களும் அவனைச் சூழ்ந்துகொண்டு, கூத்தாடி, உடலுருகிக் கண்ணீருகுத்து, தேஹமே மறந்து, ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்து, ஆவெனத் திறந்தவாயினவாய் அசைவற்று நிற்கும். சிங்கம் புலி முதலிய துஷ்ட ஜந்துக்களும் அவ் வீணா கான ரஸத்தால் வசியம் செய்யப் பெற்று, தங்களுக்கு இயல்பான கொடுந் தொழிலை மறந்து, எல்லாப் பிராணிகளோடும் நட்புடைமை பூண்டது. பாம்பும் தேளுங்கூட விஷ மொழிந்து, பிள்ளைப்பூச்சிகள் போல ஆயின. ஊரிலுள்ள கள்வர், கொலைஞர், குடியர், வெறியர் முதலிய யாவரும் தத்தமது தீத்தொழிலை மறந்து, ஸன்

மார்க்கராய் விளங்கினர். இப்படி யெல்லாம் ஆகவே, பீரி நாட்டில்,

"வெஞ்சிலேயே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டாற்றுவன—கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு."

இதைக் கண்ட அட்மீடஸ் அரசன் அம்மகா புருஷன் மீது அன்பும் பக்தியு முடையவனாய், எக்காரியத்திலும் அவனுடைய ஆலோசனையைக் கேட்டு அதன்படி நடந்து வர, அவனுக்கு ஜகத்தில் சத்துருவே அபாவமாகிவிட்டது. அஃதல்லாமல், உட்பகை கொண்டு நெஞ்சிற் கரவுற்றிருக்கும் குறும்பரும் அவனை அஞ்சிப் பணிவாராயினர்.

இப்படியாக அவன் உறுபகை ஒடுக்கி, பீரிநாட்டை ஆண்டுவருகையில், அயோல்காஸ் தேயத்து அரசனான பெலியஸ் மன்னன் இறந்துபோக, அவன் மைந்தனான அகஸ்தஸ் தனது ஏழு ஸஹோதரிகளுக்கும் மணம் செய்யக் கருதி, தேசமெங்கும் மணவோலை போக்கினான். கேட்ட வீரர்களான அரசர்கள் ஆயிரக்கணக்காய் வந்து அயோல்காவின்,

"புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிது உறைந்தார் — தெள்ளரிக்கண்
பூமகளை ஒத்த பொருவேல் பெலியஸ்தன்
கோமகளிர் தம்மைமணங் கொண்டு."

கண்ட அகஸ்தஸ் அவ்வீரர்களுக்குள் மல்யுத்தம், லக்ஷியமறுத்தல், காளைபிடித்தல், புலிவதைத்தல் முதலிய வீரசூல்கங்களை நிர்ணயித்து, இயற்றில் இன்ன இன்ன சுலகத்தைக் கொடுக்கிறவனுக்கு இன்ன இன்ன கன்னிகையைத் தருவேன் என்று தெரிவித்தான். அக் கன்னி

கைகளின் அழகில் ஈடு பட்ட பல காளையர்கள் தோள் கொட்டி ஆரவாரித்து, "ஹா! ஹா! நமது சௌரியத்தைக் காட்ட நல்ல அவகாசம் வாய்த்தது! ஒரு கை பார்த்து விடுவோம்" என்று குதூஹலித்தார்கள். ஆனால் அல்ஸஸ்டிஸ்ஸை விரும்புவான் கொடுக்கவேண்டிய வீரசுல்க்கமோ எல்லாவற்றிலும் மிகக் கஷ்டமானது. அஃதலால், அவ்வரன் சிங்கமும் யானையும் பிணைத்துள்ள ரதத்தில் ஏறி வரவேண்டுமென்றும் ஏற்பாடு செய்துவிட்டபடியால் வெகு சூரர்கள் மனம் நொந்து போனார்கள். ஆனாலும் 'ஆசை வெட்கமறியாது' என்பது உண்மையாதல் பற்றி, பல இளைஞர்கள் அக்கடினமான பரீக்ஷையையும் கொடுக்க ஸித்தரா யிருந்தனர்.

இப்படியாக அயோல்காஸ் நாடு உல்லோலகல்லோலப் படுகையில் கல்யாண சமாசாரம் அறிந்த நமது அட்மீடஸ் அரசன், "ஆ! நாம் எப்படி அல்ஸஸ்டிஸ்ஸை அடைவோம்? யானையையும் சிங்கத்தையும் ஒக்கப் பிணைத்த ரதமன்றோவேண்டும்! எந்தமாயாவி அத்தகைய தேர்கொண்டு வந்து அந்த ஸௌந்தரியைக் கொள்ளை கொண்டு போக இருக்கிறானோ?" என்று எண்ணமிட்டு ஏக்கங் கொண்டவனாய், ஓர் ஆற்றின் கரைமேல் உட்கார்ந்து புலம்பிக்கொண்டிருக்கையில், யாழ்வல்லோனாகிய இடையன் அவனை அணுகி, "வேந்தே; கவலை வேண்டாம்! உனக்கு அம்மங்கை கிடைப்பாள்! பெலியஸ் சொன்னபடி ரதம் ஒன்றுதானே உனக்கு வேண்டுவது? அதை நான் தருவேன்; அல்ஸஸ்டிஸ்ஸுக்காக விதித்திருக்கும் வீரசுல்க்கத்தை மாத்திரம் நீ முதலில் கொடுத்து, யாவரினும் மேலான சூரனென்று முற்படு; அதற்கு மறுநாள் பகல் ஸரியாகப் பதினைந்து நாழிகைக்கு அதோ தெரிகிற "ஹீகேட்" தேவியின் வாசலில் என்னை நீ ஸந்தித்தால், சிங்கமும் யானையும் பிணைத்த ரதம் தரு

வேன்; அதில் உன் ஹ்ருதய நாயகியை ஏற்றிக்கொண்டு வரலாம்; ஆனால் நீ ஒன்று அவசியம் செய்தாகவேண்டும்; திரும்பி மனைவியுடன் களிப்புற்று வரும்பொழுது, அத் தேவியை நமஸ்கரித்துப் பூஜை செய்துவிட்டு வா; மனைவி வாய்த்த மகிழ்ச்சியில் உகை மாதாவாகிய அத் தேவியை மறந்துவிடாதே; மறந்தையேயானால் உன் குடிக்கு ஹானி வந்தது என்றறி'' என்று சொன்னான்.

கேட்ட அட்மீடஸ், "ஹா! ஹா! ரதம் கிடைக்குமானால், ரணகளத்தில் என்னை ஜயிக்கும் வீரன் ஒருவன் இருப்பானா? யமனேவந்து எதிர்த்தாலும் அஞ்சாது தாக்கி அழிக்கவல்லேனே; அல்லாதுபோனால் என் ஆவியை ஒழிக்கத் துணிவேனே; இவ் விரண்டில் ஒன்றின்றி என் கண் முன்னே என் ஆவியனையாளை மாற்றான் ஒருவன் கவர்ந்து செல்ல விடுவேனோ? தேவி 'ஹீகேட்' விஷயத்திலோ அடியேன் என்றைக்கும் பக்தி பூண்டவனன்றோ? எனக்குப் பரமோபகாரம் செய்து, என் ஆவியை எனக்குத் திரும்பவும் அளிக்கும் தேவியை நான் மறப்பது எங்ஙனம்?'' என்று சொல்லி, ஸந்தோஷத்தால் உடம்பு பூரித்தவனாய், ஸர்வாபரணங்களையும் அணிந்துகொண்டு, அயோல்காஸை நோக்கிப் புறப்பட்டான்.

"பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபால் போயினதன்
சிந்தைகெடுத்து அதனைத் தேடுவான் — முந்தி
வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார்
(நாமான்=ஷிரான்) பால் கற்றுணர்ந்தோர் நந்து''

உடனே அவர்கள் அவனண்டை வந்து, "நண்பா! அட்மீடஸ்! உனக்குத்தான் அல்ஸஸ்டிஸ் ஸொந்தம் போலும்! எங்கள் கையிலிருந்தும் அவளை நீ கொத்திக் கொண்டு பறந்து விடுவாயோ? பார்ப்போம் அதைத்

தான் ஒருகை'' என்று பரிஹாஸம் செய்தார்கள். அதற்கு அவனும் அவர்களைத் திருப்பிப் பரிஹாஸம் செய்ய, இப்படியாக வீரர் அனைவரும் களித்து விளையாடிக்கொண்டிருந்தனர்.

அத்தியாயம் 5

அல்ஸஸ்டிஸ் காதல் நோயால் கருத்தழிந்தது

அட்மீடஸ் செய்தி யிப்படியாக, அல்ஸஸ்டிஸ்ஸின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதைப் பார்ப்போம்: அட்மீடஸ்ஸினிட மிருந்து ஹிரண்யகேசம் பெற்ற அவள் ஒவ்வொருநாளும் தூங்கி எழுந்ததும், கொத்தாகிய அக்கேசத்தை எடுத்து, மார்போ டணைத்துக்கொண்டு, பெருமூச்சு விட்டு, "ஹா! ஹா! என் காதலன் கொணர்ந்த கனக ரோமமே! என் முன்னோரைக் காத்த முரண் ஆட்டு ரோமமே! வீரரை அழைத்த மேன்மையுறும் மயிரே! உன்னோடன்றி வேறி யாரோ டுரைப்பேன்? வருஷம் பலவாய்க் கண் தூங்காது, மன்னன் அட்மீடஸ் வருவார் வருவாரென் றனுதினம் நினைந்து திசையினை நோக்கி, மனமும் புண்பட்டுக் கண்ணும் பூத்தது; என் கருத்தறிய யாருளர்? நீ சொல்; முன்னம் நீ அம் முரண்வலி அரசனை உன்னிடத்திற்கு அழைத்திருக்கிறையே! என்னிடத்தின்று அவரை விரைந்து ஏகும்படி நீ ஏன் செய்திலையால்? அவர் வாராது ஒழியார் என் மனத்தாசையால், ஓர் ஆயிர கோடி இடர் ஸஹித்து, நீரால் நிறைந்த இருகண் சிவக்க, "மாரா! அட்மீடஸ்ஸே! என்பேன்! நீ கேட்டிருந்தும் ஏனோ என்மேல் இரக்கங் கொண்டிலை இரணிய கேசமே!" என்று புலம்புவாள். அவளுக்கு உணவிலும் உடுப்பிலும்

கூட ஆசையற்றது. தனது ஸஹோதரிகள் ஆறு பேரும் உண்டு உடுத்துக் களித்து, ஓடி உலாவி ஆடிப் பாடி வர, இவள் மாத்திரம் மாளிகையில் தனித்து ஒரு மூலையில் உட்கார்ந்து, ஏக்கங் கொண்டவளாய் பெருமூச் செறிந்து வாடிக் கிடப்பாள்; ஆகாயத்தில் பறந்து செல்லும் ஒவ்வொரு பக்ஷியையும் பார்த்து அட்மீடஸ்ஸுக்குத் தூது விடுவாள்; அந்திமாலை தோற்றும் பொழுதும் சந்திர உதயம் காணும்போதும் விம்மி வெதும்புவாள்.

இப்படியாகப் பல நாள் வருந்திய பிற்பாடு, அவளுக்கும் அவள் ஸஹோதரிமார்க்கும் அகஸ்தஸ் திருமணங் கோடிக்கவே, அவள் மனம் பறை யடித்தாற்போல முன்னிலும் அதிகமாகத் துடித்தது. ஏனெனில் அவளது சஹோதரன் விதித்த கலியாணம் ஆஸுரவிவாஹமாகையால் அரும் பொருவினையில் எவன் யாவரினும் மேலான சூரனாய் வெளிப்படுவானோ அவனே அவளை மண மாலை சூட்ட வேண்டியவனாவான்; அத்தகைய வீரர்க்குள் அட்மீடஸ் ஒருவனா யில்லாது போனால் என்ன செய்கிறது? அல்லது அந்தப் பொருவினைக்கு அட்மீடஸ்வாராது போனால் யாதுசெய்வது? "என் நெஞ்சம் அந்த மகாவீரனுடன் சென்று விட்டதே! அதை அவர் அடிக்கீழ் ஸமர்ப்பித்து விட்டேனே! இனி அது அவரது ஸொத்தல்லவோ? அதை நான் எப்படி மற்றொருவனுக்கு அளிப்பேன்? அப்படிச் செய்தால், தத்தாபஹாரம் அன்றோ அது? அந்த மகா பாதகத்தை எப்படிச் செய்வது? கடவுளே! உன் கருணை எப்படி யிருக்குமோ? என் ஆசை நாயகரை இப் பொருவினைக்கு உரிய காலத்தில் வருவித்து, வீரர்க்குள் வீரனுக்கு வையேல், உன் திருவடிகளை என்றைக்கும் மறவேன்; அவரது 'இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும், சந்திரவதனமும், தாழ்ந்த கைகளும், ஸுந்தர மணிவரைத்தோளும்'

என் மனத்தை அபஹரித்துப் போயினவே. ஹா! ஹா! எனக்கு இக்கேசத்தைக் கொடுத்ததும் அவர் ஒரு புன் முறுவல் செய்தாரே, அது என் உயிரையே உண்டுவிட்டது! 'கடந்தரு மதம் கலுழ் களி நல்யானைபோல்' அவர் நடந்தது என் உள்ளம் நண்ணிக் கிடக்கின்றது; அதை விட்டு அது எந்நாளும் போகாது! ஹே! கருணையங்கடலே! பக்தஜன ரக்ஷகா! என்ன செய்வேன்? என்ன செய்வேன்! அவர் வீரர் அனைவரையும் ஜயித்து வீரர்க்குள் வீரனாய் விளங்கினலும், சிங்கமும் யானையும் பிணைத்த தேரொன்று கொண்டு வரவேண்டுமே! அது எப்படி ஸாத்யம்? ஆ! ஆ! நான் இப்படி எல்லாம் புலம்புகிறேனே! அவர் என்னைப் பற்றி நினைக்கிறாரோ இல்லையோ? என்னிலும் அழகிய கன்னி இல்லையா? அவர் எண்ணம் எப்படியோ? என்னையே அவர் நினைத்திருக்க வேண்டுமென்பது தான் என்ன ஆவச்யகம்? நினைத்திருப்பாரானல், இத்தனை வருஷமாக ஏதேனும் சிறிது ஸமாசாரம் தெரிவித்திருக்கமாட்டாரா? அவருக்கென்ன? ஆளப் பூமியுண்டு; அன்புகொண்ட பிரஜைகளுண்டு; கேளிர் பல நண்டு கிட்டாததுயாதுண்டு? ஆதலால் அவரைப் பற்றி நான் ஏன் அதிகமாக நினைத்து மனம் புண்படவேண்டும்? நாளையே நான் என் ஸஹோதரனிடம் சென்று, 'அண்ணா! நான் நித்திய கன்னியாயிருக்கத் துணிந்துவிட்டேன்; எனக்காக நீ எவரிடமும் வீர சுல்கம் எதையும் கேட்கவேண்டாம்' என்று சொல்லி விடுகிறேன்;" என்றாள். பின்னையும், "ஆ! என்ன இப்படியெல்லாம் சொல்லுகிறேனே! அன்று அவர் 'அட்மீடஸ்ஸுக்கு அல்ஸஸ்டிஸ்ஸே மனைவி; அல்ஸஸ்டிஸ்ஸுக்கு அட்மீடஸ்ஸே கணவன்' என்று உம்மை சாக்ஷி வைத்துச் சொல்லிப் போயினரே! அவர் சுத்த வீரரல்லரா? சொன்ன சொல்லை அழித்துப் பேசுவரா? அது எங்கே? அவர் இந்நேரம் இங்

நாட்டுக்குப் பறந்து பறந்து வந்து கொண்டிருப்பர்! 'பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்து' என்பது உண்மைதான்; கடலைக் கடந்து கனகரோமம் கொணர்ந்த சூரற்குச் சிங்கமும் யானையும் சேர்ந்திழுக்கும் தேர் கொணர்தல் அரிதோ? நிச்சயம் அவர் பொருவினையில் ஜயித்து, என் கையைப் பற்றுவர்! அவரைப் பற்றி எத்தனையோ கதைகள் தினமும் கேட்டு வருகிறேனே! அவரது வள்ளன்மையும், புத்தி நுட்பமும், கடைப்பிடியும், என்னையே நினைத்து அவர் எக் கன்னியையும் கண்ணெடுத்துப் பாராது துறவிபோல வாழ்வதும் என் காதிற்கு எட்டவில்லையா? சிச்சீ! ஸ்த்ரீ புத்தியே கெட்டது! புருஷர்களிடத்து ஐயங் கொள்வதே ஸ்திரீகளுக்கு இயல்பான துர்குணம்! பகவானே! எப்படியிருந்தாலும் நீ என் ஹ்ருதய நாயகனோடு என்னைச் சேர வைப்பாயா? அல்லாக்கால் உன் திருவடியில் என்னைச் சேர்த்துக்கொள். நீ எல்லாம் வல்லவன்; எல்லா உயிர்களின் உள்ளேயும் இருந்து, அவற்றை ரக்ஷிப்பவன்; 'கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்று அமுதளிக்கும்' நீ பெண்ணாகிய என்னைக் கைவிடுவாயோ?'' என்று பலப்பல புலம்பிய பிறகு சோர்ந்து நித்திரை போய்விட்டாள்.

மறுநாள் வீரர்கள் கூடிப் போர் செய்து, மங்கையரைப் பெறவேண்டிய நாளாதலால், முதல் நாளே எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். அன்று சூரியன் உதித்தது முதல் அல்ஸஸ்டிஸ், ராஜமாளிகையின் மேல்மாடத்திற் போய் உட்கார்ந்து, ராஜகுமாரர்கள் வரும் வழியை உற்று நோக்கிக்கொண்டு இருந்து, கொடிச்சீலை கட்டிய தேர்கள் தூரத்தே வருகையிலேயே, "ஆ! ஆ! இது அட்மீடஸ்ஸின் தேராக இருக்கக்கூடாதா? அது அட்மீடஸ்ஸின் தேராக இருக்கக்கூடாதா? என்று

படபடக்கும் மனத்துடன் கண் பூத்துப்போக உற்று நோக்குவாள். அவை அருகில் வந்ததும் ஜனங்களின் நெருக்கத்தாலும் புழுதியின் மிகுதியாலும் உள்ளிருப் பவரை அறியமாட்டாது வாடி, ஹா, எனப் பெருமூச்சு விட்டு, "நான் செய்த பாக்யம் இவ்வளவுதான்!" என்று விம்முவாள்.

இப்படி இவள் காதல் நோயினால் கருத்தழிந்து வாட, அரண்மனைவாசலிலே எள்ளிட இடமில்லாமல் அரச குமாரர்களும், அமைச்சர் குமாரர்களும், தண்டத் தலைவரும், தந்திரத் தலைவரும், மல்யுத்தம் வல்லுநரும், வில்யுத்தம் வல்லுநரும், வேல் வாள் வல்லுநரும், ஓட்டம் பிடி வல்லுநரும், முஷ்டியுத்தம் வல்லுநரும், தொந்த யுத்தம் வல்லுநருமாகப், பல்வேறு தேசங்களினின்றும் வந்து, அம் மங்கைகளையே நினைத்து, 'நான்தான் ஜயிப் பேன் நான்தான் ஜயிப்பேன்' என்று தோள் கொட்டித் தொடை தட்டி, கொக்கரித்து ஆரவாரித்து, கள்ளைக் குடித் தவர் போலத் துள்ளிக் குதித்துப் பார்ப்பவர்க்கு விநோதத்தை விளைத்தார்கள். இவர்கள் இப்படி ஒருபக்கமிருக்க, மற்றொருபால் போரினைக் காண வந்தோ ரும், வீரரைக் காண வந்தோரும், மணத்தைக் காண வந்தோரும், மங்கையைக் காண வந்தோரும், உண்டுபோக வந்தோரும், தொண்டு செய்ய வந்தோரும், ஊர் பார்க்க வந்தோரும், பேர் கேட்க வந்தோருமாகக் கூட்டங் கூடி, கடல்போலப் பேரிரைச்சலிட்டுக்கொண்டு இன்ன இன்ன வீரருக்கு இன்ன இன்ன சக்தியுண்டு என்றும், இன்னார் இன்னார் இன்னாரை வெல்லக்கூடும் என்றும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்படியாக அகஸ்தஸின் அரண்மனை அமர்க்களப் பட, நமது அட்மீடஸ் அரசன் தனது ரதத்தையும்

குதிரையையும் பாகன் வசம் ஒப்படைத்து, நகரத்தினுள் கொண்டுபோய் அரண்மனைக்குள் தக்க ஓர் இடத்தில் விட்டுக் கட்டிவைக்கும்படி உத்தரவு செய்துவிட்டுத் தான் வெளியில் ச்ரமபரிஹாரஞ் செய்துகொள்வதற்காகத் தங்கி விட்டான். நிச்சப்தமான இடத்தில் தனித்திருந்த அவன் மனத்தில் அல்ஸஸ்டிஸின் ஞாபகமும் அவளை ஜயித்துக் கொண்டுபோகச் செய்யவேண்டிய உபாயங்களும் உதித்தன. "ஹா! அல்ஸஸ்டிஸ் என்ன? ஸாமான்யமான ரூபவதியா? அவளுக்கிணையாக யாரைச் சொல்வது? எல்லாரும் ரூபவதி அவளும் ரூபவதியா? அவளுக்காக உயிரை விட நம்மைப்போல எத்தனையோ பேர் ஸித்தரா யிருப்பரே! ஹெர்க்யுலீஸ் அச்சிலிஸ் முதலிய மகா வீரர்க ளோடும்பிறரோடும் நமக்குமற்போரும்விற்போரும்விளையு மல்லவோ? நாம் ஜயிப்போமா? அன்றித் தோற்றாலோ, உயிருடன் ஊர் திரும்புவதில்லை. இது திண்ணம்; ஆம், ஆம்! எவன் ஒருவன் யானையும் சிங்கமும் இழுக்கும் ரதம் ஊர்ந்துவருவானோ அவனே அல்ஸஸ்டிஸ்ஸை மணப்பான் என்னும் சோதிட வாக்கு உண்மையானால், நான்தானே அந்த யாழ்வல்லோன் அனுக்ரஹத்தால் அத்த கைய தேர் கொணரப் போகிறேன்! பின்னை ஏன் நான் எல்லா மகா வீரரையும் ஜயிக்கக் கூடாது? என்னைவிட அந்த ஸௌந்தரியை அதிகமாகக் காதலித்தவர் யாருளர்? என்னைவிட அவள் விஷயமாக அதிகம் நினைந்து உருகிய வர் யாருளர்? எப்படியிருந்தாலும், யாரை எதிர்த்தாலும் நான் அவளை ஜயித்துக்கொண்டு போயே தீர்வேன்" என்று உறுதி செய்துகொண்டான்.

இதற்குள் ஸூர்யனும் மேற்றிசையில் மறையப் போனான்; அட்மீடஸ், "இனி நமக்கு இங்கிருக்க ஸமய மன்று; நாளைக் காரியத்துக்கு எல்லாம் ஸித்தமாக்கிக்

கொள்ள வேண்டும்; அகஸ்தஸ் மாளிகைக்குச் செல்வோம்; ஒருவேளை அல்ஸஸ்டிஸ் தென்படுவாளாயின் பரம ஸந்தோஷமே" என்று எண்ணிக்கொண்டு, அரண்மனையில் நுழைந்தான். ஆங்கிருந்த அவனது ஸேவகர்கள், அவனை ஸுகந்த நீரினால் மஞ்சனமாட்டி, சிறந்த பீதாம்பரம் உடுப்பித்து, ராஜஸதஸ்ஸுக்குப் போகத் தக்க அலங்காரங்கள் எல்லாம் செய்தார்கள். அதனால் ஸூர்யன் போலத் தேஜஸ்ஸு படைத்த அவன் மிக்க கம்பீரத்துடன் அகஸ்தஸ்ஸும் மற்ற மகா சூரரும் இருந்த மண்டபம் குறுகினான்.

கண்ட அனைவரும் இவனுக்கு எழுந்து மரியாதை செய்து, குசலம் விசாரித்தார்கள். அவர்களில் பலர் அவனோடு கால்சிஸ் சென்று கனக ரோமம் கொண்டு வந்தோராதலால், அவர்கள் அவனை தழுவிக்கொண்டு, பழைமை பாராட்டினார்கள். மற்றும் பலர் அவனது கல்விச்சாலைத் தோழர்களாதலால் விளையாட்டாகப் பல சொல்லிக் கேலி பண்ணினார்கள்.

அவனுக்கு மனம் அதில் செல்லவே இல்லை; அவன் கண்ணோ அம் மண்டபத்தை நாற்புறமும் சுற்றிற்று. அல்ஸஸ்டிஸ்ஸை அங்குக் கண்டிலனாதலால், அவ்விடம் பாழ் பட்டதாக நினைத்தான். தனது இளம் வயஸ்ஸுத் தோழர்களுடைய பரிஹாஸ வார்த்தைகளுக்கும் அவன் ஸரியான விடை கூறமாட்டாது தவித்தான். பிறகு விருந்து நடந்தது. அதில் அவன் உண்ணும் பதார்த்தத்தின் ருசியைக் கூட அறிந்திலன். கண்ட அவனுடைய தோழர் எல்லாரும், "ஸரி; இவன் இவ்வேழு குமரிகளில் யாரிடமோ கருத்தைச் செலுத்திவிட்டு, இப்படி உன்மத்தனாய்த் திரிகிறான்; எல்லாம் நாளை வெளிப்படும் இவன் எண்ணம்; ஏழு குமாரிகளுக்கும் தனித்தனியே வீர சுல்கங்கள் உண்

டல்லவா? இவன் எதைக் கொடுப்பான் நாளைக்கு? அப்போது இவனுடன் ஒருகை பார்த்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண் டிருந்தார்கள். இவனுக்கோ ஒன்றும் காதில் விழவில்லை; அல்ஸஸ்டிஸ் இவனது மனக்கோயிலைக் கைக்கொண்டுவிட்டாளாக, இவன் பித்தனைப் போல மயங்கியிருந்து, அகஸ்தஸின் ஸேவகர் அழைத்துச் செல்ல, சயனக்ருஹம் போய்ச் சேர்ந்து, சிறிதுகாலம் தனது ஹ்ருதய நாயகியை நினைத்து மனோ ராஜ்யம் செய்திருந்து, பிறகு நித்திரை போய்விட்டான்.

அத்தியாயம் 6

அட்மீடஸ் அல்ஸஸ்டிஸ்ஸை ஜயித்துக்கொண்டு போனது

விருந்துண்ணும் அட்மீடஸ்ஸைத் திரையிடுக்கு வழியாகக்கண்டு, நேத்திரங்களால் ஆனந்தத்தைப் பருகி யனுபவித்த அல்ஸஸ்டிஸ், தனது சயனக்ருஹம் குறுகியதும், "நமது நாயகருக்குப் போட்டியாய் நாளை வீராதிவீரர்கள் பலர் யுத்தம் செய்யக் காத்திருக்கின்றனரே; ஒருவேளை வீரப்போரில் அவர் அபஜயமுறுவாராளுல் நான் என்ன செய்வேன்? தீயினிற் பாய்ந்து மரிப்பது தான் உத்தமம் ஒன்று செய்யலாம்; கடவுள் பக்தர்களைக் கைவிடுவதில்லையன்றோ! நான் இவ்விராமுற்றும் கண் துயிலாது பகவந் நாம பஜனம் செய்து, எனது ஹ்ருதய நாயகருக்கு சிறந்த தேஹவலியும் ம்ருகங்களை வசீகரிக்கும் வசீகரண சக்தியும் அளி என்று அப் பகவானைப் பிரார்த்திப்பேன்; சரணமென்று அடைந்தோரைத் தாங்காது கைவிடுதல் அக் கருணையங் கடவுளுக்கு இயல்பன்றே" என உறுதிசெய்து கொண்டு, கண் நீர்மல்க, உடம்பு மாசடைய, உட்கார்ந்த

வண்ணமாகக் கடவுளிடத்துக் கருத்தைச் செலுத்திப் பிரார்த்தனை செய்துகொண் டிருந்தாள்.

கீழ் வான் வெளுத்தது. அரண்மனையில் பேரிகை எக்காளம் முதலிய வாத்யங்கள் கோஷிக்கத் தலைப்பட்டன. அல்ஸஸ்டிஸ்ஸின் சகோதரிகள் அம் மங்கள வாத்யங்களின் ஒலி யோடே, எழுந்து, மங்கள ஸ்நாநம் செய்து கொண்டு, தமது தங்கையைத் தேடிக்கொண்டு ஒவ்வோர் மண்டபமாகத் திரிந்தார்கள். கடவுளிடத்துக் கருத்தூன்றி, த்யானபரையாய் உட்கார்ந்திருந்த அவளுக்கு விடிந்ததும், வாத்யங்கள் கோஷிப்பதும், தனது தமக்கைமார் தன்னைக் கூவியழைப்பதும் ஒன்றும் தெரியவில்லை. கடைசியில் ஒரு சேடி இவளைக் கண்டு, வணக்கமாக, "அம்மா! அல்ஸஸ்டிஸ்! ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள்? உங்களை உமது தமக்கைமார் அழைக்கின்றார்களே! சூரிய உதயம் ஆய்விட்டதே! ஸ்நாநம் செய்து பட்டுடுத்து, கொலுமண்டபம் குறுகவேண்டாமா? உங்களுக்கு விதித்துள்ள வீர சுல்கத்தைக் கொடுப்போமென்று தோள் தட்டிக் குதித்துக்கொண் டிருப்பார் பல பேருண்டே; சீக்கிரம் எழுந்திருங்கள்; அலங்காரம் செய்துகொண்டு ராஜ ஸதஸ்ஸு போய்ச் சேர்வதற்குள் விடிந்து யாமம் ஆய்விடுமே" என்று சொல்ல, கனாக்கண்டு விழித்தவள் போல அவள் திடுக்கிட்டு எழுந்து, "இதோ வந்துவிட்டேன்" என்று அவளுடன் மஞ்சன சாலைபுக்கு நீராடி, வஸ்திரம் தரித்து, ஆபரணம் பூண்டு, அழகின் அதிஷ்டான தேவதையே போல அன்னம்போல நடந்து சென்று, தனது ஸஹோதரிமார் உட்கார்ந்திருந்த மண்டபம் சேர்ந்தாள்.

உதித்து ஒரு யாமமும் ஆயிற்று. அகஸ்தஸ் அரசன் வரவை நோக்கி ஆயிரக் கணக்கான வீரரும் லக்ஷக் கணக்கான ஜனங்களும் மிக்க ஆவலுடன் காத்துக்கொண்

டிருந்தனர். ராஜ கன்னிகைகளின் அழகையும் அலங்கா ரத்தையும் கண்ட ஜனங்கள், "இக் கன்னிகையர் எழுவரும் தேவாம்சம் பெற்றவர்களே! இல்லாது போனால், இந்த அயோல்காஸில் இவ்வளவு மகா சூரர்களும் கூடுவார்களா? முன் ஜேஸன் அழைக்க இத் தேசம் வந்தணைந்த ஜகதல ப்ரதாபர்களும், தொகையில் இவ்வளவு மிகப் பலரா யில்லையே!" என்று குதூஹலித்தனர்.

ஸ்திரீகளில் வேடிக்கை பார்க்க வந்தவரோ தமது எதிரே தோள் துடிக்க, மீசை படக்க, கூட்டிலடைத்த கொல் புலிபோலும், மந்திரத் தடையுண்ட வாளராப் போலும் பெருமூச்சு விட்டுக்கொண்டு, வீராவேசத்துடன் நிற்கும் மகா சூரர்களைக் கண்டு, "இவர்களில் பாக்யம் பெற்றார் யாரோ? ஓராயிரம் பேர் வந்திருக்கிறார்களே! எழுபேர்தாமே ஸந்தோஷமாகத் திரும்பிப் போகப் போகிறார்கள்?" என்று பேசிக் கொண்டார்கள்.

இப்படியாக அவரவர் தம்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டிருக்க, மிக்க ரமணீயமான ஒரு தேரில் இளஞ் சூரியனைப்போலத் தேஜஸ்ஸுடையவனாய் அகஸ்தஸ் மன்னன் வந்து சேர்ந்து, ஆஸனத்தில் அமர்ந் தான். உடனே கடல் ஒலித்தாற்போல எல்லாரும் கர கோஷம் செய்து ஆரவாரித்தார்கள். அவன் மந்தஹாஸ முகத்துடன் எதிரே நிற்கும் வீரர்களை நோக்கி, "மகா சூரர்கள்! இன்று உங்கள் பங்கில் கடவுளிருந்து உங்கள் மனோரதத்தை நிறைவேற்றுவாராக; எனது ஸகோதரி களில் ஒவ்வொருத்திக்கும் தனித்தனியே வீரசுல்கங்கள் நிர்ணயித்திருக்கிறேன்; அவற்றை எனது முதல் மந்திரி சொல்லிக்கொண்டு வருவார்; யார் யார் எவள் எவளை விரு ம்புவாரோ அவர் அவர் அவ்வவ்வ சுல்கத்தைக் கொடுக்கக் கடவீர்; அல்ஸஸ்டிஸ்ஸுக்காக நிர்ணயித்திருக்கும் வீர

சுல்கத்தைக் கொடுப்பது மிகக் கஷ்டமென்று நீங்கள் சொல்லக்கூடும்; ஆனால் அந்த மகா ரூபவதியின் குணத்தையும் கல்வியையும் நோக்குவீரானால் அது மிகுதியும் அற்பமாகத் தோன்றும். நீங்கள் பொருவினைக்கு ஆரம்பிக்கலாம்'' என்றான்.

உடனே வீர முரசு கரங்கத் தொடங்கிற்று. வீரர்களின் மனத்தில் களிப்போடு உற்சாகம் கிளர்ந்தது. அகஸ்தஸ் சொன்னபடியே அவனது முதன் மந்திரி ராஜ கன்னிகைகளுக்கு நிர்ணயித்திருக்கும் வீரசுல்கங்களை எடுத்துச் சொன்னான். உடனே மல் யுத்தம் தொந்த யுத்தம், விற்போர், வாட்போர், ஓட்டம்பிடி, யானை எதிர்தல், விடைபிடித்தல், புலி கடிதல், பன்றி கோறல் முதலிய அரியபொருவினைகள்தொடங்கின. "பூமி யதிர்ந்தது! புழுதி திமிர்ந்தது! மண் புரண்டது கண் இருண்டது, காது அடைத்தது மோதவடித்தது! ரோஷம் மிகுந்தது! ஓசை கிளர்ந்தது! பல்உதிர்ந்தது! வில் ஒடிந்தது! வாள் பிளந்தது! கால் தளர்ந்தது! கூச்சல் பெருத்தது! பாய்ச்சல் உருத்தது'' என்பதேயல்லாமல் இன்னார் இன்னார் இன்னார் இன்னாரை வென்றார் என்றுவது, இன்னார் இன்னார்க்கு இன்னது இன்னது ஸம்பவித்தது என்றுவது ஆங்குக் கூடியிருந்தோர் அறிந்திலர். உகாந்தகாலம் போலப் புழுதிப் படலங்கள் ஆகாயத்திற் கிளம்பியும், பெருங்காற்று மழையும் போல ஆரவாரம் அண்டங்களை எட்டியும், ஒருகாத தூரத்திருந்தார்க்கும் அச்சத்தை விளைத்தது!

கடைசியாக போரின் வேகமும் சிறிது சிறிதாகக் குறைய, ஓசையும் புழுதியும் அடங்கத் தலைப்பட்டது. ஸூரியனும் மேற்றிசை மலையை நண்ணுவானாயினன். அப்பொழுது யுத்தம் முற்றிலும் அடங்க, ஜயசீலராகி, கம்பீரத்

துடன் அகஸ்தஸின் முன் ஏழு ஆண்சிங்கங்களை வந்து நின்றார்.

கட்டியங் கூறுவோர் பக்கத்தில் நின்றுகொண்டு, ஒவ்வொரு வீரனையும் சுட்டிக்காட்டி, "இவர் இத்தேசமன்னர் இன்ன குடிப்பிறப்பை யுடையார்; இன்ன குணங்களைப் படைத்தவர்; ராஜகன்னிகையருள் இன்னார்க்காக யுத்தம் செய்து, இன்னார் இன்னாரை வென்றார்" என்று சொல்லிக் கொண்டு வந்தார். அகஸ்தஸ், அவர் அவர்களுக் கெல்லாம் மரியாதை செய்து, பூமாலைகளை அணிந்து, அந்தந்தக் கன்னிகைகளின் பக்கத்தில் உட்கார வைத்தான்.

கடைசியாக, அக்கட்டியங் கூறுவோர் அட்மீடஸ்ஸை சுட்டிக்காட்டி, மிக்க மகிழ்ச்சியுடன், "ஹே! அகஸ்தஸ் அரசே! இந்தப் புருஷ ஸிம்ஹம் செய்ததைக் கேளீர்! சிங்கத்தை வளைக்கும் நரிகள்போல இவரைச் சூழ்ந்து மற்போர் தொடுத்தார் பல்லாயிரம் பேர்; என்ன செய்தார் இவர் அவர்களை? காலால் ஆயிரம், கையால் ஆயிரம், தோளால் ஆயிரம், வாளால் ஆயிரம், பல்லால் ஆயிரம், வில்லால் ஆயிரமாக வீழ்த்தி, அல்ஸஸ்டிஸ்ஸின் மனத்தைக் குளிர்வித்தார்; மூன்று நாளாக முற்றிலும் துயில் மறந்த உமது அருமை அல்ஸஸ்டிஸ்ஸின் பக்கத்தில் இவரை உட்காருவியும்" என்றார்கள்.

கேட்ட அகஸ்தஸ், மிக்க மகிழ்ச்சி கொண்டு, அட்மீடஸ்ஸை நோக்கி, 'சுத்த வீரனே! உனது பராக்கிரமம் நான் முன்னமே அறிவேன்; நீ யாதொரு வீர சுல்கமும் கொடாமலே என் ஸஹோதரியை மணக்கத் தகுதியுடையவனே! ஆயினும் நான் எனது பிதாவின் உத்தரவை அலக்ஷியம் செய்யக் கூடாதாகையால், இப்படியாக ஆஸுர விவாஹம் செய்ய நேர்ந்தது! மேலும் இப்பொழுதே நான் உன்னை என் தங்கையின் பக்கம் உட்காருவித்து, மணம்

செய்து கொடுத்து விடுவேன் ; ஆனால் யோகியின் சொல் பழுதாகக் கூடாதாகையால், நீ சிங்கமும் யானையும் பிணைத்த ரதத்தைக் கொண்டு வந்தே ஆகவேண்டும்; இந்த மணமாலையை ஏற்றுக் கொள்'' என்று அவன் கழுத்தில் ஒரு பூமாலையை அணிந்தான்.

அட்மீடஸ், "அரசே! நாளை ஸரியாய்ப் பதினைந்து நாழிகைக்கு நான் அத்தகைய ரதம் கொண்டு வருவேன்; கடவுள் என்னைக் கைவிடார்'' என்று சொல்ல, கேட்ட அனைவரும், "இஃதென்னே இஃதென்னே! இவன் மல் வித்தையோடு மந்திர வித்தையுமா பயின்றுளன்?'' என்று வியந்தனராய், ஆரவாரித்தார்கள்

அன்று யுத்தத்தில் வென்றவர்க்கும் அகஸ் தஸ் தன் மாளிகையில் விருந்து நடத்தினான். அட்மீடஸ் ஸமம் நல்ல பசியோடு விருந்தை உண்டான். அவனுக்கு இவ்வளவு மனோ தைரியத்தையுங் கொடுத்தது அவனது விசித்திர இடையனாதலால், அவனைக் காணவேண்டும் என் னும் ஆவலால், இரவு முழுதும் அவன் நித்திரை செய்யாது படுக்கையில் புரண்டு கிடந்து, மறுநாள் விடிந்ததும், ஸ்நா னம் முதலியவற்றை முடித்துக்கொண்டு, 'ஹிகேட்' தேவி யின் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அத்தியாயம் 7

அட்மீடஸ் மணம் கோடித்தது.

கண்களை மூடிக்கொண்டும் கைகளைத் தலைமீது எடுத் துக் குவித்துக்கொண்டும், தியானபரனாய் 'ஹிகேட்' தேவி யின் ஸந்நிதியில் நின்றுகொண் டிருந்த தனது விசித்திர இடயனைக் கண்டதும் அட்மீடஸ், தான் கருதி வந்த காரி

யம் கைகூடிவிட்டதென்றே கருதி, குதூஹலத்துடன், "என் நண்பரே நண்பரே! உமது கட்டளைப்படியே ஸரியாகப் பதினைந்து நாழிகைக்கே வந்தேன்; தயை செய்ய வேண்டும்" என்றான்.

கேட்டுக் கண்விழித்த அவ்விடையன், "அதோ பார்; நீ வருவதன் முன்னமே எல்லாம் ஸித்தமாக வைத்திருக்கிறேன்; நான் செய்வதாக ஒப்புக்கொண்ட காரியத்தை வழுவிலாதே செய்து முடிப்பேன்; அவ்வாறே மற்றவரும் செய்யவேண்டு மென்பது எனது விருப்பம்; நீ களிப்பின் மதத்தினால் நான் சொன்னதை மறந்துபோகப் பேசுகிறாய்; ஜாக்ரதை" என்று மற்றொரு முறை எச்சரித்துவிட்டு, பசுக்களை ஓட்டிக்கொண்டு மறைந்தான்.

அபூர்வ ரதம் பெற்ற அட்மீடஸ் அல்ஸஸ்டிஸ்ஸைப் பெற்றான் போலவே அகமகிழ்ந்து, தேரேறி, யானை சிங்கங்களின் கடிவாளத்தைப் பற்றி அயோல்காஸ்ஸை நோக்கி ஸவாரிவிட்டான். யாழ்வல்லனுடைய ஆயனால் ஸாதுக்களாக்கப் பெற்ற அம்மிருகங்கள் ரதாரோகணத்தில் வல்லனுடைய அட்மீடஸ்ஸின் கோலடிக் கொண்டவுடன் அல்ஸஸ்டிஸின் பால் மயல்கொண்ட அவனது மனமே போலக் கடுகச் சென்று, அயோல்காஸ் நாட்டை அதி சீக்கிரத்தில் அடைந்தான்.

மேல்மாடத்தினின்றும் அட்மீடஸ் வரும் வழியை எதிர்நோக்கி யிருந்த அல்ஸஸ்டிஸ், அவ்விசித்திர ரதத்தைத் தூரத்தில் வரும்பொழுதே கண்டு, ஆனந்தமென்னும் கடலில் ஆழ்ந்து, சட்டென எழுந்து நின்று, தனது வெண்பட்டு முன்தானையை ஆகாயத்தில் வீசிவீசிக் குதித்துக் குதித்து, "ஜய விஜயீபவ!" என்று வாழ்த்திக் கரகோஷம் செய்து, ஆநந்த பாஷ்பம் உதிர, ஸர்வேச்வரனை நினைத்து,

"ஹா! தீனதயாளு! ஜகத்ரக்ஷகா! இன்றுதானே உன் மனம் இரங்கிற்று! இன்றுதானே நான் ஸுகப்பட நீ நினைத்தனை! இன்று போலவே நான் என்றைக்கும் என் கணவனை அன்பு பூண்டு அழைக்கும்படி வரந் தரல் வேண்டும்! இன்று போலவே நான் என்றைக்கும் உன்னை வணங்கித் துதிக்கும்படி கிருபை செயல் வேண்டும்!" என்று புலம்பி, மற்றும் பலவாறு பிரார்த்தித்துக் கொண்டிருக்க, "ஹா! என் காதலி! இங்கேயா! நீ நின்று கொண்டிருக்கிறாய்? இங்கேயா நீ துக்கித்துக்கொண் டிருக்கிறாய்! இனி உனக்கும் எனக்கும் துக்கமேது? என் தேனே! அமுதே! தெவிட்டாத தீம்பாலே! கட்டிக் கரும்பே! கற்கண்டே! பொற் பாவாய்!" என்று சொல்லிக்கொண்டு, அட்மீடஸ் பாய்ந்து வந்து, நெடுங் காலமாகக் காணாத குழந்தையைக் கண்ட ஒரு தாய்போல வாரி எடுத்து மலைத் தோளில் சேர்த்தணைத்து, ஓயாத மாரிபோல ஒரு யாமம் முத்தமிட்டு, அகஸ்தஸ் அரசனும் மற்றவரும் பார்த்திருக்க, விசித்திர தேர்மேலே மெல்லியலைத் தான் ஏற்றி, ஸாரதியாகக் கடிவாளம் கைப்பற்றி, சூழ்ந்திருந்தோர் எல்லாரும் பூச்சொரிந்து வாழ்வீரென, வந்த வழியே வழிக் கொண்டான் அட்மீடஸ்.

பல்லாண்டுகளாகப் பேர் ஆவலுற்றிருந்தும் தரிசனமேனும் கிடைக்கப் பெறாமல் வருந்திய அட்மீடஸ் அல்ஸஸ்டிஸ் என்ற இருவரும் இப்பொழுது தம்மை அடுப்பாரும் கெடுப்பாரும் இன்றி ஸ்வயேச்சையா யிருக்கக் கூடிய ஏகாந்த இடத்தை யடைந்தமையால், உடம்பே தெரியாத பரமானந்தத்தில் மூழ்கி, முன் பட்டவெல்லாம் மறந்து பாட்டும் பரிஹாஸமும் கூத்தும் குறளியுமாகச் செய்து கொண்டு ப்ரயாணம் செய்ய, ரதம் அவர்களை 'ஹீகேட்' தேவியின் ஆலயத்தின் முன் கொண்டு வந்து சேர்த்தது!

ஆங்கு அட்மீடஸ்ஸின் இடையனை விசித்திர புருஷன் முன்போலக் கை குவித்தவனாய், தேவியைத் தொழுது கொண்டு நிற்க, மோஹ பரவசனாகிய அட்மீடஸ் ஆலயத்தையாவது ஆயனையாவது கவனியாமல், சீக்கிரமாக ரதத்தைத் தூண்டிக்கொண்டு, தனது பீரிநாடு வந்து சேர்ந்தான்.

ஜயசீலனாகி வரும் தனது புதல்வனை பீரஸ் மன்னன் தக்கபடி நகரலங்கரித்து வரவேற்று, அல்ஸெஸ்டிஸ்ஸையும் வாழ்த்தி, அந்தப்புரத்திற் கனுப்பினான். பெரிக்ளிமீன் என்ற அட்மீடஸ்ஸின் தாய் மருமகளைக் கட்டியணைத்து, "என் செல்வப் புதல்வனுக்கு ஜீவனளித்த உத்தமியே! எத்தேச ராஜர்க்கும் கிட்டாத இளங் கிளியே! தீர்க்க சுமங்கிலியாய் செல்வ மக்கள் பல பெற்று, கணவனுக்கு இனியாளாய் காசினியில் வாழ்ந்திடுக" என்று வாழ்த்தினாள்.

அன்றைக்கே அவர்களுக்குக் கல்யாணம் நடந்தது. அதன் சிறப்பை வருணிக்க யாரால் முடியும்! மங்கையர் திலகமாம் மொருத்திக்கும் மன்னவர் ஏறும் ஒருவனுக்கும் கல்யாணம் என்றால் அதன் வைபவத்தை உரைத்தலும் கூடுமோ? பீரி நாட்டில் களிக்காத ஜனமில்லை, வாழ்க்காத பிரஜையில்லை. அயோல்காஸ்ஸில் கூடிய அத்தனை ஜனங்களும் வீரரும் மாதரும் பீரிநாட்டிலும் வந்து கூடி, கல்யாண மஹோத்ஸவங் கண்டு களி கூர்ந்தார்கள். அகஸ்தஸ் அரசன் ஏராளமான குதிரைகளும், ரதங்களும், தான்ய வகைகளும், பொன் முத்து முதலிய வரிசைகளும் தனது ஸஹோதரிக்குச் சீர் கொடுத்தான். அட்மீடஸ்ஸும் ப்ரதியாக அவனுக்குத் தக்கபடி மரியாதைகள் செய்தான். இப்படியாக அன்று திருமணம் வெகு சிறப்பாக நடந்தது.

ஸந்தியா காலமும் வந்தது! தம்பதிக ளிருவருக்கும் அன்றைப் பகல் முப்பது நாழிகையும் முப்பது யுகம்போல வளர்ந்தது. அவர்கள் சூரியனைத் தொலையாயோ தொலையாயோ என்று தூரத்திக் கொண்டும், சந்திரனை வாராயோ வாராயோ என்று அழைத்துக் கொண்டும், எப்பொழுது இந்த அசட்டு வைதீகச் சடங்குகள் முடிவடையும் என்று வெறுத்துக் கொண்டும் அவ் விருவரும் மனம் துடிக்க இரவை எதிர் பார்த்திருந்தனர்.

இப்படியாக இவ் விருவரும் தள்ளிய தள்ளலால் கோபமுற்று, முகஞ் சிவந்து, பனி என்னும் கண்ணீர் கசிய, நடுங்கிய உடலுடன், "இருக்கட்டும்! இருக்கட்டும்! நாளை ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று கறுவி உள் ஒளித்தான் போல ஸூரியன் மேல் திசை மலைச் சிரத்துக் குகையுள் பதுங்கிக் கொண்டான். அல்ஸஸ்டிஸ்ஸின் முகத்துக்குத் தோற்ற சந்திரனே, அவள் என்னதான் வருந்தி அழைத்த போதிலும் சட்டென வெளிப்பட நாணமுற்றவன்போல, மெல்ல மெல்லத் தலை கிளப்பி, கீழ்த் திசையில் தோன்றினன். காலை முதல் மாலை வரையில் நீர் நிலையில் ஒற்றைக் காலால் நின்று ஆகாயத்தைப் பார்த்தபடி தவம் செய்து கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துக் கொண் டிருந்தும், அல்ஸஸ்டிஸ்ஸின் பாத அழகைப் பெறமாட்டாத தாமரை மலர்கள் வாய் சலித்தன போல, வாய் மூடிக் கொண்டன. வெட்கங் கெட்ட சேதாம்பல் மலர்களோ, "நாம் என்ன ப்ரயாஸைப் பட்டாலும் அல்ஸஸ்டிஸ்ஸின் வாயினது செம்மைக்கு நிகராக மாட்டோம்; உலகத்தார் நம்மை நோக்கி நகைத்துக் கொண்டுதா னிருப்பார்கள்; எத்தனை நாழிகை தான் முகம் மூடிக்கொண் டிருக்கலாம்; 'ஒக்கச் சிரித்தார்க்கு வெட்கமில்லை' என்றபடி நாமும் கூடத்தான் சிரிப்

போமே'' என்னும் மனத் துணிவுடன் சிரித்தன போல வாய் திறந்தன. 'அல்ஸஸ்டிஸ்ஸின் தோழிமாரோடு நாமும் கலந்து, தெருட்சி யறையில் வேடிக்கை பார்க்கலாம்' என்று எண்ணிக் கடுகி வந்தாள்போல கங்குலென்னும் நங்கையும் வந்து சேர்ந்தாள்.

அத்தியாயம் 8

அல்ஸஸ்டிஸ்ஸுக்குவந்த ஆபத்தும் அதன் விமோசனமும்.

நிஷேகத்துக்குக் கணித்திருந்த லக்கினமும் குறுகிற்று. தம்பதிகள் தமது தோழியர் சேடியர் செவிலியர் முதலோர் புடைசூழத் தெருட்சியறை சேர்ந்தனர். ஆங்குச் செய்யவேண்டிய வைதிகச் சடங்குகளும் செய்து முடிவடைந்தன. உடனே தோழியர் முதலோர் மங்கல கீதம் பாடத் தொடங்கினர். அக் கீதத்தை அவர்கள் பாடியது சில நிமிஷங்களேயாயினும் அல்ஸஸ்டிஸ் அட்மீடஸர்களுக்கு அக்காலம் பல வருஷங்களாக நீடித்துக் காட்டியது. மன்னவன் முகத்தையும் மங்கைதன் அகத்தையும் குறிப்பாலுணர்ந்த தோழிமார் முதலோர் ஏசுதல் பரிஹாஸம் செய்தல் முதலிய விளையாட்டுக்களை நிறுத்திவிட்டு, அறையை விட்டு வெளிப்பட்டுக் கதவைச் சார்த்திக் கொண்டனர்.

கொண்டதுதான் தாமதம்! கோமகன் குபீரெனப் பாய்ந்து, கொம்பனையாளை அணையச் சென்றான்! செல்லவுமே, இவனது மனோவேகத்தினும் எண்மடங்கு வேகமுடையனவாய், இவனது பாபமே திரண்டு உருவமெய்தினல்போல இரண்டு காளகூட ஸர்ப்பங்கள் இவனுக்கும்

அவளுக்கும் மத்தியில் தோன்றி, சுடிகையில் ரத்தினம் ஜ்வலிக்க, மின்னல்போலப் பளீர்பளீர் என்னும் தமது நாக்குக்களைத் தோற்றி ஒளிந்து, துருத்திவாய் ஊதினாற்போல 'ஹிஸ்' என்று சீறிக்கொண்டு, மத்தைச் சுற்றிய கயிறுபோல அல்ஸஸ்டிஸ்ஸைச் சுற்றிக்கொண்டு, நெருப்புத் தழல்போலும் தமது கண்களால் அட்மீடஸ்ஸை உறுக்கி விழித்தன!

கால்சிஸ் சென்று கனகரோமம் கொணர்ந்த தீரனை அட்மீடஸ் கொடிய ஸர்ப்பங்களாயினும் அவைகளுக்கு அஞ்சும் கடையனோ அவன்? அவைகளைப் பார்த்த அந்த க்ஷணத்தில் அவன் திடுக்கிட்டுப் போய்விட்டானேனும், அடுத்த க்ஷணத்தில், "நமது ஆசைக் கிழத்தியைச் சுற்றிக் கொண்டனவே இவை, ஹா!" என்னும் ரோஷம் பொங்க, கருடன்போலச் சீறிக்கொண்டுபோய், அவற்றைக் கையாலேயே பற்றி நசுக்கிவிட யத்தனித்தான்.

அதற்காக அவன் ஓர் அடிபெயர்த்து வைத்ததுதான் தாமதம்! உடனே அவைகள் அல்ஸஸ்டிஸ்ஸை முன்னினும் பலமாக இறுகக் கட்டிக்கொண்டு, அவளுக்கு மூச்சு விடவும் கூடாதபடி நெருக்கிவிட்டன! உயிர்க்கு மன்றாடும் அந் நங்கை, "என் நாயகரே! நாயகரே! வேண்டாம் வேண்டாம்! இஃதேதோ தெய்வக் கோளாறாக விருக்கிறது! நீர் ஏதோ குற்றம் செய்துவிட்டீர்; அன்றேல் ஆயிரம் காப்புடைய இவ்வறைக்கு அரவுகள் எவ்வாறு வரக்கூடும்? விலகும்! விலகும்!" என்றாள்.

கேட்ட அட்மீடஸ் ஒன்றும் தோன்றாது மதிமயங்கி, ஓர் அடி பின்வைக்க, அவ்வரவுகள் அல்ஸஸ்டிஸ்ஸை விட்டுவிட்டு, பூமிமேல் இறங்கி, மண்டலமிட்டுக்கொண்டு படமெடுத்து ஆடினவைகளாய், விஷாக்னியை உமிழ்ந்து

கொண்டு, அட்மீடஸ்ஸை உறுக்கி விழித்து நின்றன. "இதுதான் தருணம் இவற்றைக் கொல்ல!" என்று அம் மன்னவன் எண்ணி, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவ்வரவுகளைப் பற்றப்போக, காற்றினும் கடிய வேகத்தையுடைய அவைகள், இவன்வந்து தம்மைப் பற்றுமுன்னம் குபீரெனப் பாய்ந்து, அல்ஸஸ்டிஸ்ஸைத் தாம் பற்றிச் சுற்றிக்கொண்டு, முன்னினும் உறுதியாக நெருக்கவே, அவள், "ஐயகோ! நாதா! அடியாள்மீது கருணையில்லையா! பர்த்தாவே பர்த்தாவே! நான் பாதாளம் சேர விதியோ? நீர் ஏன் தெய்வ பலத்தை எதிர்க்கின்றீர்? தெய்வ பலத்தின்முன் மனுஷ்ய சக்தி எம்மட்டு? வேண்டாம்! வேண்டாம்! என் ஆவி வெளிப்படுகிறது! இவை என் குரல்வளையைப் பிடிக்கின்றன! விலகும்! விலகும்! தெய்வத்துக்கு ப்ரீதி ஏதேனும் செய்யும்!" என்று கதறினாள். உடனே அவள் முகம் பிரேதமுகமாயிற்று. நெஞ்சில் உயிர்துடிக்கத் தலைப் பட்டது! பூமிமேல் விழுந்த அவள் கைஜாடையால் கணவனை அப்புறம் போகச்சொன்னாள்! கண்டான் அட்மீடஸ்! "இஃது உண்மையில் தெய்வக் கோளாறுதான்! எத்தெய்வம் நம்மீது கோபங் கொண்டதோ! ஒன்றுக் காவது நாம் பூஜை நைவேத்தியம் பலி முதலியவற்றில் குறைவு செய்யவில்லையே! ஏன் அவை என்னைத் துன்புறுத்தவேண்டும்?" என்று புலம்பிக்கொண்டு, பித்தம் பிடித்தவன்போல, அவ் வறையைத் திறந்து கொண்டு, அரண்மனையிலேயே தரியாது, உபவனத்திற்குள் ஓடினான்.

அல்ஸஸ்டிஸ்ஸின் கதறலையும் அட்மீடஸ்ஸின் ஓட்டத்தையும் கண்ட பாங்கியர் சேடியர் செவிலியர் எல்லாரும் ஏதோ பேராபத்து வந்துவிட்டதென்று நடுநடுங்கிப் பேரோலமிட்டுக்கொண்டு, தெருட்சியறையில் நுழைந்து பார்க்க, பிணம்போல உடல் வெளுத்து, கண் பஞ்சடை

ந்து, கை கால்கள் சில்லிட்டு அசைவற்றுக் கிடக்கும் அல்ஸஸ்டிஸ்ஸை எடுத்து மென்மையான சயனத்தில் கிடத்தி, உபசாரம் செய்தார்கள். அவர்களுக்கு அவ் வறையில் ஒன்றும் தென்படவில்லை. அட்மீடஸ்ஸைப் பயமுறுத்திய பாம்புகள் அப் பாங்கியர் செவிலியர்களுக்குத் தோன்றாது எங்கேயோ மறைந்து கொண்டன.

இப்படி இவர்கள் மண மகளுக்கு உபசாரம் செய்து கொண்டிருக்க, உபவனம் சென்று ஓர் அருவியோரமாக உட்கார்ந்து, வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, ஊரிலுள்ள தெய்வங்கள் அனைத்தின் மீதும் பழி சுமத்திப் புலம்பிக்கொண்டிருக்கும் அட்மீடஸ்ஸின் முன் அவனது விசித்திர இடையன் தோன்றி, "என்ன செய்தி?" என்றான். அவனைக் கண்ட அட்மீடஸ், திடுக்கிட்டு, "ஹா! ஹா! நண்பரே! உம்மை நான் மறந்தே போனேன்! தெய்வங்கள் என்னைச் சோதிக்கின்றன! எனது காதலியை நான் அணைய வொட்டாமல் தடுக்கின்றன! அவைகளுக்கு எதில் நான் குறைவு செய்துள்ளேன்? நீரும் பார்க்கிறீரே!" என்றான்.

கேட்ட ஆயன், "அரசே! நன்றாக ஆலோசித்துப் பாரும்; நீர் குறை செய்தே இருக்கிறீர்! நான் உம்மிடத்து என்ன சொன்னேன்? கன்னியைப் பெற்று வரும்போது யாரைவணங்க வேண்டும் என்றேன்? நீர் அந்த ஹீகேட் தேவியை வணங்கினீரா? மனைவியைப் பெற்றோம் என்னும் மகிழ்ச்சியினால் அம் மகாதேவியை இகழ்ச்சி செய்தீரே? ஸ்த்ரீ மோகம் மிக்க உமக்குத் திருஷ்டி கூட இல்லாது போயிற்றே! நான் அந்தத் தேவியின் ஸந்நிதியில் தொழுது கொண்டு நிற்கவில்லையா? என்னையாவது பார்த்தீரா? நான் முன்னமேயே எச்சரித்திருக்கவில்லையா?" என்றான்.

கேட்ட அட்மீடஸ் மிகவும் நாணமுற்று, அவ் வாயன் அடியில் விழுந்து, "என்னை மன்னிக்கவேண்டும்! உம்மாலன்றோ அம் மங்கையைப் பெற்றேன்! இப்பொழுதும் நீர் என்னை ரக்ஷிக்க வேண்டும்!" என்று பிரார்த்திக்க, அவன் "அரசே! நான் உம்மை ஸஹோதரன்போல மதித்துள்ளேன்; மற்றொரு முறையும் உமக்கு உதவிசெய்கிறேன்; வாரும் அத் தேவி ஸந்நிதிக்கு; நெஞ்சுருகக் கண் பனிப்ப ஸ்தோத்ரம் செய்யும்; நானும் உமக்காக பரிந்து வேண்டுவேன்; அத்தேவி தயாநிதி; இரங்குவாள்" என்று, அவனை அழைத்துக்கொண்டு, ஹீகேட் ஆலயம் குறுகினான்.

மூன்றுநாள் இரவும் பகலுமாக அவ் விருவரும் அந்த மகாதேவியைத் தொழுது ஸ்தோத்ரம் செய்து, கடைசியில் அருள்பெற்றுக்கொண்டு, நாடு சேர்ந்தனர். அன்று தான் அல்ஸஸ்டிஸ் முன்போல உற்சாகமும் களிப்பும் உடையவளாயினாள். அட்மீடஸ் மதம் ஒழிந்து அடக்கமுடையவனாயினன். ராஜ க்ருஹம் பழையபடி குதூஹலங் கொண்டு விளங்கிற்று. அல்ஸஸ்டிஸ் அட்மீடஸர்களின் தாம்பத்ய வாழ்க்கை மறுவற்றதும் மிக்க வைபவம் பொருந்தியதுமாயிருந்தது. எந்த நாளும் அவர்கள் கடவுளைத் தொழாது படுக்கைவிட்டு எழுவதில்லை. இப்படியாகப் பல மாதங்கள் கழிந்தன.

அத்தியாயம் 9

ஆயன் தன் வரலாற்றை அறிவித்துப் போனது.

ப்ரளயகாலம்போலக் காற்றெழும்பியும் ஸப்தகாள மேகங்களும் ஒன்றாய் வர்ஷித்தாற்போல மழை பொழிந்தும் உயிர்க்கு நடுக்கத்தை விளைத்த ஒரு தினத்தில் அட்

மீடஸ்வின் போஜனமண்டபத்தில் ஒரு புருஷன் வந்து, "அரசே! சரணம்! உன்னிடத்தில் நான் பசுமேய்க்கும் இடையனாய் அமர்வேன், நீ அங்கீகரிப்பாயா?" என்று கேட்டான் என்று நாம் முன்னம் உரைத்திருக்கின்றோமே; அதை நமது கதாநேயர் மறந்துவிடார்கள். அப்பொழுது அவ் வேற்றுமனிதன் தான் எத்தனைகாலம் அப்படி ஊழியஞ்செய்வதாக ஒப்புக் கொண்டான் என்பதையும் நம் நேயர்கள் நினைத்திருப்பார்கள். அவன் சொன்னபடி மாதம் பன்னிரண்டும் கழிந்துவிட்டன. ஒருநாள் அட்மீடஸ்வின் போஜன மண்டபத்தில் அந்தப் புருஷனே வந்து, அரசனை நோக்கி, "வேந்தே! நான் கூறியபடி மாதம் பன்னிரண்டும் கழிந்துவிட்டன; என் பாவமும் ஒழிந்துவிட்டது; விடை தா; நான் போகவேண்டும்" என்றான்.

கேட்ட அட்மீடஸ் மனவருத்த முற்று, "ஆ! என்னை விட்டா? உமது பிரிவு என் மனத்தைப் புண்படுத்திவிடுமே. எப்பொழுதும் உம்மை என்னிடத்திலேயே வைத்துக் கொள்ள ஆசை கொண்டிருந்தேனே; ஆனல் உம்மைத் தங்கியிருக்கும்படி பிரார்த்தித்தல் எப்படி ஸாத்யம்? உமது சக்தியும் ப்ரபாவமும் எங்கே! எனது எளிமையும் சிறுமையும் எங்கே! உம்மை ஓர் அதிதியாக வைத்துப் பூஜிக்கவும் நான் அர்ஹனில்லையே!

'நிலஞ்செய்த வமென் றுணரினன்று நெடியோயென்
நலஞ்செய் வினை யுண்டெனினும் அன்று நகர்நீயான்
வலஞ்செய்து வணங்கவெளிவந்த இது முந்தென்
குலஞ்செய் தவம்'"

என்று புகழ்ந்தான். அந்தப் புருஷன், "வேந்தே! நான் முதலில் உன் முன் நின்று 'என்னை அங்கீகரி' என்றேனே; அப்போது நீ என்னை யார் என்றும் எப்பாதகம் செய்தாய் என்றும் நீ கேட்டையே; அந்தக் கேள்விகளுக்கு

இப்பொழுது விடை தெரிந்து கொள்ள உனக்கு இஷ்டமில்லையா ?'' என்றான்.

அட்மீடஸ், "மகா புருஷரே! அப்பொழுது அஜ்ஞானத்தால் உம்மை அறியாது அக் கேள்விகள் கேட்டுவிட்டேன் ; அதை க்ஷமிக்க வேண்டுகிறேன் ; உமக்கு இஷ்ட மிருக்குமானால், உமது ப்ரவரங்களைச் சொல்லலாம்; அன்றேல் நான் அதைத் தெரிந்துகொள்ளச் சிறிதும் முயலமாட்டேன்'' என்றான்.

அந்தப் புருஷன், "நீ தெரிந்து கொள்ள வேண்டியதும் உசிதமே. கேள்: தமது பவிஷ்ய விருத்தாந்தத்தை அறிய விரும்பும் மானிடர்களுக்குச் சிறந்த புகலிடமாகி விளங்கும் 'டெல்பி' க்ஷேத்திரமானது ஆதியில், ப்ரபஞ்ச ச்ருஷ்டிகாலத்து, மூலப்ருக்ருதி யென்னும் அந்தகாரத்தால் சூழப்பெற்று, ரக்தபலியை விரும்பி, 'ஆ! ஆ!' என அலைந்து திரியும் பூதப்ரேத பைசாச கூச்மாண்ட கணங்களுக்கு உறைவிடமாகி, பாழ்பட்டிருந்த தென்பதும், அதனால் அந்த டெல்பித் திருக் கோயிலிலிருந்து ஆரூடம் சொல்லும் கட்டுவிச்சியின் வாக்கிலிருந்து கோரமானதும் வஞ்சகமானதுமான ஆரூடமே வந்து கொண்டிருந்த தென்பதும் நீ கேட்டிருக்கலாம். அக் கோயிலின்முன் பலியிடப் பெறும் நராது, 'ஐயகோ!' என்ற அழுகைக் குரல் 'பர்னாஸஸ்' க்குன்றின் அடிவாரத்திலுள்ள பல கிராமங்களுக்கும் வெகு கோரமாய்க் கேட்கும். இந்தப் பெரிய அக்ரமத்தை நீக்கி, ஞான ஒளியை அத்திருக் கோயிலில் ப்ரவேசிக்கும்படி யாராவது செய்து விடுவார்களோ என்னும் அச்சத்தால், பைசாச கணங்களுக்குத் தலைவனே பாம்பு ரூபங் கொண்டான்போல, பைதான் என்னும் ஒரு மகாநாகம் அக் கோயிலையும், அது ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் அப் பர்னாஸஸ் மலையையும் சுற்றிக்

கொண்டு, ஸதா விழிப்புடையதாய், அக்கினித் துண்டங்கள் போன்ற தனது கண்களால் ஆங்கு அணுகுவோரை உறுக்கி விழித்துச் சாம்பலாக்கிக்கொண்டு வந்தது! வரவே, மானிடர்கள் அந்த திவ்யத் திருக்கோயிலை அணுகாது போயினர். இப்படியாக, ஜனங்கள் அக்கோயிற் கட்டுவிச்சி வாக்கினால் பயன் பெறாது வருந்த, ஒரு திவ்ய புருஷன் தோன்றி, அவர்களது துயரத்தை நீக்க ஸங்கல்பம் செய்து கொண்டார். அவரது வாளோ ஸூரியரச்மி; அவரது பாணமோ அக்கினிச் சுடர்; அவரது பலமோ அளவிடற்கரியது; அவரது தேஜஸ்ஸோ கோடி ஸூர்ய ப்ரகாசம். அத்தகைய அப் புருஷர் தமது அவாங்மன கோசரமான சக்தியினால் அப் பாம்பை வாளால் வெட்டி எறிந்து, தோலைக் கிழித்துச் சிதற வடித்துவிட்டார். சூரிய உஷ்ணம் அதன் கொழுப்பனைத்தையும் உருக்கிவிட, அதன் வெள் எலும்புகள் இன்றைக்கும் அக்கோயிலைச் சூழ்ந்து கிடந்து, ஆங்கு வருவோர்க்குப் பழைய சரித்திரம் இதுவாகும் என்று காட்டும் கண்ணாடி போன்றிருக்கின்றன.

"அதன் பிறகு அப் புருஷன் அக் கோயிலைத் தம் வசமாக்கிக் கொண்டு, தமது கட்டுவிச்சி ஒருத்தியை நியமித்து ஸத்யமான ஆரூடம் சொல்லி ஜனங்களை உய்விக்கும்படி செய்தார். பின்னும் அவர் காஸ்டாலி என்னும் ஊற்று நீர் ஊற்றைப் பரிசுத்தம் செய்து, அதில் ஸ்நானம் செய்து சுத்தரான பிறகே அத் திருக்கோயிலில் ஜனங்கள் நுழைய வேண்டுமென்றும் விதித்தார். மேலும், அவர் கவிதைக்கும் கானத்திற்கும் நடனத்திற்கும் அதிஷ்டான தேவதைகளான பன்னிரு அப்ஸர ஸ்த்ரீகளை அந்த நீர்த்தும்புக்கருகில் அழைத்துச் சென்று, அவர்களது பாதஸ்பரிசம் அந்நீரில் படும்படியும் செய்தார். அதனால்தான் இன்றைக்கும் மனிதர்கள் அந்தத் தீர்த்தத்தைப் பானம் செய்தால்,

கவிதை செய்தலிலும் கானம் செய்தலிலும், நடன சாஸ்திரத்திலும் சிறந்த புலமை வாய்ந்து, புகழ்பெறுகிறார்கள். இத்தனையும் செய்தவர் யாரென்பையாயின், உன் முன் இதோ நிற்கிறவரே!'' என்றான்.

''ஹா! அப்போலோ! அப்போலோ! என் ஸ்வாமீ!'' என்று, அட்மீடஸ்வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்து, அத் திவ்யபுருஷன் திருவடியில் விழுந்து நமஸ்கரித்தான்.

அப்போலோக் கடவுள், நான் உனக்கு ஊழியனாக அமரவேண்டியதன் காரணம் நீ அறிந்துகொண்டாயல்லவா! நல்லகாரியமேனும், உலக க்ஷேமார்த்தமேனும் கொலை கொலைதானே; அதற்கு நான் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியது ஆவச்யகமாயிற்று. நீ தயாளுவாயும் உத்தமனுயுமிருந்தமையால், நான் ஸுகமாக உன்னிடம் * ஊழியஞ் செய்துவிட்டு, பாப விமோசனம் பெற்றேன்; இதோ நான் போகவேண்டும்; நான் உன்னிடத்தில் பரம வாத்ஸல்யம் வைத்துவிட்டேன்; உன்னை மறவேன்; ஆபத்துவேளையில் என்னை நினை'' என்று சொல்லி, அவனைத் தழுவிவிட்டு, ஆகாசத்தில் கிளம்பி, அந்தர்த்தானமாய் விட்டார்.

பார்த்து நின்ற அட்மீடஸ் கல்போலச் சமைந்துபோய், ஒரு முகூர்த்தநேரம் தன்னையே மறந்திருந்து, பிறகு கண்ணீர் சொரிய, ''ஹா! கடவுளே! இதுவும் உன் திருவிளையாடல்தான்!'' என்று சொல்லிக்கொண்டு அந்தப்புரம் சென்றான்.

---

* அப்போலோ தன் மகன் ஆஸ்க்ளிபியஸ்வின் மரணத்துக்குக் காரணமாயிருந்த 'ஸைக்ளோப்' என்ற அமரரைக் கொன்ற தன் நிமித்தம் அட்மீடஸ்ஸினிடம் ஏழு வருஷம் இடையனாய் அமர நேர்ந்ததென்று வேறு ஒரு வரலாறு உண்டு.

அத்தியாயம் 10

பத்து வருஷங்கள் கழிந்தன. அல்ஸஸ்டிஸ் ஒரு குமாரனையும் ஒரு குமாரியையும் பெற்றாள். அட்மீடஸ்ஸின் ஆனந்தத்தை உரைக்கவும் ஒண்ணுமோ? ஸகல தேவாலயங்களிலும் பூஜை நைவேத்யங்கள் செய்வித்தாள். நாடு நகரங்களை அலங்கரிப்பித்தான். ஏழைகளுக்கு அன்னமளித்தான். குடிகளுக்கு வரியைக் குறைத்தான். சிறையிருந்தோரை விடுவித்தான்.

குழந்தைகள் வளர்பிறைச் சந்திரன் போல நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தன. களிப்பெனும் கடலில் ஆழ்ந்த மன்னன் துன்பமென்பதையே அறியாது நெடு நாள் அரசாண்டு வந்தான். அவன் நாட்டில் எவ்வகையான குறைவுமில்லை. பூமி ஏராளமான பயனைத் தந்தது. பசுக்கள் நிறையப் பால் சொரிந்தன. கைத் தொழில் விருத்தியாயின. ஜனங்கள் ஸுகமடைந்தனர். சாஸ்த்ர விற்பன்னர் தலைப்பட்டனர், ஸங்கீத வித்துவான்கள் தழைத்தனர். கணிதம் வல்லுநர் பல்கினர். சோதிடம் கற்றோர் நிறைந்தனர்.

இப்படியாகப் பீரி நாடு எல்லாவகையிலும் மேம்பட்டுச் செழித்து விளங்க, அதைக் கண்ட அட்மீடஸ் செருக்கடைவா னாயினன். "ஆ! ஆ! நமது பாலியம் எத்தகையது! கன்றுபோல துள்ளிக் களித்து, தாயின் மடிமீதும் தந்தையின் தோள்மீதும் விளையாடும் பிள்ளைப் பருவத்தில் நாம் * 'ஆர்கோ' கப்பலில் சென்று, அருஞ் செயல்களைச் செய்து மீண்டோ மில்லையா! உலகத்தில் ரூபத்தால் மிக்க

---

* இது கால்சிஸ் நாட்டுக்கு ப்ரயாணம் சென்ற கப்பல். இது ஸம்பந்தமான யாத்திரை தனியே வெளிவரும்.

மங்கையர்க் கெல்லாம் திலகம் போன்றுளை நாம் நமது புஜ வலிமையால் ஜயித்துக் கொணர்ந்தோ மில்லையா! ஒன்றற் கொன்று ஜன்மப் பகை பாராட்டும் யானையையும் சிங்கத்தையும் இணைத்துப் பூட்டிய அற்புத ரதம் யானலாது யார் ஊர்ந்தார்? அதிதி போஜன துரந்தரன் என்று என்னையலால் மற்றியாரே பேர் படைத்தார்? இவ்வளவு மட்டுமா? கடவுளரில் ச்ரேஷ்டரான அப்போலோவே நமக்கு அதிதியாக வந்து, ஆண்டு ஒன்று முற்றும் நம்மோடு ஒரே பந்தியில் உட்கார்ந்து உண்டிருக்க வில்லையா? அதிதியாக மட்டுமா? ஸேவகா வ்ருத்தியுமன்றோ அவர் செய்தார்! உலகத்தில் எந்த நாடு பீரி நாட்டைப்போல வற்றுவளந் தங்கி, போர் என்ற பேரு மொழிந்து, ஜனங்கள் ஸுகம் பெறச் சிறந்து விளங்குகின்றது?" என்று அவன் தினமும் நினைந்து நினைந்து, தன்னையே வியந்து தருக்கி, ஆலயங்களையும் ஆன்றோர்களையும் மறந்து, தர்மங்களையும் முறைகளையும் துறந்து, உயிர்கள்பால் நெஞ்சினிடத் துள்ள ஈரம் வறந்து, தன்னலன்றோ உலகம் நிலைத்திருக்கின்றது என்னும் எண்ணம் பிறந்து, தனது மேன்மைக்கு இழிவைத் தேடிக் கொண்டான்.

அதனால் அவனுக்கு ஆயுள் அற்பாயுஸ்ஸாய் விட்டது. மரணம் ஸமீபித்து விட்டதைத் தோற்றுவிக்கும் குறிகளையுங் கண்டான். "ஐயோ! 'ஹேடீஸ்! என்ற பாதாளத்திற் கன்றோ நாம் போகவேண்டும்! அவ்வந்தகார உலகில் மேலோர் கீழோர், வலியோர் மெலியோர் தனத்தோர் வறியோர் என்ற தாரதம்யமில்லையே! ஆங்குப் புலன் நுகர்ச்சியேது? வார்த்தையேது? கேட்பதேது இருள் நிறைந்த காடுகளிலும் பரல் திமிர்ந்த வனங்களிலும் நீர் வறந்த வெளிகளிலும் ஆவேசமாகப் பறக்க வேண்டியது தானே! ஹே! அப்போலோ! அப்போலோ! நீர் வாரீரோ!

வாரீரோ! என் துயரைத் தீரீரோ! தீரீரோ!" என்று ஓலமிட்டான்.

பல்காத தூரத்திற் கப்பால் பனிமலை ஒலிம்பஸ் மீது கடவுளருடன் களித்திருந்த அப்போலோ தேவனது திருச்செவியில் இவ்வபயக் குரல் வீழலும், காற்றிலும் கடிய வேகத்துடன் அப்பகவன் அட்மீடஸ்ஸின் பக்கம் வந்துசேர்ந்து, "அரசே! என்ன? என்ன? உனக்கு வந்த ஆபத்து யாது?" என்றார்.

அட்மீடஸ் தனக்கு ஆயுள் குறுகிவிட்டதைச்சொல்லி, "இதை நீக்க வகையில்லையோ?" என்றான்.

அப்போலோ, "மன்னவா! இஃது ஊழின்பயன்; ஊழைவெல்ல ஒருவராலும் கூடாது" என்றார்.

அட்மீடஸ், "ஹா! ஹா! கடவுளே! அப்படிச் சொல்லாதீர்!

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'

என்று ஆன்றோர் கூறியிருக்கவில்லையோ? நான் வயதில் மூர்த்து விட்டேனா? இன்னும் பால்யமாகத் தானே இருக்கிறேன்; அகாலமரணம் எனக்கு மட்டும் ஏன் வரவேண்டும்? அற்பாயுள் உள்ளவனாக நான் மாத்திரம் ஏன் போகவேண்டும்? என் கையை எதிர்பார்த்து பிரிநாடு ஏங்குமன்றே! எனது மாதா பிதாக்கள் வயோதிகராகியும், தீர்க்காயுளுள்ளவராக இருக்கவில்லையா? அவர்களையேன் யமன்வந்து பற்றவில்லை" என்றான்.

அப்போலோ, "அரசே! யமன் விதியின் ஸேவகன் தானே. அவ்விதியின் கருத்தை யார் அறிவார்?" என,

அட்மீடஸ், "கருணையங்கடலே! அந்த விதியைக்கண்டு நீர் எனக்காகப் பரிந்து பேசுவீராஞல், அது உமது சொல் லுக்குங் கட்டுப்படாதோ? அப்படிக் சட்டுப்படாது போனாலும் நீர் யாழ் மிழற்றத் தொடங்கினால், அவ் வூழ் மயங்கி எந்தவரனையும் கொடுக்குமே!' என்றான்.

கேட்ட அப்போலோ, "வேந்தே! உன்னிடத்து நான் மிகவும் வாத்ஸல்யம் வைத்து விட்டேன்; அதனால் இதோ அவ்வூழினிடம் போகிறேன்; நான் போவதும் என் செயலன்று; அவ்வூழே என்னை அப்படிப் போகும் படி நியமித்திருக்கிறது. நான் போகும்காரியம் ஜயமா னாலும் அபஜயமானாலும் எல்லாம் ஊழின் செயலேயன்றி வேறல்ல; இதோ போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு மறைந்துபோனார்.

அத்தியாயம் 11

பனியுறையும் மலைகளையும் மரம் நிறையும் வனங்களை புனல் செறியும் நதிகளையும் அலையறையும் கடல்களையும் கடந்து, இருள் சூழ்ந்த வெளியினூடும், ஒளிபரந்த வானி னூடும் காற்றெனப் பறந்து சென்று, காலவரையறை யற்றதும், கிழக்கு மேற்கு தெற்கு வடக்கென்னும் திசைக ளற்றதும், சூரிய சந்திராதிகளும் பகலிரவுகளும் அற்றதும், நித்தியமாயும் என்றும் மாறுபாடு அடையாததாயு மிருக் கிறதுமான விதிக்கடவுளரது மேன்மையுறும் உலகை நண் ணினார் அப்போலோக் கடவுள்.

மூன்று பெரிய சிங்காதனத்தின் மீது விதிக்கடவுள் மூன்று ஸஹோதரிகளாக வீற்றிருந்தனர்; அவர்களது ரூபம் விகாரமுமன்று ஸௌந்தரமுமன்று; அண்ட சரா

சரங்களனைத்தையும் ஆண்டருளும் அவர்கள் அச்சிறப்பை அறிவிக்கும்படியான உத்தம கிரீடம் தங்கியிருந்தார்கள். அவர்களது கையிலோ உயிர்களது தலைவிதிகள் நூல்களாக விளங்கின. அந்நூல்களை அவர்கள் கற்றையாகத் திரித்துக்கொண்டிருந்தனர். அந்த ஸஹோதரிகளில் மூத்தவளான 'லக்கீஸஸ்' என்பாள் தன்பால் கிடக்கும் பலவர்ண நூல்களையும் இதற்கு இது பொருத்தம் என்று பொறுக்கி, 'க்ளோதோ' என்னும் அடுத்த தங்கையினிடம் கொடுத்தாள். அவள் அவற்றைக் கற்றையாகத் திரித்து உருவாக்கினாள். கடைசித்தங்கையோ 'அட்ரோபாஸ்' என்பாள்; அவள் க்ளோதோ முறுக்கும் சரட்டில் நூல் பிதுங்கி விகாரமாய் விட்டால், அதைத் தன் கையிலுள்ள கத்தரிக்கோலால் வெட்டி வீழ்த்தி விடுவாள். இப்படியாக அம் மூன்று கடவுளரும் ஜீவராசிகளது வாழ்க்கையை உருவாக்கி, நிக்ரஹாநுக்ரஹங்களைச் செய்து வந்தார்கள்.

கண்டார் அப்போலோ தமது கமலக் கண்களால்! உடலில் மயிர்க்கூச்செறிய அவர் அவர்களுக்கு நமஸ்காரம் செய்து, யாழின் நரம்பு கூட்டி, ஸ்தோத்ரமாகப் பாடத் தொடங்கினர். ஸர்வத்தையும் வசீகரிக்கும் அவரது கானம் அக்கடவுளரது மனத்தையும் பறிக்காமற்போகவில்லை. 'லக்கீஸஸ்' 'க்ளோதோ'வுக்கு நூல் கொடுக்க மறந்தும், 'க்ளோதோ' சரடுமுறுக்க மறந்தும், 'அட்ரோபாஸ்' கைக் கத்தரிக்கோலை நழுவவிட்டும், அவர்கள் கான ரஸத்தில் ஆழ்ந்து போயினர். காலம்கூடக் கடக்கமாட்டாமல் நின்றுவிட்டது. அம்மூன்று ஸஹோதரிகளும் தமக்கு வசமாயினர் என்று அறிந்த அப்போலோ தாம் வந்த காரியத்தைத் தெரிவித்து, அட்மீடஸ்ஸுக்குத் தீர்க்காயுஸ்ஸு அளிக்கும்படி வேண்டினர்.

கேட்ட விதிக் கடவுளர், "ஆ! ஆ! உமது கானம் எமது மனத்தை உருக்கிவிட்டது மெய்யே! அதற்காக நாங்கள் பிழைத்திருக்க ஊழில்லாத ஒருவனுக்கு வாழ்வு எங்ஙனம் அளிப்போம்? வேறேதேனும் கேள்" என்றனர்.

அப்போலோ, "ஸர்வசக்தி தேவியரே! நான் வந்த காரியம் அது ஒன்றற்குத்தான். தங்கள் அநுக்ரஹத்தால் நான் எல்லாம் பெற்றிருக்கிறேன்; வேறு ஒன்றும் வேண்டாம்; நான் போகிறேன்" என்று புறப்பட்டார்.

அதன்மேல் அவர்கள், "அப்போலோ! நாங்கள் எங்களைத் திருப்திசெய்வித்தோரை வெறுமையே அனுப்புவதில்லை; ஆதலால் நீ கேட்டதை ஒருவகையாகப் பெற்றுப் போ; அட்மீடஸ் தர்மம் தவறாதவன் என்றும், தன்து பிரஜைகளால் அன்பு பாராட்டப் பெற்றவன் என்றும் சொன்னாய்; அப்படியானால், அவனுக்காக 'ஹேடீஸ்' என்னும் பாதாளத்துக்குப் போவார் ஒருவருண்டானால், அவன் உயிரைத் தருகிறோம்" என்றனர்.

அப்போலோ, "சித்தம்! தேவீ! உங்கள் வார்த்தைக்கு நான் எதிர்சொல்ல எங்ஙனம் வல்லேன்? உலகத்தில் ஒருவருக்காக ஒருவர் யமனுலகு சேர்வாரா? அப்படித் தான் ஒருவன் தனக்காக உயிர் விடுகிறேன் என்றாலும் அட்மீடஸ் அதற்கு ஸம்மதித்து அவனைச் சாவவிட்டுத் தான் வாழ நினைக்கும் அதமனல்லன்" என்றார்.

விதிதேவியார், "எப்படியாலும் ஸரி; நாங்கள் சொன்னது சொன்னதுதான்" என்று சொல்லிவிட, அப்போலோ வ்யஸனமுற்றவராய்த் திரும்பி வந்து, அட்மீடஸ்ஸினிடம் நடந்ததைச் சொன்னார். கேட்ட வேந்தன் கிளர்ஒளி முகத்தனாய், "ஆண்டவனே! அடியேன் உமக்குச் செய்யும் கைம்மாறு யாதோ!" என்றான்.

அப்போலோ கோபமுற்று, முகத்தில் தீக்கனல் சொரிய, அட்மீடஸ்ஸை நோக்கி, "அரசே! நீ அந்த நிபந்தனைப்படி வாழத் துணிந்தையே! ஆ! உன் வீரம் நன்று, நன்று!" என்றார்.

அட்மீடஸ், "கடவுளே! எனது வாழ்க்கை மற்ற அற்பரது வாழ்க்கை போல வறியதொன்றுமா! யான் ஆர்கோக் கப்பலில் அலைகடல் கடந்திலனே! ஆயிரம் வீரரை அருஞ் சமம் வென்றிலனே! கடவுளரும் வந்தென் கடிமனை உண்டிலரோ!" என்று தன்னையே ஸ்தோத்ரம் செய்துகொள்ள, கேட்ட அப்போலோ, "ஸரி, நான் போகிறேன்" என்று, விண்ணில் மறைந்தார்.

அத்தியாயம் 12

அப்போலோ சென்ற பிறகு அட்மீடஸ்ஸின் மனம் தழலிலிட்டுள்ள மெழுகுபோல உருகி, மிகுந்த பச்சாத்தாப முடையனாய், "ஆ! ஆ! நாம் என்ன இவ்வளவு கர்வியாய் விட்டோம்? சுயநயம் பாராட்டும் அதமனென் றல்லவோ நம்மை உலகம் இகழும்! நாம் உயிர் வாழ வேண்டியன்றோ மற்றோர் உயிரை வதைக்க வேண்டியிருக்கிறது! எவ்வித இடையூறும் இயற்றாத ஓர் உயிரை நலிவது எத்தகைய பாதகம்! மிருகங்களன்றோ தம் ஜீவன் பிழைக்க வேண்டிப் பிற ஜீவனை வதைக்கும்! நாமும் மிருகத் தன்மையை அடைந்து விட்டோமே! ஒருவன் தானாகவே வந்து நமக்காகச் சாவேன் என்றாலும், அதற்கு நான் ஸரி என்றால், அவனிடத்து உயிர்ப் பிச்சை வாங்கினவ னல்லனோ நான்? உலகம் அவனை 'உயிர்கொடுத்த தாதா' என்று புகழ, என்னை 'இரந்துயிர் பெற்று வாழும்

கடையன்' என்று இகழுமே! ஐயோ! என்னிடத்தில் பூர்வம் இருந்துள்ள பௌருஷம் குன்றிப்போய் விட்டதே! இத்தகைய கடையனாய் விடுவேன் என்று அப்போலோ எண்ணி யிருந்தால், என் அகத்து அவர் உண்டிருந்து ஊழியஞ் செய்ய வருவாரா! கெட்டேன்! கெட்டேன்! சிச்சீ! இந்த ஜன்மம் பாழ். இப்பொழுது இறக்கத் துணிவேனாயின் உலகம், 'ஆ! ஆ! அட்மீடஸ் பிறனொருவன் சாகத் தான் உயிர்வாழ இசைந்திலன்; இதுவன்றோ வன்மை!' என்று கொண்டாடும்" என்று நினைத்து, முன் உதித்த எண்ணத்திற்காகத் தன்னையே மிகவும் நொந்து கொண்டு, அரண்மனை வந்து சேர்ந்தான்.

மனையாளையும் மக்களையும் கண்டானோ இல்லையோ, உடனே அவன் மனவுறுதி எல்லாம் காற்றின்முன் பஞ்சு போலப் பறந்தோடிவிட, அவன் நகரத்திலும் நாட்டிலும் பறையறைவித்து, 'அரசனுக்காக உயிர் விடுவார் வரலாம்' என்று தெரிவித்தான். தினமும் பறையொலி எழுந்தது தான் மிச்சம்; ஒருவரும் முன் வருவாரில்லை. பிறகு அவன் அந்தரங்கமான மனுஷ்யரை யனுப்பி, 'திரவியத்துக்காக உயிர்விடுவார் உளரோ?' என்று ஆராய்ந்து பார்த்தான்.

போன தூதர் யாவரும் திரும்பி வந்து, "மன்னவா! யாம் கண்டு பேசிய ஒவ்வொருவரும் 'ஐயா! வேட்டையாடி யாவது, கடலோடி யாவது, படைதிரண் டாவது, இவைபோன்ற மற்றும் பல வீரச் செயல்களைச் செய்தாவது அரசனைக்காக்க அடியோம் கடமைப் பட்டோம்; அப்படிக்கு ஒன்றுமில்லாமல், ஒருவன் தனக்கு விதித்துள்ள ஆயுளுக்குமேல் உயிர்வாழ ஆசை கொண்டானென்று, நாங்கள் எமக்கு விதித்துள்ள ஆயுளையும் அனுபவிக்காமல், பெண்டு பிள்ளைகளையும் பிறர்வசம் விட்டுவிட்டு,

இருள் சூழ்ந்த பாதாளத்துக்குப் போவோமோ?' என்கின்றனர்'' என்று உரைத்து விட்டனர்.

பிறகு அட்மீடஸ் தன் அரண்மனையில் பிறந்து வளர்ந்த அடிமைகளை வருவித்துக் கேட்டான்; அவர்கள், "வேந்தே! உமக்கு யாம் உயிர்போமளவும் ஊழியஞ் செய்ய விரும்புவமே யன்றி, உயிர் துறக்க மாட்டோம்'' என்று உரைத்து விட்டனர்.

இவர்களது வார்த்தையைக் கேட்டவுடன் அவனுக்கு உயிர் வாழ்க்கையில் முன்னையினும் பதின்மடங்கு ஆசை வளர்ந்தது! "விடிந்தது முதல் அந்தி வரையில் துன்பமே படும் அடிமைக்குக்கூட உயிர் வாழ்க்கையில் பேராசையானல், ராஜபோகம் நுகரும் எனக்கு அதில் ஆசையுண்டாயிருப்பது என்ன வியப்பு?'' என்று ஸமாதானம் பண்ணிக் கொண்டான். பிறகு, தனக்காக ஒருவரும் சாவ உடன்பட வில்லையே என்னும் எண்ணம் உதிக்க, தன்னைவிட முதியோர்மீது பொருமை கொள்ளத் தொடங்கினன். இப்பொருமை அதிகரிக்கவே, அவன் தனது வ்ருத்தரான மாதா பிதாக்களைச் சாவ உடன்படுத்தலாம் என்று தீர்மானித்தான்; முதலில் பீரஸ் அரசன்பால் சென்றன்: "என் பிதாவே! எனக்கு விதிக் கடவுளர் விதித்திருக்குமதை நீர் அறிவீரே! உமக்கு இப் பூமியில் இனி அதிககாலம் வாழ முடியாதென்பது உமக்குத் தெரிந்ததுதானே; அப்படி வாழப் பொறியிருந்தாலும், நான் இறந்து விட்டேனைல் உமக்கு உத்தர க்ரியைகள் யார் செய்வார்? ஆதலால், எனக்காக நீர் யமனுலகம் செல்வீரா?'' என்றன்.

கிழ அரசன் கோபமுற்று, "பிள்ளாய்! உன்னைப் பெற்று வளர்த்துக் கல்விகற்பித்து, ராஜ்யமும் கொடுத்து, ஆளும்படி செய்ததற்கு இதுதான் நீ எனக்குச் செய்யும்

கைம்மாறோ! நன்று, நன்று; எனக்கு இப் பூமியில் வாழ விதித்திருக்கும் நாள் கொஞ்சந்தான்; யமலோகத்திலோ அளவற்ற காலம் நான் துன்புற வேண்டியிருக்கும்; ஆதலால், இந்த அற்ப நாள்கள் எனக்கு மிகவும் அருமையாக விராவோ? அவற்றை நான் ஏன் இழந்துவிட வேண்டும்" என்றான்.

கேட்ட அட்மீடஸ் வெட்கமும் துன்பமும் மிக்கு, சில காலம் சும்மா இருந்து, பிறகு தனது பிதாவையே நண்ணி, "அப்பா! மற்றொரு முறை ஆலோசனை செய்து பாரும்; உமக்கு முன்னாக நான் இறந்து, பின்னாக நீர் மரித்துப் போனால், உமது பிணம் புதையுண்ட சமாதியை ஜனங்கள் சுட்டிக்காட்டி, 'இதோ ஒரு கல்நெஞ்சன், கிழவன், தனது ஒரே குமாரனைச் சாகும்படி விட்டுவிட்டு, உத்தரக்ரியைக் குக்கூட மனுஷ்யரில்லாமல் புதையுண்டிருக்கிறான்' என்று பழிபர். ஆதலால், நீர் எனக்காக இறக்கலாம்" என்றான்.

பீரஸ், "நான் போனபிறகு என்னைப்பற்றி மனிதர் எதைச் சொன்னாலென்ன? எனக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை" என்றான்.

கேட்ட அட்மீடஸ், "ஹா! ஹா! என்ன சொன்னீர்! என்ன சொன்னீர்! புகழை நடாமல், வசையை நட்டு விட்டா போக விரும்புகிறீர்? கடவுள் உமது இவ் வார்த்தையைக் கேளாதிருக்கக் கடவர்!" என்றான்.

பீரஸ் அரசன், "பிள்ளாய்! நீ புகழ் விரும்பியா இவ் வார்த்தை சொல்லுகிறாய்? 'பெற்ற தகப்பனை யமனுக்கு இரையாக்கி விட்டுப் பிள்ளை உயிர்வாழக் கருதினான்' என்று உன்னை ஜனங்கள் இகழாதோ? சற்று எண்ணிப் பார்" என்றான்.

அட்மீடஸ் மனம் உளைந்து, தனது பிதாவை விட்டு விட்டு, மாதாவினிடம் சென்று கேட்டான். அவளும் பிரஸ்ஸைப் போலவே சாவ மறுத்து விட்டாள். தனக்காக ஒருவரும் சாவத் துணிந்திலர் என்பதைக் கண்ட அரசன், உயிர் வாழப் பொறியுடைய எல்லார்மீதும் பொருமை கொண்டு, அதனல் முன்பின் தெரியாது, கண்ணிழந்து, தனது மனைவியை நண்ணி, "நீ எனக்காகச் சாவையோ?" என்றான்.

அவள், "நாதா! நான் தான் முதன்முதலே உமக்காகச் சாவேன் என்றேனே! நீர்தாமே ஆவச்யகமில்லை என்று சொல்லி, ஊரார் எல்லாரையும் கேட்டனுப்பினீர். ஒரு வருக்காக ஒருவர் சாவதென்றால், அது ஸாமானியமில்லை. அதற்குப் பேரன்பு வேண்டும். உமது மரணத்துக்குப் பிறகு நான் உயிர் வாழ்வதைவிட முதலிலேயே நான் மரித்து விடுவது நலம்" என்றாள்.

அட்மீடஸ் தனது அன்புள்ள மனைவியின் உயிரை யமனுக்கு இரையிட விரும்பவில்லையாயினும், அவனுக்கு வேறு விதியில்லாமல் பொய்விட்டது. ஏனெனில் அவனுக் குத் தன்னுடைய உயிர்மீது உண்டான அபிமானம் எல்லா வற்றையும் விடப் பெரிதாய் விட்டபடியால், அவன் தனது மனைவியைப் பலி கொடுக்கத் துணிந்து விட்டான். அல் ஸஸ்டிஸ்ஸும் மரிக்க ஸித்தமாய் விட்டாள்.

யமன் வந்து சேரும் தினமும் வந்தது! அதுவரையில் அவள் ஒருவித துக்கமும் பாராட்டாது ஸந்தோஷமாக வே இருந்தாள். ஆனல் அன்றைக்கு மாத்திரம் அவளுக்கு அவளை அறியாது வியசனம் பொங்கி எழுந்தது. "இனி நாம் பகவானை நினைத்துப் பிரார்த்திக்க வேண்டும்" என்று நினைத்துக் கொண்டு, அவள், "ஓ! கடவுளே! நான் போகி

றேன்; என் குழந்தைகளை நீதான் ரக்ஷிக்கவேண்டும்; லோக வ்யவஹாரங்கள் அறியாத அவைகளுக்கு அன்பான ரக்ஷகர் ஒருவர் வேண்டுமே; பெற்ற தாயாகிய நான் இறந்துவிட்டால், அவர்களைப்பற்றிக் கவனிப்பவர் வேறு யார்? ஜகத்ரக்ஷகா! நீ அவைகள் பக்கமிருந்து ரக்ஷித்து வா; என்னைப்போல அவைகள் அற்பாயுஸில் மரிக்கும்படி விடாதே. அவைகளுக்குத் தீர்க்காயுஸ்ஸை நல்கு. என் புத்திரனுக்கு அன்புடைய மனைவியையும், புத்திரிக்கு உத்தமனான கணவனையும் அளி. அவ்விரு தம்பதிகளின் வாழ்க்கையும் மாசற்றவா யிருக்கட்டும்'' என்று நீர் மல்க, துக்கத்தினால் நெஞ்சடைத்துக் கொள்ள வேண்டினாள்.

பிறகுஅவள் அரண்மனையிலுள்ளாரில், தோட்டி முதல் தன் மாமி வரையிலுள்ள எல்லாருக்கும் நல்ல வார்த்தை சொல்லி, "என் குழந்தைகளை ரக்ஷியுங்கள். தாயில்லாப் பாலர்கள் அவை. உங்கள் வசம் ஒப்படைத்தேன். இனி நான் போய் வருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டாள்.

உடனே அவளது புதல்வனும் புதல்வியும் வந்து, "அம்மா! நீ எங்கே போகப் போகிறாய்? இருட்டா யிருக்கிற இடத்துக்குப் பூமிக்குள் போகப் போகிறையாமே! எப்பொழுது வருவாய் அம்மா!'' என்று அழுது கொண்டு கேட்டன. அவள் துக்கம் தாங்காமல் அவ் விரு செல்வங்களையும் கட்டிக் கொண்டு, 'ஹோ' என்று அழுது, "என் கண்மணிகளே! நான் ஊருக்குப் போகிறேன். அங்கே நான் இருந்து கொண்டு, உங்களுக்காகக் காத்து நிற்பேன்; நீங்களும் அப்பாவும் வரலாம்'' என்றாள். இப்படி இவள் சொல்லிக்கொண் டிருக்கையில் அட்மீடஸ் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக்கண்ட அல்ஸஸ்டிஸ்,

"ஆ! ஆ! நாதா! எனக்கு நிற்கப் போகவில்லை; என்னைப் படுக்கையில் கிடத்தும்" என்று கீழே விழுந்து விட்டாள். அவன் அவளை மெல்லத் தூக்கி, கட்டிலில் கிடத்தி, கட்டிலோடு வெளிச்சத்தில் தூக்கி வந்து பார்த்தான்.

அவள் முகம் பிணக்கோலங் கொண்டு வெளுத்தும், கண் பஞ்சடைந்துந் தோன்றின. அட்மீடஸ்ஸுக்கு அப்பொழுதுதான் மரணமென்றால் என்னவென்று தெரிந்தது! மனைவியின் வியோகம் என்றாலும் என்னவென்றும் அப்பொழுதுதான் அவன் அறியலானான். தலைமேல் கை வைத்துக்கொண்டு, "ஓ! என் கண்மணீ! உன்னைப் பறி கொடுத்துவிட்டு நான் எவ்வாறு ஜீவித்திருப்பேன்! நீ இல்லாது போனால் எனக்கு உலகம் பாழாய்த் தோன்றுமே! உனக்காக ஆயிரம்தரம் உயிர் துறக்க எண்ணி வீராதி வீரரையெல்லாம் யுத்தத்தில் எதிர்த்தேனே! ஓ! ஓ! என்ன காரியம் செய்து விட்டேன்! என்ன காரியம் செய்து விட்டேன்! அடி, தேவீ! உன்னோடு நானும் வந்து விடுவேன்! ஐயோ! அது இனிமேல் சாத்யமில்லையே! உனக்கு எவ்வளவு காலம் உயிர் வாழ விதித்திருந்ததோ, அவ்வளவு காலம் நான் ஜீவித்திருந் தாகவேண்டுமே! நான் ஏன் அப்போலோக் கடவுளை வேண்டினேன்? நான் ஏன் அவர் சொன்ன நற்புத்தியைக் கேளாது போனேன்? நான் ஸந்தோஷமாக மரித்திருந்தால், கீர்த்தியாவது வந்திருக்குமே!" என்று பலவாறு புலம்பினான்.

இப்படி இவன் புலம்பி ஓயுமுன், அல்ஸஸ்டிஸ், "ஓஓ! நாதா! நாதா! அதோ பாரும்! அதோ பாரும்! யமதூதன் கேரான் பாசத்தோடு வருகிறான்! ஐயோ! என்னை அழைக்கின்றானே! 'ஏன் தாமதம்?' என்று கோபிக்கிறானே! அவன் முகத்தைப் பார்க்கக்கூட வில்லையே! பயங்கரமாக இருக்கிறதே! என்னை அணைத்துக் கொள்ளும்; அணைத்துக்

கொள்ளும்! அந்தக் கொடியனிடம் கொடாதேயும்;ஐயோ! ஐயோ! என்னைப் பிடித்து, இழுக்கிறான்! இழுக்கிறான்; ஆ! ஆ! ஆ! ஆ! போனேன்! போனேன்! போனேன்! என்ன! என் கணவரே!கணவரே!உமக்கு இரக்கமில்லையா! என்னைப் பிடித்துக் கொள்ளுமே! பிடித்துக் கொள்ளுமே! இழும்! இழும்! இழும்!” என்று அலறினாள்.

குழந்தைகளும் வீறிட்டுக் கதறின. பக்கத்திலுள்ளாரும் ‘ஹோ’ ‘ஹோ’ என அலறினர். அட்மீடஸ்ஸுக்கு உயிர் போயே விட்டது. அவன், “என் உயிர்ச் செல்வமே! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! ஐயோ! உன்னை இந்த ஸ்திதிக்குக் கொண்டு வந்த பாவிக்கு இவ்வளவும் போதாது! இன்னும் எவ்வளவோ வேண்டும்! ஓ! கேரான்! கேரான்! நானும் வருகிறேன்! நானும் வருகிறேன்! என் கண்மணியை ஒன்றியாக அழைத்துப் போகாதே! ஆ! ஆ! என் கண்ணில் நீ படமாட்டேனென்கின்றாயே! பட்டால் உன்னை எப்படியாவது வேண்டி என்னையும் அழைத்துப் போம்படி செய்வேனே! ஹோ! தயாளு! கேரான்! கேரான்! உயிர் கவருங் கேரானே! நீ என் கண்ணுக்கு மறைந்து நின்றாலும் உனக்கு ஒரு கோடி வந்தனம்; தயை செய்; தயைசெய்! நானும் வருகிறேன், நானும் வருகிறேன்!” என்று முகத்தில் அறைந்து கொண்டு கதறினான்.

உடனே அவனது மக்கள், “அப்பா! அப்பா! நாங்களும் வருகிறோம்! நீ மாத்திரம் போகக் கூடாது! அம்மாவும் போய் நீயும் போனால், நாங்கள் ஆரிடத்தில் படுத்துக் கொள்வோம்! ஆர் எங்களுக்கு சாதம் போடுவார்? ஆர் பக்ஷணம் கொடுப்பார்? மாட்டோம், மாட்டோம்; நாங்களும்கூட வருவோம்; அம்மாதான் சொன்னாளே: ‘நான் முதலில் போய் இடம் பார்த்து வைத்திருக்கிறேன், அப்புறம் அப்பாவும் நீங்களும் வரலாம்’ என்றாளே! சேர்ந்து

தான் எல்லாரும் போகவேணும்" என்று அவனது இரண்டு தோளிலும் இரண்டு மக்களும் விழுந்து கட்டிக் கொண்டு, அழுதன.

இந்த ஸமயத்தில் அட்மீடஸ் நெஞ்சு பிளவாமல் எப்படி உயிரோடிருந்தான் என்பது உங்களெல்லாருக்கும் ஆச்சரியமாயிருக்கும்! விதிக்கடவுளர் அல்ஸஸ்டிஸ்வின் ஆயுஸ்ஸைக் குறைத்து,அவன் ஆயுஸ்ஸை நீட்டித்து விட்டதனுல் அவன் நெஞ்சு பிளவுண்டு இறக்கவில்லை என்றே நாம் ஸமாதானம் சொல்லவேண்டியிருக்கிறது! இல்லாதுபோனுல், அவன் அப்பொழுது அடைந்த துக்கத்தில் நூற்றில் ஒருபங்கு மற்றொருவர் அடைந்திருந்தாலும், அவர் நெஞ்சம் ஆயிரம் சுக்கலாய் வெடித்துஅந்த க்ஷணமே மரித்திருப்பர். அட்மீடஸ்ஸின் உயிர் மாத்திரம் போகவில்லையே ஒழிய, மற்ற எல்லாம் போய் விட்டன. அவ்வுயிரும் உள்ளத்திலுள்ள துயரம் பிடித்துத் தள்ளுவதால், போவதும் வருவதுமாகி ஊசலாடிற்று.

குழந்தைகளின் துயரத்தையும் சோகமானது துக்கத்தையும் நோக்கிய கேரானே இரக்கங்கொண்டு, தான் பற்றிய அல்ஸஸ்டிஸ்ஸின் ஆவியை திரும்பவும் அவள் கூட்டில் அடைத்தானோ என்னும்படியாக அவள் சுவாஸம் விட்டு, கண்விழித்து, கதறும் பாலர்களை ஒருகையால் அணைத்து மார்போடு சேர்த்துக்கொண்டு, மற்றொரு கையால் ஆறாய் ஒழுகும் அட்மீடஸ்ஸின் கண்ணீரை விரலால் சுண்டி எறிந்து,"என் அன்பின் செல்வங்களே! நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? உங்களை உங்கள் அப்பா ரக்ஷிப்பார்; என் கணவரே! நான் போகிறேன்; என் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுகிறீரா? பரதேசியாகிய அவைகளை கைவிட்டு

விடாதீர்? ஒருதாய்க்குக் கொடுத்துவைக்கவில்லை அவை கள். அவற்றின் தலையில் எழுத்து அப்படி; நாதா! ஒரு வரன் வேண்டுகிறேன்; தருவீரா? நீர் மறு விவாஹம் செய்து கொள்வீரோ? அது செய்யாதீர்? சக்களத்தி மக்களின்மீது ஒருத்திக்கு அன்புண்டாகுமா? என் பர தேசிக் குழந்தைகளுக்குத் தாயும் தகப்பனுமாக நீர் இருப்பீரா! ஆ! ஆ! என் குழந்தைகள் என்னசெய்யும்! மலங்கமலங்க விழித்துக்கொண்டு, குளிர்ந்தார்முகம் பார்த்துக் கோபித்தார் வாய்பார்த்துத் திண்டாடுமே! என் இரு கண்மணிகளே! உங்களைவிட்டு எப்படி நான் பிரிவேன்? உங்கள் முகமறிந்து, ஜாடையறிந்து இனி யார் செய்யப் போகிறார்கள். பையா! உனக்காவது விசாரமில்லை. நீ புருஷன்; உன்னைப் பள்ளியில் வைத்து வித்தைகளைக் கற் பித்துச் சூரனையும் தீரனையும் ஆக்கி விடுவார் உன் பிதா; இவளுக்கு யார் இருக்கிறார்? என் செல்வக்குட்டீ! அம்மா உனக்கு யார் மையிடுவார்? பொட்டிடுவார்? உன் கலி யாணத்தின்போது உனக்கு யார் அலங்காரம் செய்வார்? யார் செய்தால்தான் என்ன? நான் செய்வதுபோல இரு க்குமோ? நீ மலங்கமலங்க விழித்துக்கொண்டு, கண்ணீர் விடுவையே! அதை நினைக்க என்மனம் பிளக்கின்றதே! நாதா! இவளிடம் நீர் இருமடங்கு அன்பு செய்வீரா? ஐயோ! இவள் தன் நெஞ்சுக் குறையை யாருடன் சொல்லி ஆற்றுவாள்? மனஸோடு வைத்துக்கொண்டுதானே மறுகுவாள். இவளுக்குப் புருஷனும் குணவானாக அமை யாது போனால், தாயில்லாப் பெண் என்ன செய்யும்? ஆ! ஆ! ஆ! ஆ! நான் ஸஹியேன்! ஸஹியேன்! ஸஹியேன்!" என்று புலம்பிவிட்டு, களைத்துக் கண் மூடிக்கொண்டாள்.

அத்தியாயம் 13

இந்தத் தடவை கோரான் இரங்கவில்லைபோலும்! ஏனெனில் அல்ஸஸ்டிஸ்ஸின் அடியும் குளிர்ந்தது, உடலும் விறைத்தது, மூச்சுற்றும் அடங்கிற்று. எல்லாரும் பக்கத்தில் வந்து அழத் தொடங்கினர்.

அட்மீடஸ் மரத்துப்போய் விட்டானே யல்லாமல், அவன் கண்ணிலிருந்து ஒரு திவலை கூட நீர் ஒழுகவில்லை உடம்பில் ஓர் உறுப்பும் அசையவில்லை. இமைகூடக் கொட்டவில்லை. கண் பிணத்தைப் பார்த்தபடி இருந்தது. இப்படி ஒரு முகூர்த்தநேரம் இருந்த பிறகு, அவன் மெல்ல எழுந்து, "ஊர் முழுதும் ராணி இறந்துவிட்டாள் என்று பறையறைமின்" என்று வள்ளுவர்க்கு உத்தரவு செய்தான். அவர்கள் பறை அறைவித்து மீண்டனர். அல்ஸஸ்டிஸ்ஸின் பிணம் கோலம்செய்யப் பெற்றது. அதைப் புதைக்க எடுத்துப்போக ஸித்தராய் நகரத்து ஜனங்கள் பலர் வந்து கூடினர்.

அட்மீடஸ் அப் பிணத்தின் பக்கத்தில் நிற்க ஸஹியாமல், அரண்மனையின் தலைவாயிலில் ஒரு கல்லின்மீது உட்கார்ந்து, கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். அத் தருணத்தில், "ஹே! ஹே! அட்மீடஸ்!" என்று அழைக்கும் ஒரு பழகின குரல் அவன் காதில் விழ, அவன் மெல்லத் தலை நிமிர்ந்து பார்த்தான். அப்போது ஹெர்க்யுலீஸைக் கண்டான். ஹெர்க்யுலீஸ் அவனது பழையநாளைத்தோழன். அவனும் இவனும் ஷிரானிடத்தில் கலைகற்றபோது, அந்யோந்யமாகப் பழகினவர்கள்.

இளமைப் பருவத்துத் தோழனைக் கண்டதனாலோ, அன்றி அத் தோழனால் தனக்கு நற்காலம் வரப்போகிற

தனுலோ அட்மீடஸ் தன்னை அறியாத ஆனந்த பரவசனுகி, "வா! வா! ஹெர்க்யுலீஸ்! வெகுநாளாய்க் காணுமே! நீ முன்போலவா இருக்கிருய்? ஏழை எளியன் ஒரு தோழன் இருக்கிருனே என்று நினைப்பதே இல்லை. எல்லாம் காலன் செய்யும் கோலம்" என்று சொல்லிக்கொண்டே எதிர் சென்று, அவனைக் கட்டி அணைத்துக்கொண்டான்.

என்ன தான் அட்மீடஸ் தன் அகத்திலுள்ள துக்கத்தை மறைத்துக் கொண்டாலும், அவன் முகம் அத்துக்கத்தைக் காட்டி விட்டது. கண்ட ஹெர்க்யுலீஸ் உள்ளே கேட்கும் அழு குரலையும் கவனித்து, "என்ன தோழா! உன் வீட்டில்? ஏதோ சாவுபோலத் தோன்றுகிறதே!" என்ருன். அட்மீடஸ், "ஆமாம்! ஆனல் அதைப்பற்றி விசேஷம் ஒன்றுமில்லை. இங்கு எங்களுக்கு இனியாளாயிருந்த ஒரு ஸ்த்ரீ இறந்து போய்விட்டாள். அது கிடக்கிறது; நீ நெடு வழி நடந்து இளைத்து வந்திருக்கிருய். வா போஜன சாலைக்கு; ஸ்நாநம் பண்ணு; சாப்பாடு எல்லாம் வித்தமாக இருக்கிறது. நீ சாப்பிடு; நான் மயானத்துக்குப் பிணத்தோடு போய், அடக்கம் செய்துவிட்டு வருகிறேன்" என்று, அவனைக் கையைப் பிடித்து, வேறு வழியாக அழைத்துக் கொண்டு, போஜன மண்டபம் சென்று, பரிசாரகருக்குக் கண் ஜாடை காட்டினன். அவர்கள் அக்குறிப்பை அறிந்துகொண்டு, ஹெர்க்யுலீஸை மஞ்சன சாலைக்கு அழைத்துச் சென்ருர்கள்.

அட்மீடஸ் அங்கிருந்து நழுவி, பிணமிருந்த மண்டபம் வந்து, ஆங்குச் செய்ய வேண்டிய கடைசிச் சடங்குகளை செய்து விட்டு, அதை எடுப்பித்துக் கொண்டு, எல்லா ஜனங்களும் புடைசூழப் பிரேத பூமியை அடைந்தான். ஆங்கு ஸமாதியினடியில் பிணத்தைப் பாடையோடு வைப்பித்து,

"ஹே! உத்தமீ! 'அடிசிற்கு இனியாளே! அன்புடையாளே! படிசொல் கடவாத பாவாய்!' பெலியஸ் பெற்ற விலை சால்மணியே! நீ போகின்றையே! இனி நான்என்று ஸுகம் பெறுவேன்? ஓ! யமபடனே ஓ! கேரானே! இவளைக் காட்டிலும் உத்தம ஸ்த்ரீயை நீ என்றைக்காயினும் அழைத்துப் போயிருக்கின்றையோ! உனது யஜமானனாகிய ஹேடீஸின் உலகில் என் நாயகியினும் சிறந்தாள் ஒருத்தி அடிவைத்திருக்கின்றனளோ? ஹே! என் நாயகீ! உன் புகழ் உலகுள்ளளவும் நிலை நிற்குமே? பாணரும் கூத்தரும் கவிஞரும் உன் பெயரைப் புனைந்து பாடியாடி இன்புறுவரே? வழியோடு செல்வார் உன்னை அடக்கம் செய்திருக்கும் இந்த ஸமாதியைக் கும்பிட்டு, 'உத்தமீ! உன்னைப்போல எனது குமாரிகள் புகழ் பெறக் கடவர்' என்று வேண்டுவரே. ஹே! ஸமாதியே! நீயே பாக்யம் பெற்றனை! நான் தௌர்ப்பாக்ய முடையேன்! உத்தம ஸ்திரீகளுக்கெல்லாம் திலகம்போன்றாளை நீ உன் கர்ப்பத்தில் வைத்திருக்கப் போகிறாய்! கடவுள் அவளை எனக்குக் கொடுத்தும், நான் தௌர்ப்பாக்யத்தால் இத் தங்கமணியைத் தவறவிட்டு நிற்கின்றேன்! ஹா! ஹா! பாக்யவதீ! உன் புகழே புகழ்! உன் வாழ்வே வாழ்வு! உன் முடிவே முடிவு! நீ எங்கிருந்தாலும் கண்டகனாகிய என்னை மாத்திரம் நினைத்திரு. எனக்கும் ஓர் இடம் தேடிவை; நான் அதிக நாள் இங்குத் தரிக்க மாட்டேன்; போகிறையா, போகிறையா! போ, போ" என்று சொல்லி, குழியில் இட்டுவிட்டு, குனிந்த தலையனாய், அரண்மனை நோக்கித் திரும்பினான்.

அத்தியாயம் 14

மஞ்சனசாலையில் பிரவேசித்த ஹெர்க்யுலீஸ் பரிமளங் கமழும் நீரில் ஸ்நானம்செய்து, நல்ல வஸ்திரம் தரித்து, பூஜைமுடித்துப் போஜனத்துக்கு உட்கார்ந்தான். அவன் தனது பெரும்பலத்துக் கேற்ப மிகுந்த உணவுகொள்ளு பவனாதலாலும், நெடுந்தூர ப்ரயாணத்தால் களைத்தவனாத லாலும், மடையர்கள் அதிசயிக்கும்படி ஏராளமான உணவு கொண்டான்., அன்ன வகைகள் மிக்க ருசிகரமா யும் புஷ்டியைத் தரத்தக்கனவாயு மிருந்தமையால், அவன் ஆசையோடும் உத்ஸாஹத்தோடும், பாட்டு கேலிகளோடும் உண்டுவர, ஆங்கிருந்த மடையர்களில் கிழவனாகிய ஒரு வன், "ஏ பலிஷ்டனே! நீ எனது யஜமானனுக்கு மிக்க நெருங்கின நண்பனாகத் தோன்றுகிறாய்! அவர் தழலில் இட்ட புழுப்போலத் துடிக்கையில், நீ இப்படிப் பாட்டும் கூத்துமாக உத்ஸவம் கொண்டாடுவது அழகோ" என்றான்.

ஹெர்க்யுலீஸ், "ஏன்? அட்மீடஸ்ஸுக்கு என்ன துக் கம்? யாரோ ஒருத்தி இறந்துபோய்விட்டாளென்றும் தான் மரியாதைநிமித்தம் சுடலைக்குப் போய் வரவேண் டியிருக்கிறதென்றும்தானே உரைத்தான்? என்னிடம் ஏதோ அவன் மறைத்துக் கூறினான்போல விருக்கிறது? உண்மையில் என்ன விஷயம்? என்ன விஷயம்?" என்றான்.

அவன், "ஆ! ஆ! என் யஜமானன் விருந்தினரை முத லில் உபசரித்துவிட்டுத்தான் மற்றக் காரியத்தைப் பார்ப் பர்; அப்படியே இப்பொழுதும்—தனது ஆருயிர்க் காதலி மரித்திருக்கையிலும்—தமது வழக்கத்தை மாற்றவில்லை. ஆ! ஆ! என் யஜமானியை எப்பொழுது காண்பேன்? இனி என்ன இருக்கிறது உலகில்?" என்றான்.

கேட்ட ஹெர்க்யுலீஸ் திடுக்கிட்டுப் போய் ஒன்றுஞ் சொல்ல மாட்டாமல், "ஹா! அப்படியா? அல்ஸஸ்டிஸ்ஸைப் புதைக்கவா அட்மீடஸ் போயிருக்கிறான்? அவள் என்னவா இறந்தாள்? கூறு அப்பா, கூறு! ஹா! ஹா! அந்த உத்தமியா? அந்த ஸ்திரீ ரத்தினமா?" என்றான்.

மடையன் நடந்த எல்லாம் கூறக்கேட்டு, ஹெர்க்யுலீஸ், "இங்கு இருந்து சுடலை எவ்வளவு தூரமிருக்கும்?" என்றான். "ஒரு காததூரம் இருக்கும்" எனவே, "அதற்குக் குறுக்கு வழி ஒன்று மில்லையோ?" என்றான்.

மடையன், "இப்படி இந்தத் தோட்டத்தின் வழியே போனால், அதில் பாதிதூரந்தா னிருக்கும்" என்றான்.

ஹெர்க்யுலீஸ், "எழுந்திரு, எழுந்திரு! வா, வா! எனக்கு வழிகாட்டு; அந்தக் கொடிய யமன், பிரேதபலியைக் கொள்ளச் சமாதியண்டை வருவானன்றோ? நான் அவனுக்காகப் பதிவிருந்து, அவனை உளையக்குத்தி, வாய்வழி குருதி சோரப் புடைப்பேன்; எவ்வாறு அல்ஸஸ்டிஸ்ஸின் உயிரை அவன் என்னிடம் கொடாதுபோவான்? பார்க்கின்றேன்; ஹேடீஸுக்கே போகவேண்டியிருந்தாலும் மற்றொருமுறைபோய், அவ்வுத்தமியின் உயிரைக் கொண்டுதான் வருவேன்; அது செய்யாமல் திரும்பமாட்டேன்; இந்தச்சாவு உலகம் தாங்குமா?" என்று பொங்கி எழுந்து, சோலைக்குள் பாய்ந்தான். மடையன் சிறிதுதூரம் வழிகாட்ட, மகா வீரன் சீக்கிரமாகப் பிரேத பூமியை நண்ணினான்.

அத்தியாயம் 15

ப்ரேத பூமியினின்றும் திரும்பிய அட்மீடஸ் ஆற்ருெணுத் துயரத்துடன், அரண்மனை நுழைந்து, மூஞ்சியில் வஸ்திரத்தைப் போட்டு மூடிக்கொண்டு,"ஸ்திரீ நாயகமே! என் குலமணிவிளக்கே! என்கண்ணெளியே! நீ போய் விட்டையே! இனி எனக்கு என்ன உளது! கற்புடைய மனையாளை இழந்த புருஷன் ஜீவித்திருந்து பயனென்னே? மனைவியில்லாத இல்லம் சவக்காடே ஒழிய மனையாமோ? ஆ! என் செல்வங்களே! உங்கள் அருமை மாதாவை நான் கொன்றுவிட்டேன்! நீங்கள் இனி யாரை அம்மாவென்றழைப்பீர்கள்? உங்களைக் காணும்தோறும் என் நெஞ்சு பிளக்கின்றதென் என்கின்றதே! என்னசெய்வேன், என்னசெய்வேன்!'' என்று ஒரு கற்பாறையின்மீது உட்கார்ந்து கதறினன். அவன் குழந்தைகளும் அவன் இரு தோள்மீதும் சாய்ந்துகொண்டு, கண்ணீர் சொரிந்து அழுதன

சூரியனும் அழுதான் போலக் கண் சிவந்தும்; அட்மீடஸ்ஸைப்போல கரிய வஸ்திரத்தால் முகம் மூடிக் கொண்டான் போல இருட்படாத்தால் முகம் மூடிக் கொண்டும் மறைந்தான். ஊரிலுள்ள தக்க மனுஷ்யர்கள் பலரும் அருகில் வந்து, அட்மீடஸ்ஸைத் தேற்றினர்கள். யார் என்ன சொன்னுலும் அவன் ஒன்றையும காதில் ஏற்றுக்கொள்ள வில்லை. ஒன்றையும அவன் சிந்தியாது துக்கத்தில் மூழ்கி யிருந்தான்.

இப்படியிருக்க, இரவு யாமமுண்டு; ஒரு பலாட்டியனது சொர சொரப்பான கை அவன தோளில் விழுந்தது. அவன் சட்டெனத் தலை நிமிர்ந்து பார்க்க, ஹெர்க்

யுலீஸ்ஸைக் கண்டு, "ஹா! என் தோழா! உன்னை நான் மறந்தே போனேனே! நீ சாப்பாடு செய்து கொண்டாயா? பரிசாரகர்கள் உன் இஷ்டம்போல நடந்து கொண்டார்களா? பாபியாகிய நான் உன்னோடு இருந்து உண்டு மகிழக் கொடுத்து வைக்கவில்லை" என்றான்.

ஹெர்க்யுலீஸ், "ஆ! ஆ! நீ இன்னமும் என்னை அந்நியனாகவே நினைத்து விட்டாய்? நான் ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை போலும? உன் நாட்டில் தோட்டி முதல் தொன்மதி அமைச்சர் ஈறாக உனக்கு வந்த துக்கத்தை அறிந்து, உடன் துன்புற, உனது நெருங்கிய நட்பினனாகிய நான் மட்டும் உண்டு மகிழும்படி செய்தனுப்பிவிட்டாய். இதுதான் ஸ்நேக லக்ஷணம் போலும்? உலகத்தில் ஸாதக துக்கங்களை மித்திரர்களுடனும் பந்துக்களுடனும்கூடி அநுபவிப்பார்கள். இப்படி எங்கேயாயினும் உண்டா? ஆனால் நீ என்னை இஷ்டமித்திரன் என்று எண்ணவில்லைபோலிருக்கிறது" என்றான்.

கேட்ட அட்மீடஸ், "ஆ! ஆ! அப்படிச் சொல்லாதே நண்பா! நான் மானத்தோடு எப்படி வெளியிடுவேன் நான் செய்த காரியத்தை? நீ என்னை வெறுத்துக் காறி உமிழமாட்டாயா?" என்றான்.

ஹெர்க்யுலீஸ், "நடந்தது நடந்தாய் விட்டது. அது போகட்டும். உன் அரண்மனையில் நான் நன்றாய் உண்டேன்; உன் தோட்டம் வழியே சென்றேன்; அங்கு ஒரு கொடியன் ஓர் உத்தம ஸ்திரீயை பலவந்தமாய் இழுத்துப் போனான். நான் அவனோடு போரிட்டேன். ஆ! ஆ! இப்படிப்பட்ட சண்டையை நான் என்றும் போட்டதில்லை. இப்படிப்பட்ட பலிஷ்டனை நான் என்றும் எதிர்த்ததில்லை! ஆயினும் கடைசியில் ஜயித்தேன். அம்மங்கை என்பின்னாலேயே வந்து விட்டாள்.

"ஆனால் நான் இங்கு மறுபடியும் உன்னண்டை வந்த காரணம் என்னவென்பாயோ; சொல்கிறேன், கேள்; நான் பூஸஞ்சாரம் செய்துகொண்டு போகிறேன். அந்தப் பெண்ணைக் கூட அழைத்துப் போகக் கூடவில்லை. திரும்புகாலில் ஒருவேளை வந்து அழைத்துப்போகலாம் அதுவரையில் நீ அவளை வைத்து ரக்ஷிக்கவேண்டியது; அவள் உத்தம குலத்து மங்கை; ஸ்திரீகளின் திலகம். ஒருவேளை நான் வாராதுபோனாலோ, நீ அவளை மனைவியாக வைத்துக்கொள்; இந்த உதவி செய்தையானால், நான் உன்னை என்றும் மறவேன்'' என்று, ஒரு ஸ்திரீயைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

அவள் முகம் முழுவதும் மூடுண்டு, கண்களுக்கு மாத்திரம் பார்க்கத் தொளையிருந்தது. அவளை ஸ்தூலமாகப் பார்த்த உடனேயே அட்மீடஸ், "ஓ! ஓ! இவளை நான் இங்கு வைத்துக்கொள்ள மாட்டேன்! வைத்துக்கொள்ள மாட்டேன்! இவள் என் காதலியேபோல உயரமும் பருமனுமாக இருக்கிறாள்! இவளைப் பார்க்கும்போதெல்லாம்; என்னருங்கிளியின் ஞாபகம் வந்து வருத்தும். ஓ! ஹெர்க்யுலீஸ், ஹெர்க்யுலீஸ்! இந்தக் காரியத்தை மட்டும் என்னைச் செய்யச் சொல்லாதே! ஊர்ஜனங்கள் வெறுமையிரார். உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடமுடியுமா?' தன் உயிரைக்கொடுத்துக் கணவனுயிரை ரக்ஷித்த மனைவியை இவன் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டானே என்று தூற்றுமே உலகம்! எங்கேயாவது இவளை அழைத்துப்போ'' என்றான்.

ஹெர்க்யுலீஸ் கோபித்தவன்போல, "அட்மீடஸ்! நீ இப்பொழுது மாறிவிட்டாய்; பழைமை யாவும் மறந்துவிட்டாய். முதலில் உன் துக்கத்தைச் சொல்லாது மறைத்தாய். இப்பொழுது நான் கொண்டுவந்த இந்த உத்

தமியை வேண்டாமென்கிறாய். நீ என்னிடம் நட்புடைமை பாராட்டவில்லை என்று நான் நினைக்கவேண்டியிருக்கிறது. ஆதரவற்று வந்த ஒரு ஸ்திரீயை ரக்ஷிக்கமாட்டேனென்று சொல்லுகிறையே, இதுதானே ஆண்மை; நான் போகிறேன்'' என்று ஓர் அடி எடுத்து வைத்தான்.

உடனே அட்மீடஸ் வ்யஸனமுற்று எழுந்து, ஹெர்க்யுலீஸின் கையைப் பிடித்துக்கொண்டு, ''நண்பா! நண்பா! கோபித்துக் கொள்ளாதே! என் தலைவிதி எப்படியோ அப்படி நடக்கிறது. நான் என் உயிர் அனையாளைக் கொலை செய்து, பாதாளத்துக்கு அனுப்பினேனே, அதற்கு உலகம் என்னை எத்தனையோ தூஷிக்கப்போகிறது. ஸ்நேகிதனுக்காக ஒரு காரியம் செய்த என்னை என்ன இகழ்ந்து பேசினாலும் நான் ஸஹிப்பேன்; நீ அவளை உள்ளே அழைத்துப்போய், வேண்டியதைச் செய்'' என்றான்.

ஹெர்க்யுலீஸ், ''இவள் எத்தன்மையானவள் தெரியுமா? கேவலம் வேலைக்காரர்கள் வசம் ஒப்படைக்கும்படியான ஸாமான்ய மங்கையா? உன் வசந்தான் ஒப்படைப்பேன்; இவள் கையைப் பிடி'' என்று, வலுவில் அவன் கையைப்பிடித்து இழுத்து, அம் மங்கையின் கைமேல் வைத்துப் பிடித்துக்கொள்ளச் சொன்னான்.

யமனையே உளையக் குத்திய ஹெர்க்யுலீஸ் பலவந்தப் படுத்தும்போது, திமிறுவது யாரால் கூடும்? அட்மீடஸ் வேறு ஒன்றும் செய்வதற்கு இயலாது, அவள் கையைப் பற்றிக்கொண்டான்.

கொள்ளவே அவன் உடம்பில் எங்கும் மயிர்க்கூச் செறிய, தேள் கொட்டியவன்போலக் கையை உள்ளே வாங்கிக்கொண்டு, விழித்துப் பார்த்தான். இதற்குள் ஹெர்க்யுலீஸும் அவளது முக்காட்டைத் திறந்து விட்

டான். விடவே, "ஆ! ஆ! இஃதென்ன? இஃதென்ன? நீ என்ன அப்பா என்னிடம் கொண்டுவந்தாய்? இது என்ன? என் காதலியின் ஆவேசமா? அன்றி மாயா அல்ஸஸ்டிஸ்ஸா?" என்று துணுக்குற்றான்.

ஹெர்க்யுலீஸ் சிரித்துக்கொண்டு, "இம் மாய ஆவேசத்துக்காகத்தான் நான் யமனோடு இன்று மல்யுத்தம் செய்ய நேர்ந்தது? கிடக்கிறது இவளை நீ அன்பாய் வைத்து ரக்ஷிப்பையா?" என்றான்..

உடனே அட்மீடஸ் அவன் காலில் விழுந்து, "நண்பா! நண்பா! இத்தனை பெரிய பாக்யத்துக்கு நான் அருஹனோ? நான் மனம்வெடித்து மண்ணோடு மண்ணாய் நசிக்க வேண்டியவனாயினனே!" என்றான்.

ஹெர்க்யுலீஸ், "நீ அருஹனோ அல்லனோ, என்பதை நான் விசாரிக்க இல்லை. அது என்காரியமு மன்று. என் கவலையுமில்லை. இந்த உத்தமி! இந்த ஸௌந்தரி! இந்த இளம்பெண்! இறக்கின்றதா என்பதுதான் நான் எண்ணியது. சண்டைபோட்டாலும் போட்டேன்; தக்க எதிரியோடுதான் போட்டேன். அவன் குத்திய குத்து இன்னமும் நோகின்றது. அது போகட்டும்; இனி இவளைக் கைவிடாது ரக்ஷித்துவா" என்றான்.

விழுந்த அவன் எழுந்து, அல்ஸஸ்டிஸ்ஸின் முன் வந்து, "ஆ! உத்தமீ! நீசரில் நீசனான என்னை அன்புடன் நோக்குவையோ? ஐயோ! வெட்கமில்லாமல் கேட்கிறேனே! நானும் புருஷன்தானோ! சாவு என்றதும், ஸ்திரீகளிலும் பயங்கொள்ளி ஸ்திரீபோல நான் நடுங்கிவிட, நீ புருஷரிலும் ஆண்சிங்கம்போல அச்சாவுக்குத் துணிந்தையே! நான் உனக்குக் கணவனாக இருக்க அருஹனோ?" என்றான்.

அவள் குளிர்ந்த முகத்துடன் அவனை அணுகிக் கட்டிக்கொண்டு, "என் நாதா! நாதா! நான் மீட்டும் வந்துவிட்டேன்; இனி இருவருக்கும் பிரிவென்பதே இல்லை. சாகும்போதும் இருவரும் சேர்ந்தே மரிக்கலாம்" என்றாள்.

அவளைக் கண்டவுடன் அவளது இரண்டு குழந்தைகளும் ஓடிவந்து கட்டிக்கொண்டு, "அம்மா! நீ இத்தனை சீக்கிரம் வந்துவிட்டாயே! அப்பா தேம்பித் தேம்பி அழுதாரே! எங்களைக் கட்டிக்கொண்டு, புலம்பினாரே!" என்றன.

அவள் அவைகளைக் கட்டிக்கொண்டு, "என் செல்வங்களே! இந்த மாமாவை வணங்குங்கள்; ஒரு துஷ்டன் என்னைத் தூக்கிக்கொண்டு போனான்; இவர் அவனை அடித்துத் துரத்திவிட்டு, என்னை அழைத்துவந்தார்" என்றாள்.

அவைகள் வந்து ஹெர்க்யுலீஸைப் பணிந்து எழுந்தன. ஹெர்க்யுலீஸும் அவ்விரண்டையும் வாரி எடுத்து மார்போடணைத்து, "உங்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக" என்று வாழ்த்தினான்.

பிறகு அரண்மனையில் எல்லாப் பிணக்கோலமும் ...காலமாக மாறிற்று. ஊர் ஜனங்கள் யாவரும் வந்து கூடி, அல்ஸஸ்டிஸ்ஸை வாழ்த்தினார்கள். பிறகு அல்ஸஸ்டிஸ் அட்மீடஸர்களின வாழ்க்கை ஒப்புயர்வற்றது என்று கூறவும் வேண்டுமோ?

புதிய பதிப்புக்கள்

	ரூ.	அ.	பை.
பிரிதிவிராஜன்	1	0	0
கீசகன்	0	12	0
ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி	0	12	0
ஐவன் ஹோ	0	12	0
ஏகம் பஞ்ச நதம்	0	10	0
புதியவனத்துக் குழந்தைகள்	0	10	0
விக்டோரியா மஹாராணி சரித்திரம்	0	6	0
ஏழாம் எட்வர்ட் மன்னன்	0	6	0
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்	0	6	0
பிரிட்டிஷ் துரைத்தன நற்பயன்	0	6	0
பஞ்சதந்திரம்	0	5	0
விவேகசந்திரிகை	0	4	0
தசகுமார சரிதம் (1-ஆம் பாகம்)	0	6	0
ஸௌக்ஷ்மதரிசி	0	4	0
கதைக்கொத்து மலர்-1	0	2	0
கதைக்கொத்து மலர்-2	0	3	0
கதைக்கொத்து மலர்-3	0	3	0
கதைக்கொத்து மலர்-4	0	5	0
கதைக்கொத்து மலர்-5	0	8	0

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
35, சின்னதம்பித் தெருவு,
சென்னை.

Caxton Press, Madras, E.